ISSN 1888-1246

# அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...

விழி: 05 ஏப்பிரல் 2009 பார்வை: 56 விலை: ரூபா 50.00



- ஆசிரியர் தொழில்சார் நடத்தைக் கோலங்கள்
- தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையும் சிறார்களின் உள நலனும்
- தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் புள்ளிகள்
- தமிழ் இலக்கணமும் ஆசிரியர், மாணவரது தற்போதைய மனப்பாங்கும்
- இலத்தீன் அமெரிக்காவும் விடுதலை உளவியலும்


★ ஆசிரியர்களுக்கான விடுமுறை...

★ சிறுகதை: "தாரணி ஓர் ஆச்சரியக் குறி"

சபா.ஜெயராசா · ஆர்.லோகேஸ்வரன் · மு.நரேந்திரகுமார் · மு.சச்சிதானந்தம்
ந.பார்த்திபன் · பா.தனபாலன் · நெடுந்தீவு மகேஷ்

# வெளிவந்துவிட்டது

# கூடம் - 11




**விலை: 100.00**

*தொடர்பு:*
*3, டொரிங்டன் அவனியூ*
*கொழும்பு 07*
தொலைபேசி: 011 250 6272
மின்னஞ்சல்: *koodam@viluthu.org*

ஆசிரியர் : தெ. மதுசூதனன்

ஆசிரியர் குழு : சாந்தி சச்சிதானந்தம்
ச. பாஸ்கரன்
காசுபதி நடராஜா

ஆலோசகர் குழு : பேரா.கா.சிவத்தம்பி
(தகைசார் ஓய்வு நிலைப் பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
கலாநிதி சபா.ஜெயராசா
(முன்னாள் பேராசிரியர் கல்வித்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
பேரா.சோ.சந்திரசேகரன்
(பீடாதிபதி, கல்விப்பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்)
கலாநிதி ஹுசைன் இஸ்மாயில்
(துணைவேந்தர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்)
கலாநிதி ப.கா.பக்கீர் ஜஃபார்
(கல்விப்பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்)
கலாநிதி மா.கருணாநிதி
(கல்விப்பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்)
பேராசிரியர் மா.செல்வராஜா
(கல்வித்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்)
கலாநிதி உ.நவரட்ணம்
(பணிப்பாளர், சமூகக்கற்கை, தேசிய கல்வி நிறுவகம்)
தை. தனராஜ்
(முதுநிலை விரிவுரையாளர், கல்விப்பீடம் இலங்கை திறந்த பல்கலைக்கழகம்)
மா.சின்னத்தம்பி
(முதுநிலை விரிவுரையாளர், கல்வித்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

இதழ் வடிவமைப்பு : செல்வி. த.மைதிலி

அச்சு : சேமமடு பதிப்பகம்
தொலைபேசி: 011-2472362

*வெளியீடு மற்றும் தொடர்புகட்கு:*
: AHAVILI
3, Torrington Avenue, Colombo - 07
Tel: 011-2506272
E-mail : ahavili2004@gmail.com
ahavili2004@yahoo.com

ISSN 1888 - 1246

அகவிழி

மாத இதழ்

# உள்ளே...


- ❑ *ஆசிரியர் தொழில்சார் நடத்தைக் கோல..* 03
- ❑ *ஆரம்பக் கல்வி ஆசிரியரும் அத்தியா...* 07
- ❑ *விசேட கல்வி - ஓர் அறிமுகம்* 10
- ❑ *இலத்தீன் அமெரிக்காவும் விடுதலை...* 13
- ❑ *தாரணி ஓர் ஆச்சரியக்குறி* 16
- ❑ *தமிழ் இலக்கணமும் ஆசிரியர், மாணவ...* 22
- ❑ *ஆசிரியர்களுக்கான விடுமுறை சில...* 27
- ❑ *தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையும்...* 34
- ❑ *தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் .....* 36
- ❑ *வாசகர் பக்கம்* 39


அகவிழியில் இடம் பெறும் கட்டுரைகளுக்கு அதன் ஆசிரியர்களே பொறுப்பு. கட்டுரைகளில் காணப்படும் கருத்துக்கள் "அகவிழி"யின் கருத்துக்கள் அல்ல.

# ஆசிரியரிடமிருந்து...

இன்று தமிழ்க் கல்விச் சூழலில் ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள், செயலமர்வுகள், பயிற்சிகள் பலவாறு நடைபெற்று வருகின்றன. சமீபத்தில் குறிப்பிட்ட தமிழ் கல்வி வலயம் ஒன்றில் நடைபெற்ற பல நிகழ்ச்சிகள் - கூட்டங்கள் - செயலமர்வுகள் ஆசிரியர் கல்வியில் எத்தகு பண்புசார் விருத்திக் கோலங்களை ஏற்படுத்தும் என்பது குறித்து ஆழமாகச் சிந்திக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதனை பல்வேறு ஆசிரியர்களும் நமக்குச் சுட்டிக்காட்டினார்கள்.

சம காலத்தில் இலங்கையின் கல்வி தொடர்பாக வெளிவரும் அறிக்கைகள், ஆய்வுகள் கல்வியின் தரமேம்பாட்டுக்கான அணுகுமுறைகளையும் உபாயங்களையும் முன் வைப்பதில் அதிகம் கவனம் செலுத்துகின்றன.

கல்வியின்தரம், ஆசிரியர்தரம், முகாமைத்துவத்தரம்... என தரவிருத்தியின் அடிப்படையிலேயே அனைத்து விடயங்களும் ஒருங்கிணைத்து நோக்கப்படுகின்றன. பாட ஏற்பாட்டுச் சீர்திருத்தங்கள் கூட தரவிருத்தியை கருத்திற் கொண்டே முன்மொழியப்படுகின்றன. இதனால் புதிய மாறுதல்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தும் நோக்கில் ஆசிரியரின் தரம் மேம்பாடு முக்கியமானதாகின்றது. இதனை வலியுறுத்தும் 'ஆசிரியர் கல்வியும், ஆசிரியர் பயிற்சியும்' சிறப்பு மிக்கதாக மாறுகின்றன. இத்தகைய தர மேம்பாட்டு முயற்சியிலே பல்வேறு நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன. குறிப்பாக கல்வித் திணைக்களமும் மற்றும் சில அரசுசார்பற்ற நிறுவனங்களும் இந்த பயிற்சி வழங்கும் திட்டங்களில் அதிமுனைப்புடன் ஈடுபட்டு வருகின்றன.

தற்போது பரவலாக நடைபெற்ற, நடைபெற்று வரும் பயிற்சிச் செயல்திட்டங்கள் முழுமையான பலாபலங்களைக் கொடுத்துள்ளனவா? ஆசிரியர்களது தரமேம்பாட்டுக்கான அறிவுக் கையளிப்பை வழங்கும் செயல்முறை முழுமையாக முன்னெடுக்கப்படுகின்றதா? இதற்கான புதிய அணுகுமுறைகள், புதிய நுட்பங்கள் கையாளப்படுகின்றனவா? போன்ற கேள்விகள் எழுகின்றன. இவற்றுக்கான பதில்களும் நமக்குத் திருப்திகரமாக இல்லை.

இன்று குறிப்பிட்ட செயல்திட்டங்களிற்கு, பயிற்சிகளிற்கு ஒதுக்கப்பட்ட நிதியை எப்படி அந்த குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் முடிப்பது என்னும் நோக்கமே இங்கு தீர்மானகரமான பண்பாக தொழிற்படுகின்றது. மேலும் இங்கு ஆசிரியர் சமூகம் வலுக்கட்டாயத்தின் பெயரில் பயிற்சிகளுக்கு வரவழைக்கப்பட்டு யாவும் திணிக்கப்படுகின்றன. இதனால் தரமற்ற காலாவதியான பயிற்சிகள் தான் வழங்கப்படுகின்றன.

பயனாளிகளின் விருப்பம், தேவை மற்றும் புத்தாக்கமான அறிவுக் கையளிப்பு போன்ற விடயங்கள் கவனத்தில் எடுக்கப்படுவதாக இல்லை. இதனால் சோர்வும் விரக்தியும் தான் மிஞ்சுகின்றன.

ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் கல்வியும் பயிற்சியும் வகுப்பறை செயற்பாடுகளின் பொழுது விளைதிறன்களுடன் பயன்படுகின்றதா? என்னும் விடயம் பெரும் கேள்வியாகவே எழுகின்றது. நடைமுறையில் உள்ள ஆசிரியர் கல்வியும் பயிற்சியும் நவீன செல்நெறிகளுடன் பொருந்துவதாக இல்லை. புதிய கல்விச் சீர்திருத்தங்களில் கூறப்பட்ட பாட ஏற்பாட்டு தேவைகளுக்கேற்ப ஒழுங்கமைக்கப்படுவதாக இல்லை. இதனால் நேரவிரயம், வளவிரயம் மட்டுமல்ல மனித வளமும் வீணாகப் பாழடிக்கப்படுகின்றது. இன்னொரு புறம் ஒருசிலர் பயிற்சி வழங்கல், கருத்தரங்கு நடத்துதல் என்னும் சடங்குசார் நிகழ்வுகள் நடந்தேறினால் போதும் என்றே நினைக்கின்றனர். மேலும் உருப்படியான மாற்றங்கள் ஏற்பட வேண்டுமென இவர்கள் நினைக்கவில்லை. இதைவிட இந்த செயற்திட்டங்கள் மூலம் பணஊழல், அதிகார துஷ்பிரயோகம் மற்றும் அறிவுச்சூழல்மாசுபடல் போன்றவையே உருவாகின்றன. இதற்கான சாதக-மான சந்தர்ப்பங்களையே தொடர்ந்து உருவாக்குகின்றன. இதனால் மிகமோசமான அளவிற்கு ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சிகளின் தரமேம்பாடு மேலும் மேலும் தாழ்ந்து செல்கின்றது.

இவற்றை கடந்த ஆறு மாத காலத்துள் பல்வேறு பயிற்சிக் கருத்தரங்குகளில் கலந்து கொண்டவர்களது பண்புசார் விருத்திக் கோலங்களில் ஏற்பட்ட மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு நாம் இதனை புரிந்து கொள்ளலாம். பொதுவாக சலிப்பூட்டலும் விரக்தியும் மனஅழுத்தங்களும்தான் எங்கும் விரவி வருகின்றன. ஆனால் இந்த மாற்றங்கள் பற்றி சம்பந்தப்பட்டவர்கள் பெரிதும் அலட்டிக்கொள்வதாக இல்லை.

இன்று வழங்கப்படும் தொழில்சார் தொடருறு கல்வியும் பயிற்சியும் வகுப்பறைகளிலே மாணவர் மேம்பாடு கருதிப் பயன்படுத்தப்படுவதாக இல்லை. இதனால் வகுப்பறை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளிலும் உடன்பாடான விளைவுகள் ஏற்படுவதாகவும் இல்லை. மாணவரின் அடைவு மட்டங்களிலும் மேம்படு அடைவதாக இல்லை.

அனைத்துக்கும் மேலாக நடைமுறையில் உள்ள பயிற்சிகள் செயலமர்வுகள் ஆசிரியர் தரவிருத்தியில் பன்முகத் தன்மைகளை உருவாக்க தவறிவிடுகின்றன. இந்த எதார்த்த உண்மை சமூகப் பொறுப்புடன் பரிசீலிக்கத் தக்கது. சம்பந்தப்பட்ட பொறுப்பாளர்கள் இது பற்றி ஆழமாக சிந்திப்பது காலத்தின் தேவையாகின்றது.

தெ.மதுசூதனன






**ஆர்.லோகேஸ்வரன்**

விரிவுரையாளர்,
ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி,
பத்தனை.


வாண்மைத்துவம்

*சமூகம்*
*ஆசிரியர்களிடமிருந்து*
*போதித்தல் என்ற பணியைவிட*
*பல கடமைகளையும்,*
*உயரிய சேவைகளையும்*
*எதிர்பார்க்கின்றது.*
*அதற்கமைவாக ஆசிரியர்*
*பணியும் முன்னரைவிட*
*இன்று*
*பல்கி பெருகியுள்ளது.*

# ஆசிரியர் தொழில்சார் நடத்தைக் கோலங்கள்

ஆசிரியர் தொழில் ஒரு உன்னதமான தொழிலாகும். அது சமூகத்தில் அனைவராலும் மதிக்கப்படும் ஒரு தொழிலாகும். ஆசிரியர் என்பதில் 'ஆசு' என்பது குற்றம் 'இரியர்' என்பது களைபவர். குற்றங்களை களைபவர் என்பதே அதன் பொருளாகும். ஆசிரியர்கள் குற்றங்களை களைத்து அறிவூட்டுபவர்களாகும். அவர்கள் சமூகத்தில் வாழ்பவர்களின் கண்களைத் திறந்திடக்கூடிய வல்லமை பெற்றவர்கள். சமூக நிறுவனங்களில் மிகவும் உயர்ந்த இடத்தில் வைக்கப்படும் பாடசாலை என்னும் அமைப்பின் அத்திவார தூண்களாக விளங்குபவர்களும் ஆசிரியர்களே. இதனால் சமூகத்தில் ஆசிரியர் பணியின் அந்தஸ்த்து, அதன் மதிப்பு என்பன மிக உயரியதாகும்.

பண்டைய சமூகத்தில் ஆசிரியர்கள் உயர்ந்த ஸ்தானத்தில் வைக்கப்பட்டதால் அவர்கள் சமூகத்தில் இறைவனாக போற்றப்பட்டனர். அதனாலேயே "எழுத்தறிவித்தவன் இறைவன்" என்கிறது தமிழ் மரபு. இன்றும் ஆசிரியர்கள் சமூக கட்டமைப்பில் உயரியஸ்தானத்தில் வைத்தே போற்றப்படுகின்றனர். தற்போதும் சமூகம் ஆசிரியர்களிடமிருந்து போதித்தல் என்ற பணியைவிட பல கடமைகளையும், உயரிய சேவைகளையும் எதிர்பார்க்கின்றது. அதற்கமைவாக ஆசிரியர் பணியும் முன்னரைவிட இன்று பல்கி பெருகியுள்ளது. அந்த வகையில் ஆசிரியர்கள் கற்றலுக்கு வசதி செய்பவராக, வழிகாட்டியாக, ஆலோசகராக, நெறிப்படுத்துபவராக, முகாமையாளராக என பல பணிகளை பாடசாலையில் மட்டுமன்றி சமூகத்துக்கும் ஆற்ற வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதில் கல்வி தொடர்பாக மட்டுமன்றி ஏனைய சமூக பிரச்சினைகளிலும் ஆசிரியரது வழிகாட்டலையும், ஆலோசனைகளையும் சமூகம் விரும்பி ஏற்கிறது. இதனால் இன்று மாணவர்களின் கற்றல் - கற்பித்தலோடு மட்டுமன்றி சமூக பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டிய பாரிய பணிகளும் அவர்களை சார்ந்துள்ளது.

இவ்வாறாக பல உயரிய சேவையை சமூகத்துக்கு ஆற்றுகின்ற ஆசிரியர் பணியானது மனித விழுமியங்களுள் மகத்துவம் நிறைந்ததாக உள்ளது. அதிலும் தன்னலமற்ற, பயனை எதிர்பாராத இப்பணி மிக மிக மாட்சிமைப்பட்டதாகும். அவ்வகையான மகத்தான பணியை செய்யும் ஆசிரியர்கள் தமது வாழ்வில் நல்ல மனிதப் பண்புகளை கொண்டவர்களாகவும், நல்ல பழக்கவழக்கங்களை கடைப்பிடிப்பவர்களாகவும், நல்ல ஒழுக்க பண்புகளை பின்பற்றுபவர்களாகவும், மனித

விழுமியங்களை உணரச் செய்பவர்களாகவும், ஒழுக்கம் பிறளாதவர்களாகவும் வாழ வேண்டியது மிக அவசியமாகும்.

குறிப்பாக ஏனைய பணிகளில் ஈடுபடும் அலுவலர்களிடம் மேற்படி பண்புகளை எதிர்பார்க்காத சமூகம் ஆசிரியர்களிடம் மேற்குறிப்பிட்ட விஷேட பண்புகளை எதிர்பார்க்கின்றது. இதில் ஏதாவது சிறிய குறைபாடு காணப்பட்டாலும் அது மிகைப்படுத்தப்பட்ட ஆசிரியர் பணிக்கே இழுக்காக விமர்சிக்கப்படுகிறது. அதாவது சமூகத்தில் ஆசிரியர்களுக்கென ஒரு தனிவாழ்க்கை (Private Life) எதிர்பார்க்கப்படுகின்றது. இது தவிர்க்க முடியாத ஒன்றாகும். காரணம் இது நேரடியாக மாணவர்களின் வாழ்க்கையை பாதிக்க செய்யும் என்பதாலாகும்.

விஷேடமாக ஆசிரியர்களுக்கென ஒரு ஒழுக்க கோவையோ நடத்தை முறைகளோ வகுக்கப்படாத போதிலும் தமது தொழில் நடத்தைக்கான நெறிகளை (Professional Cade of Conduct) தாமே உருவாக்கிக் கொண்டுள்ளனர். இது பகுத்தறிவால் செய்யாமல் பழக்கத்தால் செய்யப்பட்டமையாகும். (Teacher do more things through Habit than through Reason) இந் நடத்தை முறைகளானது காலம் காலமாக பின்பற்றப்பட்டு வந்தவையாகும். இவை பிறரால் உருவாக்கப்பட்டு ஆசிரியர் மீது திணிக்கப்பட்டவை அல்ல. தமது நலனுக்காக தாமே உருவாக்கிக் கொண்டவையாகும். இதில் சில தொழில் துறைகளை பொருத்த வரையில் அத்தொழில் துறைக்கு ஏற்ப எவ்வாறான நடத்தை முறைகளை பின்பற்ற வேண்டும் என்று வரையறுத்து கூறப்பட்டுள்ளது.

உதாரணமாக வைத்தியதுறை, சட்டத்துறை ஆனால் ஆசிரியர் தொழிலுக்கான நடத்தை முறைகள் பற்றி விஷேடமாக குறிப்பிடப்படவில்லை. காரணம் இந்நடத்தை முறைகளானது (ஒழுங்கு) குறிப்பிட்ட நபர்களால் தீர்மானிக்கப்பட்டு சேவையில் உள்ள பலரால் பின்பற்றற வேண்டிய ஒரு நடைமுறையல்ல. அது அவர் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பின்பற்ற வேண்டிய நடத்தை முறைகளாகும். இது ஆசிரியர் தொழிலில் ஈடுபடுகின்ற நபர்களால் அவர்களின் சிந்தனை, மனப்பாங்கு என்பவற்றுடன் தொடர்புடையதொன்றாகும்.

இவ்வாறாக ஆசிரியர்கள் தமக்கென ஒழுக்க கோவைகளையும், நடத்தை முறைகளையும் கொண்டிராத போதும் அத்தொழிலில் ஈடுபடுபவர்கள் தமது நலனுக்கேற்ப ஒழுக்க நடத்தைக்கான ஒரு அடிப்படையை உருவாக்கிக் கொள்வது இன்றியமையாததாகும். அதுமட்டுமன்றி அந்நடத்தை முறைக்கேற்ப தமது வாழ்க்கை முறைகளையும் நெறிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். அதனடிப்படையில் பொதுவான கண்ணோட்டத்தில் ஒழுக்கம் என்றால் என்ன? ஆசிரியர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க பண்புகள் யாவை? அவர்கள் தொடர்பாக சமூகம் எவ்வாறு நோக்குகின்றது? என்பவை பற்றியே இங்கு ஆராயப்படுகின்றது.

**ஒழுக்கம் என்றால் என்ன?**

ஒழுக்கம் என்பது ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனதும் நடத்தை, பழக்கவழக்கம், உளவியல் சார் நடத்தை கோலங்கள் அனைத்தையும் உள்ளடக்கியதாகும். இவ் ஒழுக்கம் தொடர்பாக பல கல்வியியலாளர்களும் உளவியலாளர்களும் வெவ்வேறு நோக்கங்களின் அடிப்படையில் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். அவர்களும் டேவிஹியூம், இம்மானுவல் காண்ட், சிக்மன்ட் புரொயிட், ஜூன் பியாஜே, லோரன்ஸ் கோல்பேர்க் போன்றோர் முக்கிய இடம் பெறுகின்றனர். டேவிஹியூம் என்ற கல்வியியலாளரின் கருத்துப்படி "ஒழுக்கம் என்பது ஒரு தனி நபர் தன் நடத்தைக் கோலங்களை தனது சொந்த இலட்சியங்களையும், குறிக்கோள்களையும் அடையும் பொருட்டும், தன்னை சுற்றியுள்ள சமுதாயத்தின் தேவைகள் மட்டும் கட்டுப்பாடுகள் என்பவற்றை நிறைவு செய்யும் வகையிலும் தானாகவே ஒழுங்குபடுத்தி செயற்படுவதை குறிக்கும்" என்கின்றார்.

**விஷேடமாக ஆசிரியர்களுக்கென ஒரு ஒழுக்க கோவையோ நடத்தை முறைகளோ வகுக்கப்படாத போதிலும் தமது தொழில் நடத்தைக்கான நெறிகளை தாமே உருவாக்கிக் கொண்டுள்ளனர். இது பகுத்தறிவால் செய்யாமல் பழக்கத்தால் செய்யப்பட்டமையாகும்.**

அதாவது ஒருவர் தன்னை தானே அகரீதியாகவும், புறரீதியாகவும் சுயகட்டுப்பாடுடன் செயற்படுவதை இது குறிக்கின்றது. எனவே ஒருவர் தன்னை தானே கட்டுப்படுத்திக் கொள்வதின் விளைவாக Self Control விளைவாக எழும் நன்னடத்தையே ஒழுக்கம் என்று ஒருவகையில் கூறலாம். பொதுவாக ஒருவர் உலகிலே தனித்து வாழ்வதற்கான திறனை பெற்றிருந்தால் மட்டும் போதுமானதன்று. சமூகத்தில் ஏனையவர்களுடனும் கூடிவாழத் தகுந்த இயல்புகளை பெற்றிருத்தல் மிக அவசியமாகும். இவ்வாறாக சமூகத்தோடு இசைந்து பொருந்தக்கூடிய நடத்தையை பெற ஒழக்கம் உதவுகிறது. ஒழுக்கமானது தனிமனிதனது நடத்தையையும், நலனையும் பேணுகிறது. சமூகத்துக்கும், தனக்கும் நன்மை பயக்கும் வகையில் ஒழுகுதல் அல்லது கருமமாற்றுதல் ஒழுக்க நடத்தையாகும். இதனையே "வையத்துள் வாழ்வாங்க வாழ்தல்" என்கிறது தமிழ் மறை. இவ்வாறாக நல்ல நடத்தையை பின்பற்றி உலகில் வாழ்தலே உண்மையான வாழ்க்கையாகும். அத்துடன் நல்லொழுக்கங்களை பேணுவதன் மூலமே மனிதன் வாழ்க்கையில் பெறுமானம் உள்ளவனாக ஆகின்றான். இவ் ஒழுக்க

நடத்தையானது ஆசிரியர்களுக்கு மட்டுமல்ல இவ்வுலகில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியமானதே.

**ஆசிரியர் பின்பற்ற வேண்டிய ஒழுக்க பண்புகள் யாவை?**

பாடசாலை எனும் போது அங்கு ஆசிரியர்கள் (கற்பிப்போர்), மாணவர் (கற்போர்) என்ற இரண்டு தரப்பினர் காணப்படுகின்றனர். இதில் ஒரு குழுவினர் மற்றைய குழுவினர் மீது ஏதோ ஒரு வகையில் செல்வாக்கு செலுத்துகின்றனர். குறிப்பாக பாடசாலையில் மாணவர் நடத்தையில் அங்கு பணிபுரியும் ஆசிரியர்களது நடத்தைக் கோலங்கள் கூடுதலான பாதிப்பை செலுத்துகிறது. எனவே பாடசாலைக்குள் மாணவர் மத்தியில் ஒழுக்க நடைமுறைகளை தாம் முறையாக பின்பற்றல் வேண்டும் என்பதில் ஆசிரியர்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டும். இதனையே கல்வியியலாளர்கள் "ஆசிரியர் என்போர் வெறுமனே மாணவர்களுக்கு கல்வியை போதிப்பவர்கள் மட்டுமல்ல ஒழுக்க முறைகளையும் இளம் உள்ளங்களில் பதித்துவிடுவதும் அவர்கள் மீது சுமத்தப்படுகின்ற தார்மீக பொறுப்பாகும்" என்கின்றனர். எனவே ஆசிரியர்கள் பாடசாலையிலும் தாம் வாழும் சமூக சூழலிலும் மிக பொருத்தமான ஒழுக்க நடத்தைகளை வெளிப்படுத்த வேண்டியது அவர்களது கடமையாகும். ஆசிரியர்கள் பாடசாலை வாழ்க்கையிலும், பொது வாழ்க்கையிலும் நல்ல ஒழுக்க நடத்தைகளையும், அறநெறி பண்புகளையும், நல்ல பழக்க வழக்கங்களையும் பின்பற்றுதல் வேண்டும்.

அந்த வகையில், முதலில் ஒழுக்க பண்புகள் அல்லது ஒழுக்க நடத்தைகள் என்பது எல்லா மனிதர்களிடம் இருக்க வேண்டிய உயரிய பண்பாகும். இது ஆசிரியர்களிடமும் வெகுவாக எதிர்பாக்கப்படுகிறது. காரணம் ஆசிரியர்களின் தொழில் நெறியில் அது அடிப்படையானதாகும். எனவே ஆசிரியர்கள் தமது பணியின் போது நேர்மையுடன் செயற்படல், தியாக மனப்பான்மையுடன் செயற்படல், உண்மை பேசுதல், சான்றோர் விலக்கி வைத்துள்ள பாதகச் செயல்களை தவிர்த்து வாழ்தல், விட்டுக்கொடுத்து வாழ்தல், தன்னலமற்று வாழ்தல், சமூகப் பொருத்தப்பாடுடன் வாழ்தல், ஏனையோருடன் பிணக்கின்றி வாழ்தல், சகிப்பு தன்மையுடனும், பொறுமையுடனும், பிறரது உணர்வுகளை புரிந்தும் வாழ்தல், கண்ணியமான முறையில் நடந்து கொள்ளல், அமைதியுடன் செயற்படல் போன்ற நல்ல பண்புகளை எப்போதும் வெளிப்படுத்த வேண்டும்.

அடுத்து மனிதகுல வாழ்விற்கும், மனிதர்கள் மனித தன்மையோடு வாழ்வதற்கும், விழுமிய உணர்வுகள் மக்களிடம் ஏற்படுத்தப்படவும், சமூக கலாசார ஆன்மீக துறைகளில் மனிதன் வளர்ச்சி பெறவும் தர்மம், நீதி, அறங்கள் பேணப்படவும் அறநெறி பண்புகள் ஒரு மனிதனுக்கு துணைப்புரிகின்றன. இதில் ஆசிரியர்கள் விதிவிலக்கல்ல என்பதுடன் நல்ல அறநெறி பழக்கவழக்கங்களை வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டியது கட்டாயமானதாகும். அந்த வகையில் எவருக்கும் உதவுதல், எல்லா உயிர்களிடமும் அன்பும், இரக்கமும் காட்டுதல், கருணை கொள்ளல், பெரியோரை கனம் பண்ணுதல், அவர்களின் சொற்படி நடத்தல், சமய நடைமுறைகளை வாழ்க்கையில் பின்பற்றுதல் போன்றவை பிரதானமானவையாகும். இவ்வாறான அறநெறி பண்புகளை குறிப்பாக ஆசிரியர்கள் பாடசாலையிலும், சமூக வாழ்க்கையிலும், வெளிப்படுத்த தவறக்கூடாது.

மேலும் ஆசிரியர்கள் தமது மொழி பிரயோகத்தின் போது மிக அவதானமாக நடந்துக் கொள்ளுதல் வேண்டும். அதாவது பாடசாலையிலும், வெளிச் சூழலிலும் நல்ல, இனிய, பயனுள்ள, பண்புள்ள, பெறுமதிவாய்ந்த சொற்களை பேசுவதில் கவனம் செலுத்த வேண்டும். "செந்தமிழும் நாபழக்கம்" என்பது ஆன்றோர் கூற்று. இவ்வாறாக பிறரை வாழ்விக்கக்கூடிய, பிறருக்கு நன்மையை ஏற்படுத்தக்கூடிய நல்ல சொற்களை ஆசிரியர் பேசுதல் வேண்டும். மாறாக பிறருக்கு தொல்லையையும், இடையூறுகளையும், பிறர் மனம் புண்படும் வகையிலும் பேசுவதை அவர்கள் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும். தாம் மற்றவர்களுடன் உரையாடும் போது அன்பாகவும், பண்பாகவும், பணிவாகவும், இனிமையாகவும் பேசுவதில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். பொய் பேசுதல், கடுஞ்சொற்களை பேசுதல், அமங்கலமாக வார்த்தைகளை கூறுதல், கடித்துரைத்தல், புறங்கூறுதல், மற்றவர் மனம் புண்படும்படி பேசுதல், நையாண்டியாக பேசுதல் போன்றவற்றை பாடசாலைக்குள்ளும், வெளியிலும் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

தொடர்ந்து ஒருவரின் உடல், உள ஆரோக்கியத்தை பொருத்தமட்டில் அவர் பின்பற்றும் பழக்க வழக்கங்களே அவருக்கு துணை புரிகின்றது. ஆசிரியர் தனது உடல், உள ஆரோக்கியத்திற்கும், பாடசாலையில் மாணவர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக வாழவேண்டியுமுள்ளதாலும் தமது வாழ்க்கையில் நல்ல பழக்கவழக்கங்களை கடைப்பிடிக்க வேண்டியதும் அவசியமாகின்றது. எனவே நேர்த்தியான ஆசிரியர்களுக்கே உரித்தான உடைகளை அணிந்து பாடசாலைக்கு செல்லுதல், தமது சிகை அலங்காரம் என்பவற்றை மாணவர்களுக்கு பிழையான முன்மாதிரியாக அமையாது பேணுதல், தமது வாழ்க்கையில் எப்போதும் நல்ல சுகாதார பழக்கவழக்கங்களை கடைப்பிடித்தல், தூய்மையுடன் (புறத்தூய்மை) செயற்படுதல், உணவு பழக்கவழக்கங்கள், உடற்பயிற்சி என்பவற்றை முறையாக பின்பற்றுதல் போன்றவற்றிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

இவற்றைவிட மாணவர்களை சரியான முறையில் வழிநடத்துதல், சமூகத்தை சரியாக வழிநடத்துதல், மற்றும் சுயகட்டுப்பாடு, கடமையுணர்வு, மன அடக்-

கம், நடுவுநிலைமை போன்ற பண்புகளையும், பொறுப்பு ஏற்று செயற்படல், நேரத்துக்கு பணியாற்றல் போன்ற பல முன்மாதிரியான நடத்தைகளை வெளிக்காட்டுவதும் இன்றியமையாததாகும். (ஆசிரியர் பின்பற்ற வேண்டிய ஒழுக்க பண்புகளை குறிப்பாக வரையறுத்து கூற முடியாது. இங்கு சில பண்புகளே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது)

### தற்போதைய நடத்தை பாங்கு

ஆசிரியர் சமூகத்துக்கு எடுத்துக்காட்டாக வாழ வேண்டியவர் என்ற வகையில் அவர்களிடமிருந்து சமூகம் பல ஒழுக்க நடத்தைகளையும், பண்புகளையும் எதிர்பார்க்கின்றது. ஆயினும் நடைமுறையில் பெரும்பாலான ஆசிரியர்கள் நல்ல நடத்தை கோலங்களையும், நல்ல பண்புகளையும், கடமையுணர்வினையும் வெளிப்படுத்துகின்ற போதும் ஒரு சில ஆசிரியர்கள் ஒழுக்க ரீதியாக சில குறைபாடுகளை கொண்டு செயற்படுவதை அண்மைக் காலங்களில் கண்டு கொள்ள முடிகிறது. இவ்வாறான ஆசிரியர்கள் குறிப்பாக தமது சொந்த நலனுக்காக மாணவரை பயன்படுத்துதல், சமயரீதியான வேறுபாடுகளை மாணவரிடம் தோற்றுவித்தல், பிற பிரிவினை சக்திகளை பாடசாலையில் உருவாக்குதல், மாணவர்களுடன் அளவுக்கதிகமாக நெருங்கி பழகுதல், மாணவர்களிடம் பாலுணர்ச்சிகளை தூண்டுதல், பாலியல் ரீதியாக மாணவர்களை சுரண்டுதல், மாணவர் தமக்கு எதிராக செயற்படும்போது அவர்களை பழிவாங்குதல், பாடசாலையில் நேர்மையீனம், வஞ்சகம், சூழ்ச்சி, கர்வம், தற்புகழ்ச்சி போன்ற எதிர்மறையான நடத்தைகளை வெளிக்காட்டுதல், ஏனைய சக ஆசிரியர்கள் தொடர்பாக புறங்கூறுதல், தாக்கி பேசுதல் பிழையாக வழிநடத்துதல், அரசியல் நடவடிக்கைகளில் வெளிப்படையாகவே ஈடுபடல், சமூக நலனை புறக்கணித்து செயற்படல், சமூக எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடல், இவை அனைத்திற்கும் மேலாக பொருத்தமற்ற முறையில் உடைகளை அணிந்து பாடசாலைக்கு செல்லுதல் என பல பொருத்தமில்லாத ஆசிரியர் பணிக்கே இழுக்கை ஏற்படுத்தகூடிய செயல்களில் ஈடுபடுவதை காண முடிகின்றது.

இவ்வாறாக நடத்தை பிறழ்வு, ஒழுக்க சீர்கேடு, கலாசார சீரழிவு, பொருத்தமற்ற முன்மாதிரி என்பவற்றை வெளிக்காட்டுபவர்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிறு தொகையினராக காணப்பட்டாலும் அவர்களது பிழையான அல்லது பொருத்தமற்ற இந்நடத்தைகள் சிலவேளைகளில் முழு ஆசிரியர் சமூகத்திற்குமே பாதிப்பை ஏற்படுத்திவிடுகின்றது. இவை ஆசிரியர் தொழிலின் உயரிய நெறிகளுக்கு முற்றிலும் புறம்பானவையாகும். இதற்கு ஆசிரியர் பணி தொடர்பாக பிழையான கருத்துக்களை கொண்டோரே இவ்வாறான பண்புகளை வெளிக்காட்டுகின்றனர். என்று ஆய்வுகள் சுட்டிக்காட்டினும், தற்போது எல்லா துறைகளிலும் ஏற்பட்டுவரும் விரைவான மாற்றங்களின் பாதிப்பால் ஆசிரியர்கள் நல்ல நடத்தை பண்புகளை வெளிக்காட்டுவதில் இருந்து தவறி செல்கிறார்களா? அல்லது மாணவர்களிடம் நல்ல கருத்துக்களை எடுத்துக்கூறி மாணவர் சமூகத்தை வழிநடத்தும் தகுதியை இழந்து செல்கின்றார்களா? என்று என்னும் நிலை தோன்றியுள்ளது. இந்நிலையில் மாற்றம் அவசியம். காரணம் மனித விழுமியங்களை அடுத்த தலைமுறையினருக்கு கையளிக்க வேண்டிய பணி ஆசிரியர்களை சார்ந்தது என்பதை அவர்கள் உணர்ந்து செயற்படுதல் காலத்தின் தேவையாகும்.

### முடிவுரை

ஆசிரியர் தமது நடத்தையின் போது நல்ல மனித பண்புகளையும், நல்ல பழக்கவழக்கங்களையும், நல்லொழுக்க நடத்தைகளையும் கடைப்பிடிப்பதுடன் மாணவர்களும் ஏனைய சமூகத்தவர்களும் அவற்றை உணரச் செய்வதும் அவர்களின் முக்கிய பணியாகும். இவ்வகையான பண்புகள், பழக்கவழக்கங்கள், நடத்தை முறைகள் இவ்வகையான பண்புகள், பழக்க வழக்கங்கள், நடத்தை முறைகள் தொடர்பாக அவர்கள் பெரிதாக எதனையும் அலட்டிக்கொள்ள தேவையில்லை. காரணம் இப்பண்புகள் யாவும் நம் ஒவ்வொருவரிடமும் ஓரளவேனும் காணப்படுகின்றன. ஆனால் இதனை ஆசிரியர்கள் எவ்வளவு தூரம் கடைப்பிடிக்கிறார்களோ அவ்வளவு தூரம் அவர்களின் பணியும் சிறப்படையும். ஆசிரியர் பணியில் நாட்டம் கொண்டோருக்கு இப்பணி கிடைக்குமாயின் அவர்கள் இவற்றை இயல்பாகவே பின்பற்றுவர் என்பது உறுதி.

ஆயினும் ஆசிரியர்கள், சமூகம் தம்மீது கொண்டுள்ள நம்பிக்கை, மதிப்பு என்பவற்றிலிருந்து ஒரு கடுகு அளவிற்குத் தமது ஒழுக்கம், நன்னடத்தை, பண்புகளில் இருந்து தவறுவார்களாயின் அவர்கள் பெற்ற நற்பெயர், மதிப்பு, கௌரவம், கண்ணியம் யாவும் ஒரு கனத்திலேயே தவிடுபொடியாகிவிடும். இவற்றை மீண்டும் மீளப் பெற்றுக் கொள்வது கடினம் என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும். இது,

*கடந்துவிட்ட காலம்*
*விட்டுவிட்ட இளமை*

போன்றதாகிவிடும். எனவே இன்றைய ஆசிரியர்கள் போதிப்பவர் என்ற வகிப்பங்கை விட சிறந்த ஓர் வழிகாட்டியாக செயற்பட வேண்டியுள்ளதால் தமது தொழிலுக்கான ஒழுக்க நெறிகளை தாமே வகுத்து அவற்றை தமது உயிரினும் மேலாக ஓம்பி பேணிக் கட்டிக்காத்து வரவேண்டிய கடப்பாடு உடையவர்களாக செயற்பட வேண்டியது காலத்தின் தேவையாகும் என்றால் அது மிகையாகாது.






**மு.நரேந்திரகுமார்** (ஆசிரியர்)
வ/திருவள்ளுவர் வித்தியாலயம்,
கட்டையர் குளம், சாஸ்திரி கூழாங்குளம்.


**தேர்ச்சி மட்டம்**

*ஆரம்ப நிலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர், மாணவர்களை கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தும் வேளை பல சவால்களை எதிர்நோக்கி அம்மாணவர்களை மேல்நிலை கல்வியை தொடர வழி சமைத்துக் கொடுக்கின்றனர்.*

# ஆரம்பக் கல்வி ஆசிரியரும் அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சியும்

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக கல்வி விளங்குகின்றது. இக்கல்வியைப் பெறுவதும் அடிப்படை உரிமைகளில் ஒன்றாகவும் காணப்படுகின்றது. இன்றைய காலகட்டத்தில் எல்லோரும் கல்வியைப் பெறுவதில் விழிப்புடன் இருக்கின்றனர். கல்வியை பெற்றுக் கொண்டால் நல்வாழ்வு வாழவும் சமூகத்தில் நன்மதிப்பை பெற்றுக் கொள்ளவும், சிறந்த தொடர்பாடல்களை ஏற்படுத்திக் கொள்ள முடியும் என்ற உணர்வலைகள் எல்லோர் மத்தியிலும் காணப்படுகின்றது. அடிப்படைக்கல்வியான ஆரம்பக்கல்வியை எல்லோரும் கற்றிருக்க வேண்டும். அதனால் எழுதவும், வாசிக்கவும், தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளவும் தெரிந்திருக்க வேண்டும். ஆகவே "எல்லோருக்கும் கல்வி" என்ற வாசகம் முன்வைக்கப்பட்டுள்ளது. இதில் பால்வேறுபாடு கிடையாது. அனைவரும் குறைந்தபட்சம் ஆரம்பக்கல்வியைப் பெற்றுக் கொள்ளவேண்டும். இது அரசினால் முன்மொழியப்பட்டுள்ளது.

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது" என்பது பழமொழி ஆகவே ஆரம்பக்கல்வியை பூரணமாக ஒருவன் பெற்றுக் கொள்வானாயின் மேல் நிலைக் கல்வியை இலகுவாக தொடரமுடியும், அந்த வகையில் ஆரம்பக்கல்வியை போதிக்கும் ஆசிரியர் சிறந்த நுண்ணறிவுடையவராகவும், ஆளுமைப்பண்பு நிறைந்தவராகவும் தொடர்பாடல்திறன் உள்ளவராகவும் இருக்க வேண்டியவராக உள்ளார். அவ்வாறு இருக்கும் ஆசிரியரினால் தான் நாட்டிற்கேற்ப நற்பிரசையாகவும், தேசியப்பற்றுள்ளவராகவும் மாணவர்களை உருவாக்க முடியும்.

ஆரம்ப நிலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர், மாணவர்களை கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தும் வேளை பல சவால்களை எதிர்நோக்கி அம்மாணவர்களை மேல்நிலை கல்வியை தொடர வழி சமைத்துக் கொடுக்கின்றனர். தரம் 1-5 வரையான வகுப்புகளில் ஒவ்வொரு ஆசிரியரும் எல்லாப்பாடங்களையும் போதிக்கின்றனர். இவ்வாறு ஒருவராக நின்று செயற்பட்டுவரும் வேளையில் அதற்கும் அப்பால் சென்று தமிழ்தினப் போட்டி, திருக்குறள் மனனப் போட்டி, கண்காட்சி, சிறுவர் அரங்கம், விளையாட்டுப் போட்டி, நூலகவாரம், நவராத்திரி விழா, பண்ணிசைப் போட்டி, சாரணீயம் பரிசளிப்பு விழா போன்ற பல நிகழ்வுகளில் மாணவர்களை

பங்கு பெறச் செய்தலும், அதனூடாக மாணவர்களை கணிப்பீடு செய்வதும், அது மட்டுமல்லாத, வேலைத்திட்டம், பாடக்குறிப்பு, கற்பித்தல் சாதனங்களை செய்தல் இவை போன்ற பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் நிலையில் ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் உள்ளார்கள். இந்நிலையில் பல்வேறு இடர்களுக்கும் மத்தியில் சேவையாற்றும் வேளையில், உயர் அதிகாரிகளின் நெருக்கடிகளும் விட்டுவிடுவதாக இல்லை. இதனால் மன அழுத்தத்திற்கும் உட்பட நேரிடுகின்றது.

இவ்வாறன நிலைமைகள் ஏனைய ஆசிரியர்களுக்கு இல்லை என்று எண்ணக் கூடாது. ஆரம்பபிரிவு ஆசிரியர்கள் பாடங்களோடும், தவணைப்பரீட்சைகளோடும் நின்றுவிடாது அதற்கும் அப்பால் சென்று மாணவன் அடையப்பட வேண்டிய தேர்ச்சிகளையும் செய்வதில் அவர்களின் பொறுப்பாகவே உள்ளது. ஆரம்பக் கல்வியை சரியான முறையில் தொடராது போனால், தொடர்ந்து மேல்நிலைக் கல்வியை முன்னெடுத்துச்செல்ல முடியாது. மேலும் கல்வியில் விரக்தியுற்று, பாடசாலையில் இருந்து இடைவிலகிச் செல்ல வேண்டிய நிலையும் உருவாகின்றது. இதனை நிவர்த்தி செய்யும் முகமாக, எல்லாப்பாடங்களிலும் மாணவன் முன்னேற்றம் அடையப்படவேண்டி அத்திவாசிய கற்றல் தேர்ச்சி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இத்தேர்ச்சியானது மாணவனின் கற்றலை மேலும் கட்டியெழுப்புவதற்கும் நற்பிரசையாக வாழ்வதற்கும் தேவையானவை என கருதப்படும் தேர்ச்சிகளாகும். சகல மாணவர்களும் குறைந்த பட்ச அத்தியாவசிய கற்றல் தேர்ச்சியை விருத்தி செய்ய வேண்டி உள்ளது. ஆரம்பத்தரங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட தேர்ச்சிகளை ஆரம்பக்கல்வி ஆசிரியரினாலே பூர்த்தி செய்யப்பட வேண்டும். சிறந்த முறையில் கல்வியைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் அடிப்படை தேர்ச்சிகளை ஆரம்ப நிலையில் இருந்ததே விருத்தி செய்து கொள்ள வேண்டும். கற்க வேண்டியவற்றை கற்றுக் கொள்ளாமல் மேல் வகுப்பிற்குச் சென்று கற்கும் போது கற்றல் தொடர்பான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடுகின்றது. இத்தேர்ச்சிகளை பூரணப்படுத்தும் வேளையில் சரியான முறையை பின்பற்றிச் செய்வதில் மிக குறைந்தளவு ஆசிரியர்களே செய்கின்றனர். இதனை அனைத்து ஆசிரியர்களும் சரியான வழியில் தொடர்வார்களாயின் மாணவர்கள் என்றும் பின்தங்கியவர்களாக இருக்க மாட்டார்கள். இவ்வடிப்படை தேர்ச்சிகள் அறிவு, திறன், மனப்பாங்கு விழுமியங்கள் ஆகியவற்றின் கூட்டுக்கலவையாகும். இவ்வம்சங்கள் பல்வேறு மட்டங்களிலும் இருக்க வாய்ப்புக்கள் உள்ளன. சில தேர்ச்சிகள் அறிவு, மனப்பாங்கு சார்ந்தாகவும், சில தேர்ச்சிகள் திறன் சார்ந்தாகவும் இருக்க முடியும். ஒவ்வொரு முதன்மை நிலையை பூர்த்தி செய்யும் மாணவர்கள் அனைவரும் இத்தேர்ச்சிகளில் பாண்டித்தியம் அடைவதே பிரதான நோக்கமாகும்.

அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகள் அநேகமானவை இலகுவானதாகும். அவை மாணவர்கள் கல்வியை திருப்தி கரமானதாக்கிக் கொள்வது மிக மிக இன்றியமையாததாகும். எல்லா மாணவர்களாலும் விருத்தி செய்து கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளே இதுவாகும். இத்தேர்ச்சிகளை

முதன்மை நிலை - 1ல் - 40 தேர்ச்சிகள் (முன்னர், 42 தேர்ச்சிகள்) முதன்மை நிலை - 2ல் - 53 தேர்ச்சிகள் என பாடவாரியாக தயாரிக்கப்பட்டுள்ளது. தொடர்பாடல் தேர்ச்சி, சுற்றாடல்சார் தேர்ச்சி, சமய ஒழுக்க விழுமியப் பண்புகள் தேர்ச்சி, விளையாட்டும் ஓய்வும் தேர்ச்சி, கற்றலுக்கான கற்றல் தேர்ச்சி, ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சி, வேலை உலகிற்கு தயார்ப்படுத்தல் தேர்ச்சி என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன. இதில் முதன்மை நிலை - 2 இல் 52 தேர்ச்சிகளை ஆசிரியர்களினால் செய்யப்பட்டு வருகின்றது.

**கற்க வேண்டியவற்றை கற்றுக் கொள்ளாமல் மேல் வகுப்பிற்குச் சென்று கற்கும் போது கற்றல் தொடர்பான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடுகின்றது.**

குறித்த தேர்ச்சியில் மாணவன் எதிர்பார்த்த அடைவு மட்டத்தை எட்டியுள்ளனவா? என அறியும் முகமாக "பாண்டித்தியம்" எனும் பதம் பயன்படுத்தப்படுகின்றது. அதற்கான அடையாளமாக (√) சரி என்றும் (.) புள்ளி என்றும் இடப்படுகின்றது. ஒருமாணவன் பாண்டித்தியம் அடைந்துள்ளதாக அறிய மேற் கூறப்பட்ட விடயங்கள் ஊடாக தொடராகவும், இறுதியாகவும் கணிப்பீடு செய்து அதன் மூலம் தான் ஆசிரியரினால் அடையாளங்கள் இடப்படுகின்றன. அதாவது பாண்டித்தியம் அடைந்துள்ளார் என்பதை தீர்மானிப்பதற்கு பல்வேறு தகவல்களும் தேவைப்படுகின்றன. முறைசாராத ரீதியில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் கணிப்பீட்டுத் தகவல்களும் இறுதித் தவணைக் கணிப்பீட்டின் ஊடாகவும் சேகரிக்கும் தகவல்களும் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவ்வாறான முறையில் மாணவனை கணிப்பீடு செய்யும் ஆரம்பக்கல்வி ஆசிரியர் நுட்பமான முறையில், மாணவன் அறியாத நிலையில் தகவல்களை சேகரித்து கணிப்பீடு செய்ய வேண்டும். கற்பிக்கும் செயற்பாட்டுடன் மட்டும் நிற்காமல் அதற்கப்பாற்பட்ட விடயங்களையும் அதாவது பிறருக்கு உதவுதல்,

பெரியோரை மதித்து நடத்தல் போன்ற பல பண்புகளை ஆய்ந்து அறியக் கூடிய திறன் உள்ள ஆசிரியராக இருக்க வேண்டும். இது எல்லா ஆசிரியர்களினாலும் மேற்கொள்ளப்படுகின்றதா? என கேள்வியும் எழத்தான் செய்கின்றன. ஆகவே பாண்டித்தியம் அடைந்தால் என்றும் (√) அடையவில்லையென்றால் (.) புள்ளியும் இடப்படுகின்றது. பாண்டித்தியம் என்ற சொல்லை நோக்கும் போது, ஒரு தேர்ச்சி சார்ந்த அறிவு, திறன், மனப்பாங்கு, விழுமியம் தொடர்பான உயர்மட்ட இயலுமையை, மாணவன் அவரது வயதிற்கு பொருத்தமாக வெளிக்காட்டுவாராயின் அம்மாணவன் அத்தேர்ச்சியில் பாண்டித்தியம் அடைந்துள்ளார் எனக் கருதப்படும்.

குறித்த தேர்ச்சியில் பாண்டித்திய மட்டத்தை அடையாத மாணவர்களை, அடையும் நிலைக்கு கொண்டு வருவதற்கு, அவர்களுக்கு ஏற்படுகின்ற கற்றல் இடர்பாடுகளை இனங்கண்டு ஒவ்வொரு மாணவனுக்கும் பொருத்தமான பரிகார கற்பித்தல் முறைகளில் கற்பித்து பாண்டித்தியம் அடைய வைப்பது ஆரம்பபிரிவு ஆசிரியர்களில் மிகப் பொறுப்பான வேலையாகவும் உள்ளது.

ஆரம்பக் கல்வியை தொடரும் முதல் 5 வருடங்களும் பிள்ளையின் வாழ்க்கையில் மிக முக்கியம் வாய்ந்த காலமாகும். முறைசார் கல்விக்கான அடித்தளம் இக்காலப்பகுதியிலே இடப்படுகின்றது. சிறந்த முறையில் கல்வியைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் அடிப்படை தேர்ச்சிகளை ஆரம்ப நிலையில் இருந்து விருத்தி செய்து கொள்ள வேண்டிய பொறுப்பு ஆரம்பக்கல்வி ஆசிரியரேயே சாரும்!

**தேர்ச்சி (Competence) வரைவிலக்கணம்**

வெப்ஸ்டர் அகராதி (Websters Dictionary) தேர்ச்சி என்றால் "திறன்மிக்க, பொருத்தமான சரியான தகைமைகள் என விளக்கமளிக்கிறது. சர்வதேச கல்விக் கலைக்களஞ்சியமானது (International Encyclopedia of Education) தேர்ச்சி என்ற சொல்லானது பின்வரும் மூன்று தரத்திலான மனித செயற்பாடுகளை (Human Function) வலியுறுத்தியதாகச் சுட்டுகிறது.

1. அறிவு (Knowledge) - ஈடுபடுதல், தெரிவு செய்தல், குறியிடுதல், பிரதிபலித்தல், மதிப்பிடுதல் போன்ற புலக்காட்சி, எண்ணக்கருவாக்கற் செயற்பாடுகளின் விளைவு.
2. மனப்பாங்கு (Attitude) - குறிப்பிட்ட நிகழ்வுகள் அல்லது பொருட்கள் சார்ந்த உணர்வு வெளிப்பாடுகளின் தோற்றப்பாடு.
3. ஆற்றுகைத் திறன்கள் (Performance Skills) மற்றவர்களால் அவதானித்து உறுதிப்படுத்தக்கூடிய தெளிவான உணர்வு வெளிப்பாடுகளை பிரதிபலிக்கக் கூடிய தன்மையைத் தனிமனிதனிடத்தில் ஏற்படுத்தும் உள இயக்கம்.

"தேர்ச்சி" என்ற பதமானது அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற கல்வி விவாதமொன்றின் (1985) முக்கிய கருவாயிற்று. அந்த வருட கல்வித்தர மீளாய்வு ஆணைக்குழுவின் (Quality Education Review Committee) தேர்ச்சி பற்றி விளக்கமானது பின்வருமாறு அமைந்தது. "ஒரு குறிக்கப்பட்ட இலக்கை அடைவதற்காக அறிவு, திறன் ஆகியவற்றை சரியா முறையில் பாவிக்கும் திறமை." எனவே சுருக்கமாகக் கூறுவதாயின் தேர்ச்சி என்பது "தரப்பட்ட ஒரு செயற்பாட்டை ஆற்றுவதற்காகத் தேவைப்படும் அறிவு, திறன், மனப்பாங்கு" எனலாம்.

அந்த வகையில் ஆசிரியர் தேர்ச்சி பற்றி நோக்கினால் "அறிவின் அலகுகளையும் அதன் பிரயோகங்களையும், திறனையும் சரியான வழியில் (ஏனையோருக்கு) புகட்டுதல்" எனப் பொருள் கொள்ளப்படலாம். "சரியான வழியில்" என்பதால் கருதப்படுவது யாதெனில் ஒரு தேர்ச்சியுடைய கற்றலுக்கு உட்படுத்துவதேயாகும். கற்றல், கற்பித்தல் செயற்பாடானது ஆசிரியர் மாணவர் இரு சாராருக்கும் மகிழ்ச்சி அளிப்பதாக இருத்தலாகும். Good (1954) இன் கூற்றுக்கிணங்க "ஆசியக் தேர்ச்சியென்பது ஒரு பாடசாலையில் போதனைக்குத் தேவைப்படும் திறன்கள், எண்ணக்கரு, மனப்பாங்கு என்பவற்றை உள்ளடக்கியிருத்தலாகும்." Haskew (1956) என்பவரின் கருத்துப்படி ஆசிரியத் தேர்ச்சியானது "ஆசிரியர் தனதுடமையாகக் கொண்டிருக்கும் அறிவு, திறன், மனப்பாங்கு, ஆளுமை, ஒழுங்குபடுத்தும் முறைமைகள் விருப்பு" என்பனவாகும்.

*(நன்றி: கலாநிதி அனுஷ்யா சத்தியசீலன் 'அகவிழி')*



முு.சச்சிதானந்தம்
(ஆசிரிய ஆலோசகர் (விசேட கல்வி),
வலயக் கல்வி அலுவலகம்,
மட்டக்களப்பு.

**விசேட கல்வி**

*பாடசாலையில் முறைசார் கல்வியைப் பெற்றுக் கொள்ள சாதாரண பிள்ளைகளுக்கு உள்ள உரிமையும், வாய்ப்பும் நியம நடத்தைகளினின்றும் வேறுபட்ட பிள்ளைகளுக்கும் கிடைக்க வேண்டும். ஏனெனில் கல்வி உரிமை என்பது மானிட உரிமையாகும்.*

## விசேட கல்வி - ஓர் அறிமுகம்

### விசேட கல்வி - ஓர் அறிமுகம்

கல்வியின் உயரிய நோக்கங்கள் பாடசாலை எனும் அமைப்பினூடாகவே அடையப்படுகின்றன. அத்தகைய பாடசாலைகளில் சமூகத்தில் உள்ள அனைத்துப் பிள்ளைகளும் தமது கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையோராவர். "எல்லோருக்கும் கல்வி" (Eduction for All) என்ற எண்ணக்கரு கல்வியியலாளர்களிடையே வலுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டு வரும். இன்றைய காலத்தில் அதை அர்த்தமுடையதாக்க வேண்டுமாகில் பிள்ளைகள் அனைவரும் சமத்துவமான முறையில் கல்வியைப் பெற்றுக்கொள்ள ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டியது அவசியமானதாகும்.

பாடசாலையில் முறைசார் கல்வியைப் பெற்றுக் கொள்ள சாதாரண பிள்ளைகளுக்கு உள்ள உரிமையும், வாய்ப்பும் நியம நடத்தைகளினின்றும் வேறுபட்ட பிள்ளைகளுக்கும் கிடைக்க வேண்டும். ஏனெனில் கல்வி உரிமை என்பது மானிட உரிமையாகும். நியம நடத்தையுள்ள பிள்ளைகளே சாதாரண பிள்ளைகள் என அழைக்கப்படுகின்றனர். அது போலவே நியம நடத்தைகளில் இருந்து வேறுபட்டவர்கள் விசேட உதவி தேவைப்படும் பிள்ளைகள் (Children With Special Needs) என குறிப்பிடப்படுகின்றனர்.

அதாவது பாடசாலையில் கற்றல், கற்பித்தல் செயன்முறையின் போது எல்லாப் பிள்ளைகளுமே பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். அத்தகையவர்களில் அநேகமானோர் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தாமே தீர்வினையும் பெற்றுக்கொள்ளுகின்றனர். ஆனால் மாணவர் சிலர் எதிர்கொள்ளும் கற்றல் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுக் கொள்ள பிறரின் உதவியை வேண்டி நிற்கின்றனர். இவ்வாறு பிறரின் உதவி மூலமாக தமது பிரச்சினையை தீர்த்துக் கொள்வோரே விசேட உதவி தேவைப்படும் பிள்ளைகள் என வேறொரு வகையிலும் குறிப்பிட முடியும். இவ்வாறாக பிள்ளைகளுக்கு வழங்கப்படும் கல்வியே விசேட கல்வி (Special Education) என அழைக்கப்படுகின்றது. உலக அளவில் யுனெஸ்கோ (Unesco) கணிப்பீடுகளின்படி 30 சதவீதமானோர் விசேட உதவி தேவைப்படுவோராக உள்ளனர் எனலாம்.

மார்க்சிச சிந்தனைகளின் தோற்றத்தோடு விசேட கல்வி என்ற பதம் முதல் முதலில் கார்ல்மார்க்ஸ் என்பவரினாலேயே

அறிமுகப்படுத்தப்பட்டதாகும். இவரது கருத்துக்கள் இக்கல்வி பற்றிய விழிப்புணர்வினை சமூகத்தில் எழுச்சியடைய செய்வதற்கு உந்து விசையாக இருந்தன எனலாம்.

மனித உரிமை மற்றும் சிறுவர் உரிமை என்ற கருத்துருவாக்கங்கள் உலக நாடுகளிடையே மேலெழும்பியதன் பயனாக, அநேக நாடுகள் தமது கல்வி அமைப்பில் விசேட கல்விக்கு உரிய முன்னுரிமையினை வழங்கி வரலாயின. சிறுவர் உரிமைகள் பற்றிய சமுதாயத்தின் பல உறுப்புரைகள் விசேட உதவி தேவைப்படும் பிள்ளைகள் பற்றிக் குறிப்பிடுகின்றன. அவற்றில் 23வது உறுப்புரை விபரிப்பதை இவ்விடத்தில் மனங்கொள்வது பொருத்தமுடையதாகும். "ஊனமுற்ற பிள்ளை கண்ணியத்துடன் வாழ்வதற்கும் முடிந்தவரை சிறப்பான முறையில் தன் சொந்தக் காலில் நிற்கவும் சமுதாயத்துடன் இணைந்து கொள்ளவும் வாய்ப்புப் பெறும் பொருட்டு விசேட பராமரிப்பு, கல்வி, பயிற்சி என்பனவற்றைப் பெற உரித்துடையது" என்பதே அவ்வுறுப்புரையில் குறிப்பிடப்படும் விடயமாகும்.

இத்தகைய பின்புலத்தின் அடிப்படையில் கல்விப்புலத்தில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் உட்பட அனைத்துப் பணியாளர்களும் விசேட கல்வி தொடர்பான விளக்கமும், தெளிவும் பெற்றிருப்பது மிக இன்றியமையாததாகும். இத்தகைய விளக்கமும், அறிவும் விசேட தேவையுள்ளோரின் ஆற்றல்களையும் திறன்களையும் வெளிக்கொணரச் செய்வதுடன் விருத்தியடையச் செய்யவும் பேருதவியாக இருக்கும், எனினும் பலர் விசேட கல்வி தொடர்பான சிறந்த விளக்கம் பெறாதவர்களாக இருப்பது நாம் யாவரும் சிந்திக்க வேண்டியதொரு விடயமாகும்.

### விசேட கல்வி என்றால் என்ன?

விசேட கல்வி தொடர்பான சிறிய விளக்கம் முன்னர் எம்மால் முன்வைக்கப்பட்டிருப்பினும் இப்பகுதியில் அது பற்றிய பரந்த விளக்கம் இங்கு முன்வைக்கப்படுகின்றது. விசேட கல்வி என்பது உடல், உள அல்லது அங்கக் குறைபாடு உள்ள பிள்ளைகளுக்கும் மனவெழுச்சி, நடத்தைப் பிரச்சினை உள்ள பிள்ளைகளுக்கும், அடிப்படைத் தேவை அன்பு, காப்பு, கணிப்புத் தேவை நிறைவேறாதவர்களுக்கும், நீண்டகால நோய் நிலைமை, சுகாதார குறைபாடு உள்ளவர்களுக்கும், மெல்லக் கற்போர், விசேட கற்றல் பிரச்சினை உள்ளவர்கள். மீத்திறனும் விசேட நிபுணத்துவமும் உடையவர்களுக்கும், அவர்களிடையே காணப்படும் கற்றல் தேவைகளை (Learning Needs) பூர்த்தி செய்வதற்காக தயாரிக்கப்படும் ஆலோசனைச் செயற்பாடுகள் எனலாம்.

விசேட உதவி தேவைப்படுவோருக்கு அவர்களின் இயலாமைகளை அல்லாமல், இயலுமைகளை இனங்கண்டு அவற்றை மேலும் விருத்தியடையச் செய்யவும், தன்னம்பிக்கையை கட்டியெழுப்பத்தக்கதாகவும் பொருத்தமான கற்பித்தல் உத்திகள் மற்றும் துணைச்சாதனங்கள் என்பவற்றை கையாண்டு கல்வி வழங்குதலே அதிக பலனைத் தருவதாக இருக்கும். பிள்ளைமையக் கல்வி, தனியாளைக் குவியப்படுத்திய கற்பித்தல் என்ற சிந்தனைகள் யாவும் விசேட உதவி தேவைப்படுவோர் சார்பாக மேற்கொள்ளப்படும் சிறந்த செயற்பாடுகள் எனலாம்.



### விசேட தேவையுடையோரின் வகைகள்

எமது சமூகத்தில் பல வகையான விசேட தேவைக்குட்பட்டோர் காணப்பட்டாலும் அவர்களை கீழ்வரும் வகைகளுக்குள் ஏதாவது ஒரு பிரிவில் உள்ளடக்க முடியும் அவை பின்வருமாறு:

1. மீத்திறனும் விசேட நிபுணத்துவமும் (Gifted and Talented)
2. கற்றல் இயலாமை (Learning Disabilities)
3. மொழிதலும் மொழிக்குறைபாடுகளும் (Speech and language Impairment)
4. மெதுவாக உளவளர்ச்சி அடைவோர் (Mantel Retardation)
5. உக்கிரமான மனவெழுச்சி பிரச்சினை உள்ளவர்கள் (Emotional Disabilities)
6. பலவித இயலாமைகள் (Multiple Disabilities)
7. உடலியற் குறைபாடுகள் (Orthopaedic Impairment)
8. வேறு சுகாதார குறைபாடுகள் (Other Health Impairment)
9. கேட்டல் குறைபாடு (Hearing Impairment)
10. பார்வைக் குறைபாடு (Visual Impairment)
11. குருடு - செவிட்டுத் தன்மை (Deaf - Blindness)
12. தற்சிந்தனை (Autism)
13. மூளையில் ஏற்பட்ட பாதிப்பு (Brain Injury)

*14. அதீத செயற்பாடு (Hipper Activity)*


*15. நடத்தைக் குலைவு (Behavioural Disorder)*

**விசேட கல்வியும் உட்படுத்தல் கல்வியும்**

தற்கால கல்வியியலாளர்கள் மற்றும் உளவியலாளர்கள் விசேட உதவி தேவைப்படுவோரை தனியாக வேறுபடுத்தாது அவர்களை ஏனைய சாதாரண மாணவர்களோடு சாதாரண வகுப்பறையில் ஒன்றாக இணைத்து கல்வி வழங்குதலே ஏற்புடையதென வாதிடுகின்றனர். பிள்ளைகள் எப்போதும் தமது சம வயதுக் குழுவினருடன் சேர்ந்து கற்பதற்கே விரும்புவர். எனவேதான் விசேட தேவைக்குட்பட்ட பிள்ளைகளையும் தமது ஏனைய சாதாரண சகபாடிப் பிள்ளைகளுடன் கலந்த வகையில் கற்பதற்குரிய சூழலை நாம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இத்தகைய செயற்பாடுகளின் பயனாக அப்பிள்ளைகளிடையே உடல், உள ரீதியான சுயநம்பிக்கை உருவாகவும் சுயம் (Self) இழக்கப்படாமல் இருக்கவும் வாய்ப்பேற்படுகின்றது.


"உடல், உள நிலைகளில் ஆற்றல் குறைந்தோர், அவ்வாறான ஆற்றல் குறைவுகளுக்கு உட்படாத சகபாடிகளுடன் (Non Disabled Peers) சமமாக இருந்து கற்கும் பொழுதுதான் அவர்கள் புறக்கணிக்கப்படாதவர்களாக கருதப்படுவார்கள். இந்நிலையில் உருவாக்கப்பட்ட ஒரு சிறப்பார்ந்த முன்மொழிவு பிரதான அருவி மயப்படுத்தல் (Manistreaming) என்பதாகும். பிரதான அருவி மயப்படுத்தல் என்பது ஆற்றல் குறைந்த மாணவரை வீட்டிலே தங்கவைத்து முற்றாக ஒதுக்கிவிடும் நிலையில் இருந்து மாறுபட்டு முற்றாக பாடசாலைக்கு அழைத்துச் செல்லும் ஒரு பெயர்ச்சி நடவடிக்கையாகும். ஆற்றல்மிக்க மாணவர்களுடன் அவர்கள் இடைவினை கொள்ளும் சந்தர்ப்பங்களை அதிகரித்தலும் பிரதான அருவி மயப்படுத்தல் செயற்பாட்டில் உள்ளடங்கும்" (ஜெயராசா - ச. 2004 - பக் 1-2)

கடந்த காலங்களில் விசேட தேவையுடையோருக்கு தனியான பாடசாலைகள் இயங்கி வந்தன. இவற்றுக்காக கூடுதலான பணமும். வளமும் செலவு செய்யப்பட்டன. எனினும் விசேட கல்வி பயிலும் மாணவர் தொடர்பான அபிவிருத்தி நடவடிக்கைகள் எதிர்பார்த்த இலக்கினை அடையவில்லை. அத்தோடு விசேட கல்வித் தேவையுடையோர்களுக்காக நடைமுறைப்படுத்தப்பட்ட கல்வி நடவடிக்கைகள் திருப்திகரமானதாகவும் அமைந்திருக்கவில்லை. எனவே இவை தொடர்பாக புதிய சிந்தனைகள் முகிழ்ந்தெழலாயின.



இத்தகைய சிந்தனைகளின் பெறுபேறாக உட்படுத்தல் கல்வி (Inclusive Education) மூலமாக விசேட கல்வித் தேவையுடையோரை சாதாரண பாடசாலைகளில் சாதாரண மாணவர்களோடு ஒன்றிணைந்து கற்பிக்கும் நடைமுறை பின்பற்றப்படலாயிற்று. இமானுவல் என்பவரின் கருத்துப்படி விசேட தேவையுடைய மாணவர்கள் அனைவரையும் ஒன்றிணைந்து, உட்படுத்தல் கல்விக்கு இட்டுச் செல்வதால் விசேட கல்வித் தேவையுடையோர்களை நிராகரித்தல், ஒதுக்கி வைத்தல் முதலிய நடவடிக்கைகளுக்கு முடிவு கட்டப்படுபவதோடு மனப்பான்மையில் மாற்றமும் ஏற்படுகின்றது. அத்தோடு சிறுவர் உரிமைகளும் உட்படுத்தல் கல்வி மூலம் பாதுகாக்கப்படுகின்றன. சமூகத்தில் உள்ள அனைத்துப் பிள்ளைகளையும் சாதாரண பாடசாலைகளுக்கு உள்வாங்கும் செயற்பாட்டையே உட்படுத்தல் கல்வி என விளக்கப்படுத்திக் கொள்ளலாம்.

சாதாரண மாணவர்களோடு விசேட தேவையுள்ள மாணவர்களும் ஒன்றாக சேர்ந்து பயிலும் போது விசேட தேவையுள்ளோரின் உடல், உள ரீதியான துன்பங்கள் மறைந்து சுயநம்பிக்கை விருத்தியடைகின்றது. இம் மாணவர்களை சமூகமும் நாடும் அங்கீகரிக்கும் போது அவர்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுகின்றது. அனைத்து மாணவர்களையும் ஏற்றுக் கொள்வது அங்கீகரிப்பது என்பது அவர்களது வாழ்வு வளம் பெறுவதற்கான முதற்கட்டமாகும். எனவே நாமும் எமது பாடசாலை முறைமையில் விசேட தேவையுடைய பிள்ளைகளை உள்வாங்கி அவர்களையும் சமமாக மதித்து அவர்களது ஆற்றல்களை வெளிக்கொணரச் செய்ய எம்மிடையே உடன்பாடான மனப்பான்மை (Positive Attitude) மாற்றத்தின் ஊடாக புதிய சகாப்தத்தை நோக்கிப் பயணிப்போம்.



# இலத்தீன் அமெரிக்காவும் விடுதலை உளவியலும் நாம் கற்றுக் கொள்ள வேண்டியவையும்




**சபா.ஜெயராசா,**
முன்னாள் பேராசிரியர்,
கல்வியியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.


சிறப்புக் கட்டுரை

*ஒடுக்கப்படுவோரைக் களிப்படையச் செய்யும் அறிதலைப்புக்கள் கல்விச் செயல் முறையின் வாயிலாகத் தொடர்ச்சியாக முன் வைக்கப்பட்டு வந்தன. மக்கள் வாழ்க்கையோடு ஒட்டாத அன்னியமயப்பாடு கல்வி முறைமையினூடாகத் தொடர்ந்து மீளவலியுறுத்தப்பட்டு வந்தது.*

நீண்ட காலக் காலனித்துவ சுரண்டலுக்கு உட்பட்ட இலத்தீன் அமெரிக்க நாடுகள் பொருண்மிய நிலை, பண்பாட்டு நிலை, கல்வி நிலை முதலியவற்றிலே சொல்லொணாத் துன்பங்களையும், இழப்புக்களையும், பறிப்புக்களையும் அனுபவித்து வந்துள்ளன. தமக்குரிய பலவகையான, பன்முகமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உளவியலைப் பயன்படுத்துதல் சமகாலத்தில் அங்கே மேலோங்கிக் காணப்படும் ஒரு சிறப்புப் பண்பாகும். ஆனால் உளவியல் அறிவால் மட்டும் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாதென்ற நடப்பியல் நம்பிக்கை அங்குள்ள ஆய்வறிவாளர்களிடத்து மேலோங்கியுள்ளமை ஆழ்ந்து நோக்கப்பட வேண்டியதொன்றாகும். தெளிந்த கருத்தியலோடு இணைந்த அரசியல் மயப்பாட்டோடு ஒன்றிக்கும் உளவியலே நடைமுறைப் பயன்தரும் என்ற அவர்களின் அணுகுமுறை உலகின் ஏனைய நாடுகளும் அறிந்து கொள்ள வேண்டியதும் கற்றுக் கொள்ள வேண்டியதாகவுமுள்ளது. அதாவது மார்க்சியம் தழுவிய உளவியலின் நடைமுறைப்பாடு நடப்பியல் நிலையில் உச்சங்களை எட்ட முடியும் என்ற முனைப்பு அங்கே மேலோங்கியுள்ளது. அந்தக் கருத்தியலின் நடைமுறை அனுகூலங்களையும் அவர்கள் அனுபவிக்கத் தொடங்கியுள்ளனர்.

காலனித்துவத்தின் தொடர்ச்சியான பறிப்புக்கள் பொருளியல் சார்ந்த உறுதிக் குலைவுகளையும் தளம்பல்களையும் அங்கு உருவாக்கியுள்ளன. காலனித்துவக் கல்வி முறை ஒடுக்கு முறைக்குச் சார்பானதாகவும், ஒடுக்கப்படுவோர் தொடர்ந்தும் ஒடுக்குமுறைக்கு உட்பட்டு வாழ்வதற்குரிய கருதத்தேற்றப்பட்டிருந்தது. ஒடுக்கப்படுவோரைக் களிப்படையச் செய்யும் அறிதலைப்புக்கள் (Themes) கல்விச் செயல் முறையின் வாயிலாகத் தொடர்ச்சியாக முன் வைக்கப்பட்டு வந்தன. மக்கள் வாழ்க்கையோடு ஒட்டாத அன்னியமயப்பாடு கல்வி முறைமையினூடாகத் தொடர்ந்து மீளவலியுறுத்தப்பட்டு வந்தது. அதன் நேரடி விளைவு கற்றவர்கள் அந்நாட்டை விட்டு வெளியேறும் "நுண்மதியாளர் வெளியேற்றம்" ஆகும்.

சோசலிச நெறிப்பட்ட இலத்தீன் அமெரிக்க நாடுகளின் புதிய சிந்தனைப் போக்குகளைச் சீரணித்துக் கொள்ள முடியாத மேற்கு நாடுகள் தவறான பரப்புரைகளையும் கருத்தேற்றங்களையும் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றன. இந்நிலையில் மக்கள் மத்தியிலே முற்போக்கான அறிவுக்கையளிப்பை முன்னெடுப்பதற்கு உளவியல் நுட்பங்களை

எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது பற்றிய பிரயோக உளவியல் முனைப்புக்கள் அங்கு இடம் பெற்று வருகின்றன. தனிமனித முனைப்பை விட்டு நீங்கிய சமூக நோக்கு உளவியலில் வற்புறுத்தப்பட்டு வருகின்றது.

சுதேச உளவியல் அல்லது நாட்டின் மரபுவழி இயல்புகளுக்குரிய உளவியல் (Indigenous Psychology) என்பதன் முக்கியத்துவம் அங்கு உணர்த்தப்பட்டுள்ளது. எமது நாட்டில் இன்று மேலை உளவியலின் பின்பற்றல் மேலோங்கியுள்ளதேயன்றி, நாட்டு உளவியல் விருத்திக்குரிய முன்னெடுப்புக்கள் வறிதாக உள்ள நிலையையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. மக்களின் வாழ்க்கையோடும் பண்பாட்டோடும் ஒன்றிணைந்து நிற்றல் நாட்டு உளவியலுக்குரிய சிறப்பும் தனித்துவமுமாகும். ஒவ்வொரு பண்பாட்டுக்குரிய நிறுவனங்களோடு தொடர்புடைய நோக்குகள், வகைப்பாடுகள், கருதுகோள்கள் முதலியவற்றுடன் "நாட்டு உளவியல்" தொடர்பு கொண்டுள்ளது. மரபுகள், சடங்குகள், விழாக்கள், சிறுவர் நலன் காப்பு, கர்ப்பிணிகள் நலன் காப்பு, இளைஞர், முதியோர் நலன் பேணல், "இழப்பின் ஈடுசெய்கை முறைமை போன்ற பல்வேறு பண்புகளுடனும் தொழிற்பாடுகளுடனும். "நாட்டு உளவியல்" இணைந்துள்ளது. இந்நிலையில் நாட்டு உளவியலின் பலத்தை அறிந்து கொள்ளாது, "இறக்குமதி" செய்யப்பட்ட உளவியலைச் சூடிக்கொள்வதால் ஏற்படும் அபத்தங்கள் சுட்டிக் காட்டப்படுகின்றன.

நாட்டு உளவியலூடே ஒவ்வொரு பண்பாட்டுக்குமுரிய தனித்துவமான இயல்புகள் காணப்பட்டாலும், சுரண்டலுக்கும் பறிப்புக்கும் உள்ளாகும் மனிதர்களிடத்துக் காணப்படும் பொதுப் பண்புகள் அல்லது அகிலப் பண்புகள் தெளிவாக மேலெழுந்துள்ளன. இலத்தீன் அமெரிக்க நாட்டு உளவியலாளர் நாட்டு உளவியலின் முக்கியத்துவத்தையும் நடைமுறை நற்பண்புகளையும் பல கோணங்களிலே வலியுறுத்தி வருகின்றனர்.

நவீன மயப்பட்ட ஆழ்ந்த உளவியல் ஆய்வுகளுக்கு முன்னுரிமை தருதலை அங்குள்ள உளவியலாளர் உடனடியாக விரும்பவில்லை. ஆனால் அங்கு உடனடியாக முகம் கொடுக்க வேண்டிய பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தலும் உளவியலைப் பொருத்தமான வகையில் ஒன்றிணைத்தலும் அவர்களால் முக்கியத்துவப் படுத்தப்படுகின்றது.

பின்வருவன அங்குள்ள உளவியலாளருக்கு அறைகூவலும் உறுத்தலும் விடுத்த வண்ணம்முள்ளன. அவற்றை அடியொற்றிய உளவியல் நடவடிக்கைகளில் ஆழ்ந்த கவனம் செலுத்தப்படுகின்றது.

- ஆழ்ந்து உறைந்த காலனித்துவ உளப்பாங்குகளிலிருந்து மனிதரை விடுவித்தல்.
- நாட்டுக்கு ஏற்புடையதானதும், பயன்தரக் கூடியதுமான கல்வியையும், கற்றல், கற்பித்தற் செயற்பாடுகளையும் வினையாற்றலுடன் முன்னெடுத்தல்.
- கல்வி உலகையும், நாட்டு வளங்களையும், தொழில் உலகையும் ஒன்றிணைத்தல்.
- இனப்பூசல் சமயப் பூசல் பிரதேச முரண்பாடுகள், மோதல்கள் முதலியவற்றைத் தவிர்ப்பதற்குரிய முற்போக்கான அரசியற் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குரிய கல்விச் செயற்பாடுகளை வடிவமைக்க உளவியலைப் பயன்படுத்துதல்.
- அடித்தளத்து மக்களின் உடல் நலத்தைப் பேணுவதற்கும் நோய்த் தடுப்பு முறைகளை முன்னெடுப்பதற்கும் உளவியல் உபாயங்களைக் கையாளுதல்.
- பயன்தரும் வளமான இலக்கியங்களையும், கலைகளையும் அழகியல் வடிவங்களையும் உருவாக்குவதற்கு உளவியல் அறிகையை எடுத்தாளல்.

இலத்தீன் அமெரிக்க உளவியலாளர் பிரயோக உளவியலில் அல்லது பயன்படும் உளவியலிலே

நாட்டு உளவியலூடே ஒவ்வொரு பண்பாட்டுக்குமுரிய தனித்துவமான இயல்புகள் காணப்பட்டாலும், சுரண்டலுக்கும் பறிப்புக்கும் உள்ளாகும் மனிதர்களிடத்துக் காணப்படும் பொதுப் பண்புகள் அல்லது அகிலப் பண்புகள் தெளிவாக மேலெழுந்துள்ளன.

கூடுதலான கவனம் செலுத்தி வருதல் குறிப்பிடத்தக்கது. அதுவே அவர்களுக்குரிய உடனடித் தேவையாகவுமுள்ளது. (Salazar, 2002).

நாட்டு உளவியல் முக்கியப்படுத்தப்படும் நிலையில் அதற்குரிய தனித்துவமான பெயர்களும் சூட்டப்படுகின்றன. 1970 ஆம் ஆண்டில் அதற்கு "சமுதாய உளவியல்" (Community Psychology) என்று பிறேறி பெயரிட்டார். 1984 ஆம் ஆண்டில் அதற்குத் "தேசிய உளவியல்" (National Psychology) என்று டயாஸ் குவேறிறோ பெயரிட்டார். "பிரயோக ஊடுதலையீட்டு (Intervention) உளவியல்" என்ற பெயரும் அண்மைக்காலமாக வழங்கப்பட்டு வருகின்றது.


மாட்டின் பாறோ அவர்களது உளவியல் ஆய்வுகளையும, கருத்தியலையும் அடியொற்றி "விடுதலை உளவியல்" (Liberation Psychology) என்ற எண்ணக்கரு அறிமுகம் செய்யப்பட்டது. ஒடுக்குவோர் ஒடுக்கப்படுவோர் என்ற இரு முரண்பட்ட வகுப்பினரின் இயல்புகளை விளங்கிக் கொள்ளலும், ஒடுக்கு-

முறைக்கு எதிரான செயற்பாடுகளை வலுப்படுத்தலும், ஒடுக்கப்படுவோரின் எதிர்மறை உளப்பாங்குகளைத் தகர்த்து அவர்களுக்கு வளமான வாழ்வுக்கு வலுவூட்டுதலும் விடுதலை உளவியலின் உள்ளடக்கமாகின்றன. விடுதலை உளவியலின் செல்வாக்கு உலகெங்கணுமுள்ள ஒடுக்கப்பட்ட மக்களிடத்தும் ஒடுக்கு முறைக்கு எதிரான வினைப்பாடுகளில் ஈடுபாடு கொண்டவர்களிடத்தும் விரவிப் பரந்து வருதல் குறிப்பிடத்தக்கது.

மரபு வழியான உளவியற் சிந்தனைகளைத் தெளிந்தறிந்து அவற்றுக்கு வலுவூட்டிப் புதுப்பித்து வழங்குதல் விடுதலை உளவியலாளரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. மக்கள் மத்தியிலே இடம் பெற்று வரும் உளவியல் நடைமுறைகளை கண்டறிந்து அந்த நுட்பங்களைப் பொருத்தமான வகையிலே எடுத்தாளும் வகைகள் பற்றியும் ஆராயும் செயற்பாடுகளை விடுதலை உளவியலாளர் முன்னெடுத்து வருகின்றனர். மரபு வழி உளவியல் நிறுவனங்களுக்கு வலுவூட்டுதலும் அவர்கள் மேற்கொள்ளும் செயற்பாடுகளாகின்றன. மரபு வழி உளவியல் நிறுவனங்கள் காலனித்துவ ஆட்சிக் காலத்திலே செயலிழந்தன. கட்டுக் காவல் செய்யும் சமய நிறுவனங்கள் உளவளத்துணை செய்யும், வழிபாட்டு நிறுவனங்கள் முதலியவை செயலிழந்ததுடன், அவை மூடத்தனமானவை என்றும், பிற்போக்கானவை என்றும் கருத்தேற்றம் செய்யப்பட்டன. அவற்றுக்கு உயிர்ப்பூட்டலும், மீள்வலு ஊட்டலும் விரைந்து முன்னெடுக்கப்படுகின்றன.

பாடசாலைக் கற்பித்தலிற் பின்வரும் முற்போக்கு பண்புகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது.

- அறிவைச் செயலூக்க மற்றவகையிலே உள்வாங்கும் நிலை தகர்ப்புக்கு உள்ளாக்கப்படுகின்றது. அதாவது, மாணவர் வெறுமனே ஒற்றுத்தாள்" போன்று இருக்கும் நிலையை மாற்றியமைப்பதற்குரிய வினைப்பாடுகளுக்கு முன்னுரிமை தரப்படுகின்றது."
- அறிவையும் வாழ்க்கையையும் ஒன்றிணைப்பதற்குரிய கற்பித்தலையும் கற்றலையும் வளப்படுத்தலும், வலுப்படுத்தலும் முன்னெடுக்கப்படுகின்றன.
- "பிரச்சினை முற்கவிப்பு"க் கற்றலையும் கற்பித்தலையும் முன்னெடுத்தல். அதாவது மக்கள் வாழ்வில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் சவால்களையும் முன்னீடுகளாகக் கொண்டு பொருத்தமான கற்றலையும் கற்பித்தலையும் உருவாக்கிக் கொடுத்தல் வலியுறுத்தப்படுகின்றது.
- மக்களுக்குப் பயன்தரக் கூடியதும், ஆற்றல் மிகு வினைப்பாடுகளைத் தூண்டக் கூடியதுமான, உள்ளடக்கங்களையும், அறிதலைப்புக்களையும் தேர்ந்தெடுத்துக் கற்றலை அறிமுகப்படுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது.



- சமூகத்தோடு இடைவினை கொள்வதன் வாயிலாகப் பொருத்தமான கற்றல் உள்ளடக்கங்களைப் பெற்றுக் கொள்ளல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.
- "பண்பாட்டுப் பணியாளர்" (Cultural Workers) என்ற நிலையில் ஆசிரியர் தமது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றது.

இலத்தீன் அமெரிக்க நாடுகளில் வளர்ந்து வரும் சிந்தனைகள் உளவியற் புலத்திலே மாற்றுவகையான கருத்துக்களை முன்னெடுப்பதற்கும் மேற்குலகின் கருத்து மாயைகளிலிருந்து விடுபடுவதற்கும் விசையூட்டி வருகின்றன. மேற்குலகின் நிலைபேறு கொண்டுள்ள தனிமனித உளவியலை "மறுவாசிப்புக்கு" உட்படுத்துவதற்கும் தகர்ப்பதற்கும் அவை துணை நிற்கின்றன. "அதிகார நிலை நிறுத்தலுக்கு" உளவியற் கல்வி எவ்வாறு பயன்பட்டு வந்துள்ளது என்பதைக் கண்டறிவதற்கும் இலத்தீன் அமெரிக்காவிலே தோற்றம் பெற்றுவரும் உளவியற் கருத்துக்கள் வலுவுள்ள வழிகளை அமைக்கின்றன.

எமது நாட்டில் மட்டுமன்றி மேற்குலகில் உளவியல் ஆய்வுகளை மேற்கொள்வோரும் உளவியல் எழுத்தாளர்களும் இலத்தீன் அனுபவங்களைக் குறிப்பிடத் தவறி விடுகின்றனர். ஆய்வுகளின் முற்பகுதியில் இடம் பெறும் இலக்கிய மீளாய்வுகளிலும் இலத்தீன் அமெரிக்க உளவியல் அனுபவப் பதிவுகளும் எழுத்துக்களும் எடுத்தாளப்படுதல் இல்லை.

அங்கு வளர்ந்து வரும் முற்போக்கு இடது சாரி இயக்கங்களையும், அவற்றை அடியொற்றி எழும் உளவியல் அறிகைப் புனைவுகளையும் திரிபுபடுத்தி அல்லது மாறுபடுத்திக் கூறல் அல்லது கொச்சைப்படுத்திக் கூறல் ஊடகங்கள் பரவலாக மேற்கொண்டு வருதலையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. சிறப்பாகக் கியூபாவின் செயற்பாடுகளைத் திரிபுபடுத்திக் கூறுவதிலே மேற்குலக ஊடகங்கள் திட்டமிட்ட வகையிலே செயற்பாடு கொள்வதைக் குறிப்பிட வேண்டியுள்ளது.

# தாரணி ஓர் ஆச்சரியக் குறி

நெடுந்தீவு மகேஷ்

அன்று புதிதாக என் வகுப்புக்குத் தாரணி வந்திருந்தாள். அவளை நான் முதன் முதலாக எனது கணித பாட வகுப்பில் பார்த்தபோது அவளது தோற்றம் அதிகம் என்னைக் கவரவில்லை. எனது பார்வை நீண்ட நேரம் அவள் மீது படியவில்லை.

வகுப்புக்குள் நுழைந்ததும் வழமையான எனது கற்பித்தலைக் கணிதபாட பயிற்சிப் புத்தகத்துடன் தொடர்ந்தேன்.

கணக்குகள் சிலவற்றை மாணவர்களுக்குக் கொடுத்தேன். புத்தகத்திலிருந்து வாசித்துப் பயிற்சிக் கொப்பியில் எழுதிச் செய்து காட்டும்படி கூறினேன்.

சிலர் கணக்குகளைச் செய்தார்கள். இன்னும் சிலர் செய்து கொண்டிருந்தார்கள்.

மேலும் சிலர் என்ன செய்கிறார்கள் என்பது பற்றி அறியும் எண்ணம் எதுவுமின்றி நான் பயிற்சிக் கொப்பிகளைத் திருத்திக் கொண்டிருந்தேன்.

நான் எதிர்பார்த்தபடி கணக்கிற்குரிய செய்கை முறையை எழுதி விடையைச் சரியாகக் குறித்திருந்தவர்களுக்குச் சரி போட்டேன்.

ஏனையவை எல்லாமே பிழைகளாகவே என்னால் மதிப்பிடப்பட்டன.

பிழையும் சரியும் போட்டுப் பழக்கப்பட்ட எனது வலது கை, சிவப்பு மைப் பேனாவைக் கொண்டு திறம்பட அவ்வேலையைச் செய்து கொண்டிருந்தது.

பாடம் நிறைவுறுவதற்குச் சில நிமிடங்களே இருந்தன. "எல்லோரும் கெதியாகக் கணக்கைச் செய்து காட்டுங்கள்" எனக் குரல் கொடுத்தேன்.

மாணவர்கள் சிலர் உசாரானார்கள்... நானும் உசாரானேன்.

"கணக்கைச் செய்தவர்கள் கணக்குக் கொப்பிகளை மேசையில் அடுக்குங்கள்"

ஒவ்வொன்றாகச் சில பயிற்சிக் கொப்பிகள் என் மேசைமீது அடுக்கப்பட்டன.

நான் பார்வையிட கொப்பிகள் போக எஞ்சிய பத்துப் பன்னிரண்டு பயிற்சிக் கொப்பிகளை மேசையிற் பார்த்தேன்.

அவற்றைக் கொண்டு வந்து ஓய்வெடுக்கும் அறையிற் தருமாறு வகுப்புத் தலைவரைப் பணித்தேன்.

பாடம் முடிந்தது. நான் வகுப்பை விட்டு வெளியேறினேன்.

நான் கணித பாடத்தைக் கற்ற நாட் தொடக்கம் கற்பிக்கத் தொடங்கி இன்றுவரை கணித பாடத்தோடு ஒன்றிவிட்டதாகவே எண்ணுகிறேன்.

அனைத்து வாய்ப்பாடுகளையும் மனனம் செய்து வைத்திருக்கிறேன். ஒரே முறையில் கணக்கொன்றுக்கான செய்முறை ஒழுங்கைப் பழக்கப்படுத்தி வைத்திருக்கிறேன்.

என்னைப்போல கணக்குச் செய்தவற்கு ஏனையவர்களுக்கு வழிகாட்டவும் எனக்குத் தெரியும்.

பரீட்சை மூலம் நான் கணிதபாடத்தில் சித்தியடைந்துள்ளேன். என்பதை உறுதி செய்யச் சான்றிதழ்களும் என்னிடத்தில் இருக்கின்றன.

கணித பாடத்தை இப்படித்தான் கற்பிக்க வேண்டும் என்பதற்கான பயிற்சியையும் நான் பெற்றிருக்கிறேன்.

கணிதபாட அலகுகள் ஒவ்வொன்றும் கொண்டுள்ள எண்ணக்கரு பற்றிய விளக்கத்தோடு என்னிடம் கேள்வி கேட்கும் எவருக்கும் பதில் சொல்லக்கூடிய வகையில் என்னை நான் தயார்ப்படுத்திக் கொண்டுள்ளேன்.

நான் ஒரு கணித ஆசிரியை என்பதில் எனக்குள் ஒரு பெருமையும் உண்டு.

எனது பள்ளியில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவருள் எண்பது வீதமானோர் சித்தியடையக் காரணமாய் நானே இருக்கிறேன் என்பதில் எனக்குப் புகழும் உண்டு.

அதிபர் பல வேளைகளில் எனது பாடத்தில் சிறப்புச் சித்தியெய்திய மாணவர்களின் மேம்பாட்டிற்கு நானே காரணம் என்றுரைக்கும் போதெல்லாம் நான் பெருமிதம் கொள்வேன்.

நான் எனது பாடவேளை தவறாமல் கணித பாடத்தைக் கற்பிக்கின்றேன்.

கணிதபாடம் கற்பிக்கும் இயந்திரமாக மாறிவிட்ட என்னிடத்தில் கணிதம் கற்க வேறு பாடசாலை மாணவர்களும் வருகிறார்கள்.

எந்த வகுப்பாயினும் அதற்குரிய பாடத்திட்டத்தை நன்கறிவேன் கணக்குகளைப் பற்றிய தெளிவும், அனுபவமும் என்னிடத்தில் இருக்கின்றன.

கணித பாடப் புத்தகங்களும், அதில் அச்சிடப்பட்டுள்ள கணக்குகளும், செய்முறைகளும் என் சிந்தனையில் விதைக்கப்பட்ட செழிப்பான விதைகளாகி விளைந்திருக்கின்றன.

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு எவ்வாறு கற்பிக்க வேண்டும் என்பதும்,

எனக்கு நன்றாகவே தெரியும்.

பரீட்சைக்கான விரைவான மீட்டற் பயிற்சிகளையும் மாணவர்களுக்கு நான் வழங்குகிறேன்.

மாணவர்களைப் பரீட்சைக்கு விடையளிக்க ஆயத்தம் செய்வதே எனது பணி என்பதாய் நான் எண்ணியிருக்கிறேன்.

கற்பித்தல் என்பது என்ன?

இப்பொழுதான் அது பற்றிச் சிறிது விளக்கம் பெறச் சிந்திப்பதாக எனக்குத் தெரிகிறது.

அன்றைய கணக்குகளைச் செய்தவர்களின் கொப்பிகளுக்குள் அவளின் கொப்பியைக் காணவில்லை.

பரப்பளவு என்றால் என்ன?

ஒரு செவ்வக வடிவத் தளத்தின் பரப்பளவை எவ்வாறு காண்பதென்று செய்முறையை மிகவும் இலகுவாக விளக்கியிருந்தேன்.

எனவே கணக்கைச் செய்தவர்கள் எல்லோரும் சரியாகச் செய்திருக்கிறார்கள்.

ஆனால்: என்னிடத்திற்குத் திருத்துவதற்கு வந்த அந்தக் கொப்பிக் கட்டுக்குள் தாரணியின் கொப்பியைக் காணவில்லை.

நீளம் x அகலம் = பரப்பளவு.

இதுதான் பரப்பளவைக் கண்டறியும் செய்முறை.

தாரணி இருந்த வகுப்புக்கு நான் மீண்டும் சென்றேன்.


இன்னமும் கணக்குச் செய்யாமல் இருப்பவர்கள் யாரென விசாரித்தேன்

அங்கே பலரும் பயிற்சிக் கொப்பிகளைத் திருத்துவதற்காக என்னிடத்தில் தங்கியிருந்தார்கள்.

தாரணி என்னிடத்தில் தனது கொப்பியைத் தரவில்லை.

எனக்குள் எழுந்த உணர்வலைகள் அவள் மீது வெறுப்பை விளைத்தது.

"எங்கே உனது கொப்பி?" என்று உரத்துக் கோபத்தோடு கேட்டேன்.



"இருக்கிறது மிஸ்" என்றாள்.

"ஏன் தரவில்லை?" என்றேன் மிக அழுத்தமாக

எனது வார்த்தைகள் அவளிடத்தில், நான் எதிர்பார்த்த மாற்றம் எதனையும் ஏற்படுத்தவில்லை. அவள் பார்வையில் ஒரு பெரிய கேள்விக் குறியே எழுந்திருந்தது.

தொடர்ந்து மேலெழும் என் கோபத்தைத் தணிக்கும் வகையில்

"மிஸ் எனக்கொரு சந்தேகம்" என்ற மென்மையான அவளது குரல் என்னை ஏதோ செய்தது.

அவளது சந்தேகம் எதுவாகவிருக்கும் என்பதை எண்ணிப் பார்பதற்கிடையில் அவளே பேசினாள்.

"ஒழுங்கான வடிவங்களுக்குப் பரப்பளவு காணும் முறையைச் சில வாய்ப்பாடுகளின் மூலம் சொல்லித் தந்தீர்கள். ஒழுங்கற்று வளைந்து நெளிந்து செல்வதும், நேர்கோட்டு எல்லைகளற்றதுமான ஒரு தளத்திற்குரிய பரப்பளவை அளந்துதானே மிஸ் பெறவேண்டும்!" என்றாள்

எனது சிந்தனை வேகம் கொண்டது. அவளது வார்த்தைகள் எனக்குள் ஏற்படுத்திய தேடலுக்கு நான் என்னைத் தயார்ப்படுத்த வேண்டியதாயிற்று.

ஒழுங்கற்ற தளவுருக்களை அளந்துதான் பெறவேண்டும்.

ஓர் ஒழுங்கற்ற தளவடிவத்தின் பரப்பளவைக் காண்பதற்காக: ஆரம்ப வகுப்புகளில் கற்பித்த போது ஒளி ஊடுருவும் சதுரக் கோட்டுத் தாள் ஒன்றைப் பயிற்சிக் கொப்பியில் வரைந்துள்ள ஓர் ஒழுங்கற்ற தளவடிவ வரைபின் மேல் வைத்து, அந்த வடிவத்திற்குள் அடங்கும் சதுரங்களை எண்ணிக் கணக்கிட்டுப் பரப்பளவைக் குறித்ததான அறிவு எனக்கு உண்டு.

ஆனால் உண்மையான தளத்தில் இவ்வாறு ஓர் அளக்கும் கருவியைப் பாவித்து அளக்க முடியாதே,

எவ்வாறு பதிலளிப்பதென எனக்குப் புரியவில்லை.

எனினும் தாரணியின் கேள்விக்குப் பதிலளிக்க வேண்டியது எனது கடமை.

இது பற்றிக் காணி அளந்து உறுதி எழுது-பவர்களிடம் கேட்கலாமோ என்றும் எண்ணினேன்.

"பின்னர் தெளிவாக அதுபற்றிக் கூறுகிறேன்" என்று சொல்லிக் கொண்டே அங்கிருந்து விலகினேன்.

மறுநாள் வகுப்புக்கு வந்தபோது தாரணியை நோக்கியே எனது கண்கள் சுழன்றன. அவள் என்னை ஒருமுறை கூர்ந்து நோக்கினாள்.

இவள் இப்பாடசாலைக்கு வருமுன்னர் எங்கே கற்றாள் என்பது எனக்குத் தெரியவில்லை. திடீரென அவளை எனது வகுப்பிற் கண்ட சிலநாட்களுக்குள் அவளது கேள்விகளால் என்னைத் தன்னித்திற்கு இழுத்தாள். தனது செய்கைகளால் என்னை அவள் ஈர்த்தாள்.

இப்பொழுது நான் அவளைப் பார்க்கிறேன்.

அவளின் பார்வை ஆழமாக ஊடுருவி எனக்-குள்ளே எதையோ தேடுவதாக உணருகிறேன்.

இன்று, சாதாரண பின்னக் கூட்டல் கணக்குகளை மீட்டற் பயிற்சியாகக் கொடுத்திருக்கிறேன்.

$\frac{1}{2} + \frac{1}{4}$ இதுவே நான் கொடுத்த பின்னக் கூட்ட-லொன்று.

அறிந்ததிலிருந்த அறியாததிற்கு,

கண்டதிலிருந்து காணாததிற்கு,

இலகுவானதிலிருந்து கடினமானதிற்கு,

என்பதாய்க் கற்றல் தொடர ஆர்வம் தரும் கற்பித்தல் ஒழுங்கினைப் பின்பற்றுவதில் எனக்கு நிறையவே விருப்பம் இருக்கிறது.

தாரணி கணக்கைத் திருத்துவதற்காகத் தனது கொப்பியை ஏனோ என்னிடம் தரவில்லை.

அதனை அறியும் நோக்குடன் கடுந்தொனியில் "ஏன் என்னிடம் கொப்பியைத் தரவில்லை" என்று கேட்டேன்.

"அது மிஸ் நீங்கள் தந்த பின்னக் கணக்குகளிலுள்ள பின்னங்கள் ஒவ்வொன்றும் காட்டும் பங்குகள் எங்கிருந்து பெறப்பட்டவை? அதுதான் குழப்பமாக இருக்கிறது" என்றாள்.

எனக்குள் குழப்பம் முளைவிடு முன்னரே அவள் பேச்சைத் தொடர்ந்தாள்.

"அது ஒவ்வொன்றும் ஒரே பொருளின் பங்குகளா? அல்லது வேறு வேறு பொருட்களின் பங்குகளா?" என்று கேட்டாள்.

அவளது கேள்வி என்னைச் சிந்திக்கத் தூண்டியது.

அவள் ஒவ்வொரு பின்ன எண்ணையும் அதன் அடிப்படைத் தோற்றத்தையும் அறிவதில் ஆர்வமாக இருந்தாள்.

வழமையாக அரைப்பங்கையும் காற்பங்கையும் கூட்டினால் முக்கால் என்பதே விடை என்ற பயிற்சிக்குள் பழக்கப்பட்டுப்போன எனக்கு அவளது கேள்வி அர்த்தமற்றதாகப்பட்டது.

எனினும் அவளது கேள்வி சாதாரண பின்னக் கூட்டல் எண்ணக்கருவில் தெளிவு பெறவேண்டும் என்பதற்காகக் கேட்கப்பட்டதாக எண்ணினேன்.

"நீங்கள் தந்த அரையும் காலும் ஒரே பொருளின் பங்குகளெனின் இக்கணக்குகள் சரி, ஆனால்: அரை ஒரு பொருளின் பங்காகவும் காற்பங்கு வேறொரு பொருளின் பங்காகவும் இருப்பின் அவற்றைக் கூட்ட இயலாதே" என்றாள்.

உண்மைதான்,

ஒரு பொருளின் அரைப்பங்கை வேறொரு பொருளின் காற்பங்குடன் நேடியாகக் கூட்ட இய-லாது.

தாரணியின் சிந்தனை சுதந்திரமானது. இவ்வாறு சிந்திக்க இவளுக்குக் கற்றுத் தந்தவர்கள் யார்? இத்தகைய கேள்வியைக் கேட்கத் தூண்டியவை எவை? விளக்கம் தேடி நிற்கும் அவளது செயலுக்கு எங்கே கரு உருவானது?

எனது கற்பித்தல் முறையிலா?

அல்லது நான் கற்றுக் கொண்டதும், பழக்கப்-படுத்திக் கொண்டதுமான செய்முறையிலா? இதற்-கான விளக்கமின்றிப் போனது, என்பதைப் புரிந்து கொள்ள இயலாமல் திண்டாடினேன்.

எனினும் தாரணியின் கேள்வியால் எழுந்த தேடல் என்னைச் சிந்தனைக்குள் வீழ்த்தியது.

கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் ஆகிய நான்கு திறன்களுக்குமான பயிற்சிகளில், ஒரே பொருளின் பங்குகளையே இடம் பெறச் செய்-கிறார்கள். என்பதில் நான் மேலும் தெளிவு பெற்றேன்.

அதனையே தாரணியின் கேள்விக்குப் பதிலாக கூறி விளக்கினேன்.

எனினும் நான் பெரிதுபடுத்தாமல் இதுநாள்வரை கற்பித்து வந்த ஒரு விளக்கமற்ற கணக்கிற்குத் தாரணியின் கேள்வியால் விளக்கம் பெறப்பட்டதாக உணர்கிறேன்.

தாரணியின் கேள்வி விளைத்த ஆச்சரியத்தால் சிறிது மௌனமானேன்.

தாரணி முன்னர் படித்த பாடசாலையிலும் இவ்-வாறுதான் கேள்விகள் கேட்டு ஆசிரியர்களைத் திணறடித்திருக்கிறாள்.

விடைகளைத் தெரிந்து வைத்துக் கொண்டு

ஆசிரியர்களைப் பரீட்சிப்பதாக அவர்கள் எண்ணுமளவிற்கு அவளது ஆழமான சிந்தனை பலரையும் உலுக்கியது.

அதனால், தண்டிக்கப்பட்டமையாலேயே அந்தப் பள்ளிக்குப்போக அவள் மறுத்தாள்.

இப்பொழுது எனது கணித வகுப்பிலும் அவள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் தேடுவதும், பதிலளிப்பதற்காக என்னை ஆயத்தம் செய்வதும் எனது கற்பித்தலுக்கு வந்த சவாலாகி விட்டது.

நான் பள்ளியில் நின்றபோதும், வீட்டுக்கு வந்த பின்னரும் அவளது வினாக்களுக்கு விடைகாணப் பல கோணங்களில் தர்க்க ரீதியாக கேள்விகளை எழுப்பிச் சிந்தித்தேன். எவ்வாறெனினும் விடைகாண வேண்டும் என்ற அவசியத்தை அவளது வினாக்கள் எனக்குக் கற்பித்தன.

அடுத்த நாள் கணிதபாடத்தின்போது தாரணியைப் பார்க்க எனக்குச் சிறிது தயக்கமாகவே இருந்தது. அவள் என்னிடத்தில் என்னைக் குழப்பும் வகையில் கேள்விகளைக் கேட்டுவிடக் கூடாது என்பதற்காக நான் அவளின் பார்வைக்கு விலகி இருக்க விரும்பினேன். ஆனால் அவளது கேள்விகள் என்னைச் சிந்திக்கத் தூண்டுகிறது என்ற உண்மையை என்னால் மறுக்க இயலவில்லை.

அவை என்னைக் கற்கத் தூண்டின.

அடுத்து, நான் கற்பிக்கவிருந்த பகுதியில் கவனம் செலுத்தினேன்.

புத்தகமும் கொப்பியும் கரும்பலகையும் எனது கற்பித்தலுக்குத் துணையாக இருக்கப் பாடத்தைத் தொடங்கினேன்.

கனவளவு எனும் கணித அலகிற்குள் எனது பயணம் தொடங்கியது.

ஒழுங்கான உருக்களுக்கான கனவளவைக் கணக்கிடும் முறையைப் புத்தகத்தில் விளக்கியிருந்தார்கள்.

கனவுரு, கோளம், ஒரு தொட்டியின் கொள்ளளவு என்றெல்லாம் வினாக்களும் விளக்கங்களும், அவற்றுக்கான செய்கை முறைகளும் தரப்பட்டிருந்தன.

கனவளவுகளைக் காண்போம்.

நீளம் x அகலம் x உயரம் = கனவளவு

இவ்வாறு மாறா விதிகளுக்குள் நின்று கணித பாடத்தைக் கற்பித்துப்பழகியவள் நான்.

*10மீ. நீளமும் 3மீ. அகலமும் 8மீ. உயரமுமான உள்ளளவும் கொண்ட நீர் நிரம்பிய தொட்டியினுள் 5மீ. நீளமும் 4மீ. அகலமும் 6மீ. உயரமும் கொண்ட இரும்புத் துண்டொன்று போடப்படுகிறது. அதனால் தொட்டியிலிருந்து வெளியேறிய நீர் போக எஞ்சியுள்ள நீரின் கனவளவு யாது?*

இது நானே தயாரித்த கணக்கு.

இக் கணக்கிற்கான விடையைக் காண மாணவர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வேகத்தோடு ஈடுபட்டிருந்தார்கள்.

சிலர் மிகவும் விரைவாகவே விடை கண்டு எழுதி என்னிடத்தில் கொண்டு வந்தார்கள்.

பார்த்தேன்.

தொட்டியிலுள்ள நீரின் கனவளவு

= நீளம் x அகலம் x உயரம் =

= 10மீ x 3மீ x 8மீ = 240ம$^3$

தொட்டியில் போடப்பட்ட இரும்புத் துண்டின் கனவளவு

= நீளம் x அகலம் x உயரம் =

= 5மீ x 4மீ x 6மீ = 210ம$^3$

∴ தொட்டியில் எஞ்சியுள்ள நீரின் கனவளவு

= 240ம$^3$ - 210ம$^3$ = 210ம$^3$

கணக்கைச் சரியாக மேற்கூறிய முறையில் எழுதிச் செய்தவர்களின் கொப்பிகளைப் பார்த்தேன்.

செய்கையை முறைப்படி அழகாக எழுதியிருந்தவர்களின் கொப்பிகளில் Good என ஆங்கிலத்தில் எழுதினேன். எனது கையொப்பமும் இட்டேன்.

தாரணி இன்னமும் நான் கொடுத்த கணக்கைச் செய்யவில்லை.

அவள் மேசைமீது தலையை வைத்துப்படுத்திருந்தாள். எனக்கு அவளை எழுப்பவும், அவளது செய்கையைக் கண்டிக்கவும் வேண்டும் என்பதாய் எண்ணம் பிறந்தது. ஆனால், அவளது செய்கையில் ஏதேனும் அர்த்தம் இருக்கலாம் என்ற ஐயம் எனக்குள் எழுந்ததால் அவளை அமைதியாகத் தட்டி எழுப்பினேன்.

"சுகமில்லையா தாரணி?" எனக் கேட்டேன்.

மேசையில் சாய்ந்திருந்த தலையை மெல்ல நிமிர்த்தி 'இல்லை மிஸ், எனக்கு இந்தக் கணக்கை வாசிக்கும் போது ஒரே குழப்பமாக இருக்கிறது மிஸ்" என்றாள்.

அவள் எதைத் தன் கருத்தில் வைத்துக்கொண்டு இவ்வாறு கூறுகிறாள் என்பது எனக்குப் புரியவில்லை.

என் கணக்கு அவளைக் குழப்பி விட்டதோ என எண்ணுவதற்கிடையில்,

"எங்கிருந்து மிஸ் இந்தக் கணக்கைப் பார்த்து எழுதினீர்கள்?" என்றாள்.

மாணவர்கள் கனவளவை விளங்கிக் கொண்டார்-

களா? என்பதை அறியவும், ஒரு தொட்டியிலிருந்து குறித்த கனவளவு நீர் வெளியேறினால் எஞ்சும் கனவளவு நீரைக் கணக்கிடுவதற்கும், பெருக்கல் கழித்தல் ஆகிய கணிதத் திறன்களைப் பயன்படுத்தும் விவேகத்தைப் பெற்றுள்ளார்களா? என்பதை அறியவுமே இக்கணக்கைக் கொடுத்திருந்தேன்.

நான் கரும்பலகையில் நானாக எழுதிய கணக்கே அது.

அதனை மாணவர் எழுதியபின்னர் உடனடியாக-வே நான் அதனைக் கரும்பலகையிலிருந்து அழித்து விட்டேன்.

இப்பொழுது அவளை கேள்வி என்னுள் எழுப்பிய சந்தேகங்கள் பல.

"ஏன்? எதற்காகக் கேட்கிறாய்?" என்று சற்று அதட்டலாகவே கேட்டேன்.

"இந்தத் தொட்டிக்குள் இந்த இரும்புத் துண்டைப் போட முடியாதே மிஸ்" என்றாள் அவள்.



எனக்குள் சிறிது சிந்தனை மயக்கம்.

இவள் என்ன கூறுகிறாள்!

எனது கணக்கின்படி, தொட்டியை நிறைத்த கனவளவு நீரிலிருந்து, குறைந்த கனவளவு நீரை வெளியேற்றினால், எஞ்சிய கனவளவு நீர் கணக்கிடப்-படக்கூடியதே!

அவ்வாறு கணக்கிடப்படுவதில் பிழையில்லையே!

எனது எண்ணத்தில் தவறிருப்பதாகத் தெரியவில்-லை அவளை ஆச்சரியத்துடன் பார்த்தேன்.

தொட்டியிலுள்ள நீரின் கனவளவு = 240மீ$^3$

தொட்டியிலிடப்பட்ட இரும்பின் கனவளவு = 240மீ$^3$

"மிஸ் தொட்டியின் நீளம், 10மீ அதன் அகலம் 3மீ ஆனால், அதனுள்ளே போடப்படும் இரும்பின் நீள, அகல, உயரம் யாவும் தொட்டியின் அகலமான 3 மீற்றருக்கும் அதிகமானதாகவே இருக்கிறது. எனவே இரும்பைத் தொட்டியில் போடமுடியாது" என்றாள்.

உண்மைதான்.

நான் கொடுத்தது கணக்கு

அதன்படி செய்கைகள் ஒழுங்காக எழுதப்பட்டு, கணக்கின் செய்முறை விளக்கத்தின்படி விடை கிடைப்பது என்னவோ உண்மைதான்.

ஆனால் தொட்டிக்குள் அவ்விரும்பு உட்செல்ல வாய்ப்பில்லை என்பதை அவள் விளக்கியபோது எனக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை.

நான் கணித ஆசிரியை என்பதை உறுதிப்படுத்த என்னால் இயலாமற் போய்விட்டதோ என ஐயுற்-றேன்.

இன்றைய பாடத்திட்டங்களும் கற்றல் கற்பித்தல் முறைகளும் எனக்கு பழக்கப்பட்ட நிலையில்!

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான கணித வினாத்தாளுக்கு விடையளிக்கும் பயிற்சிகளை வழங்குவதும்,

அவற்றைத் திருத்தி மீண்டும் மீண்டும் செய்முறை-களை மீளவலியுறுத்திக் கற்பித்து:

கற்பித்தலில் மேதாவி என்பதாய்ப் புகழ் பெற்றவள் நான்,

எனினும் தாரணியின் முன்னிலையில் குறுகிப் போனேனோ என்றதோர் ஐயம்.

தாரணி ஓர் ஆச்சரியக் குறி.

அவளைக் காணும் தோறும் எனக்குள் ஒரு விழிப்புணர்வு.

சொன்னதைக் கேட்டு சொல்லிய-படி செய்பவர்கள் இருக்கிறார்கள்.

சொல்வதைக் கேட்டு அதன்படி செய்யாதவர்களும் இருக்கிறார்கள்.

சொன்னதை விடுத்துச் சொல்லா-ததைச் செய்பவர்களும் இருக்கிறார்-கள்.

இவைகளுக்கும் அப்பால் சொல்-வதைக் கேட்டு, ஆராய்ந்து செய்வ-தைப் பிழையின்றிச் செய்பவர்கள் ஆயிரத்தில் ஒருவரே இருக்கின்றனர்.

அவர்களுள் இவளும் ஒருத்தி.

அதனையே தாரணியின் செய்கைகள் எனக்கு விளங்கின.

இதற்கும் மேலாக இன்று அவளிடமிருந்த என்னிடம் கேட்கப்பட்ட கேள்வி

கணிதம் என்றால் என்ன?

இப்படி ஒரு கேள்வியை இன்றுவரை எவருமே என்னிடத்தில் கேட்டதில்லை.

நான் சிந்தித்தேன்.

இலக்கங்களே கணிதம் என எண்ணியதுண்டு.

இலக்கங்களும் சில வார்த்தைகளும் சேர்ந்த கலவையே கணிதம் என்பதாய் ஒரு மயக்கம்.

கூட்டல். கழித்தல், பெருக்கல், வகுத்தல் ஆகிய குறியீடுகளின் சங்கமத்தோடு விளையாடும் எண்கள் வினாக்களாகி,

புதிர்களாகி எங்கள் மூளையைக் குழம்புகிறதா?

எனக்குள் புயல் வீசியது

கணிதம் என்றால் என்ன?

விடைகாண விழைந்த என்னிடத்தில் வினாக்கள் பல முளைத்தன.

பல்வேறு வாய்ப்பாடுகளுக்குள்ளும் விதிகளுக்குள்ளும் கணிதம் கட்டுண்டு கிடப்பதாய் ஒரு நொடிப் பொழுது எண்ணினேன்.

இல்லை!

இந்த உலகமே கணிதத்தினால் கட்டுண்டு கிடக்கிறது.

நாம் வாழும் இப்புவியைச் சூழ்ந்த யாவும் கணிதத்திற்குள் அமிழ்ந்து கிடக்கிறது.

உலகின் அசைவில், இயற்கையின் செழிப்பில், அதில் வாழும் உயிரினங்களின் செயற்பாட்டில், மனித வாழ்க்கையின் அனைத்து செயல்களிலும் கணிதம் கலந்து கிடக்கிறது.

அதனை விளங்கிக் கொள்ள வேண்டுமெனின் வாழ்வோடு இணைந்த கணிதம் கற்பிக்கப்பட வேண்டும்.

வாழ்க்கைக்கு வெளியே இலக்கங்களும் குறியீடுகளும் கணிதம் என்ற பெயரில் கற்பிக்கப்படுவதாக உணர்ந்தேன்.

செயற்பாடுகளும், உண்மைத் தன்மையும் அற்ற கணித பாடம் தாரணியைச் சிந்திக்கத்தூண்டியது.

அதுவே விடைகாண வேண்டிய தேவையோடு. அவளிடத்தில் கேள்விகளாய் விளைந்தன.

பரீட்சைக்காக அல்ல, வாழ்க்கைக்கான கல்வியே இன்றைய தேவை என்பதைத் தாரணியைக் காணும் தோறும் நான் நினைக்கிறேன்.

வாழ்வின் செயலொழுங்கில் கணிதத்தின் தேவையைப் புகுத்திக் கற்பிக்க வேண்டும் என்ற நியாயத்தை அவளது கேள்விகள் எனக்குப் புகட்டின.

நான் இப்பொழுதுான் நல்லதோர் ஆசிரியையாக என்னை ஆக்கிக் கொள்ள முயற்சிக்கிறேன்.

தாரணியைப் போன்ற எத்தனையோ விவேகிகளை நாம் எமது எல்லைப்படுத்தப்பட்ட கல்வி முறையால் தொலைத்து விட்டோம். இந்நிலை தொடர்வதை அனுமதிக்க முடியாது.

கல்வி மக்களின் வாழ்க்கைக்காக.

கணிதம் மக்களின் வாழ்க்கைக்காக.

ஒவ்வொருவரும் வாழ்வதற்கான கல்வியே இன்று வழங்கப்பட வேண்டும்.

இதனைப் புரிந்து செயற்படும் ஆவல் எனக்குள் பொங்கியது.

மாணவரின் கற்றல் வேகத்திற்கும் விவேகத்திற்கும் ஏற்ப என்னை நான் வளப்படுத்திக் கொள்ளும் வழிகள் அனைத்தையும் தேடுகிறேன்.

தாரணியைப் போன்று தேடலுடன் புறப்படும் மாணவருக்கான கற்றலுக்கு உதவ, நான் என்னைத் தயார்ப்படுத்துகிறேன்.

தாரணி மலர்ந்த முகத்துடன் இன்று மகிழ்ந்து சிரிப்பதைக் காணுகிறேன்.

அவளைப் போன்று சிந்திக்கத் தூண்டும், கேள்விகள் கேட்கும் மாணவர்கள் பலரை என்னுடைய மாற்றத்தினூடாகக் காணுகிறேன்.

அவர்கள் தமது செயற்பாடுகளினூடாக வாழ்க்கையை அறியவும், அதன் உண்மையைத் தேடவும் முயலுகிறார்கள்.

அதற்காக என்னை, நானாக்க விழைகிறேன்.

தாரணியே எனது வழிகாட்டி.

அவளே எனது எஜமானி.

அவளைப் போன்ற துணிச்சல் மிக்க மாணவர்களை உருவாக்குவதே எனது பணி என்பதை நான் இன்று தெரிந்துள்ளேன்.

அவர்களின் உந்துதலாயேயே கல்வியின் தேவையை நோக்கிய புதிய திசைக்குக் கற்பித்தலை நகர்த்த முடியும் என்று திடமாக நம்புகிறேன்.

கல்வி பயனுடையதாகக் கற்றல் தெளிவுடையதாக, உண்மையும் செயலொழுங்கும் மிக்க கற்பித்தல் அவசியமாகிறது.

நான் தாரணியை மிக விருப்புடன் நோக்குகிறேன்.

அவள் தன்னைச் சூழ்ந்த கேள்விகளைத் திரட்டி என் முன்னே ஒவ்வொன்றாக வீசுகிறாள்.

நான் துணிச்சலோடு அவற்றை எதிர் கொள்ளுகிறேன்.

எனக்குள் ஓர் எழுச்சி.

எனக்குள் ஒரு நிம்மதி.

நான் கற்பிக்கிறேன் என்ற உண்மையை அணைத்தபடி நிமிர்கிறேன்.






ந.பார்த்திபன்,
வ/தேசிய ஆசிரிய கல்வியியளாளர்,
கல்வியியற் கல்லூரி, வவுனியா.


இலக்கணம்

*தற்காலத்தில், மாணவரிடம் அவர்கள் கற்கும் பாடங்கள் பற்றி வினவுமிடத்து இலக்கணமும் கணிதமும் ஆங்கிலமும் கடினமான பாடங்கள் என்ற விடையையே பெறக்கூடியதாக இருக்கின்றது.*

# தமிழ் இலக்கணமும் ஆசிரியர், மாணவரது தற்போதைய மனப்பாங்கும்

தற்காலத்தில், மாணவரிடம் அவர்கள் கற்கும் பாடங்கள் பற்றி வினவுமிடத்து இலக்கணமும் கணிதமும் ஆங்கிலமும் கடினமான பாடங்கள் என்ற விடையையே பெறக்கூடியதாக இருக்கின்றது. இவற்றுள் "இலக்கணம் கடுமையானது என்றும் கஷ்டப்பட்டுப் படிப்பதனால் அதிக பயன் இல்லை என்றும் கருதுகிறார்கள்" என இலக்கண வித்தகரும் பண்டிதருமான இ.நமசிவாயம் குறிப்பிடுகிறார். "பள்ளிகளில் மாணாக்கர்கள் பயிலும் பாடங்களுள் மாணாக்கர்கட்கு அதிக அருவருப்பையும் அச்சத்தையும் தருவது இலக்கணப் பாடமேயாகும்" என்றும் "இன்று பெரும்பாலும் மாணாக்கர் காதில் புகாத உலக்கையாகவே காட்சியளிக்கின்றது" என்றும் "புலவர் வகுப்புப் போன்ற மேல் வகுப்புகளிலும் மாணாக்கர்கள் இலக்கணத்தைச் சிம்மசொப்பணமாக கொள்ளுகின்றனர்" என்றும் "நடைமுறையில் இதை இன்றியமையாததாக்க கருதுவதில்லை" என்றும் டாக்டர்.ந.சுப்புரெட்டியார் குறிப்பிடுகிறார்.

உரை நடையின் வருகையும் ஆக்க இலக்கியங்களின் பெருக்கமும் அவற்றில் பெருமளவு ஈடுபாடும் இலக்கண விதிப்படி எழுத வேண்டுமென்ற நினைப்பையே தகர்த்துவிட்டன. "தமிழ்ச் சிதைவு வெள்ளம் தலைக்கு மேல் போய்விட்டது. இனி அதனை அடக்க முடியாது. பல எழுத்தாளர்களும் படைப்பாளர்களும் மொழி மரபு பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் தமிழ்ச் சிதைவுப் பணியைத் திறம்படச் செய்து கொண்டுள்ளனர். தொலைக்காட்சியும் திரைப்படமும் மிகப் பேரளவில் செம்மையாகச் செய்து தீர்க்கின்றன" எனப் பேராசிரியர் மா.நன்னன் குறிப்பிடுகிறார்.

"தமிழ் மொழிப் பரீட்சையில் தமிழ் இலக்கணத்துக்கு போதிய இடமளிக்கப்படுவதில்லை என்றும் இலக்கண வினாக்களிற்கும் கவனஞ் செலுத்தாமலே தமிழ் மொழியில் மாணவர் தனது இலக்காகிய திறமைச் சித்தியை அடையலாமென்பது ஆசிரியரும் மாணவரும் அறிந்து கொண்ட பகிரங்க இரகசியம்" என்று பண்டிதர். க. நாகலிங்கம் குறிப்பிட்டுள்ளார். இக்கருத்தை "பரீட்சையில் இலக்கணத்துக்குரிய இடம் வழங்கப்படாமையின் அது கல்லாமலுஞ் சோதனையில் சித்தியெய்தலாம் என்ற கருத்தில் அதனைக் கற்பித்தல் கற்றல்களிற் சோர்வு காணப்படுகிறது" என இலக்கண வித்தகர், பண்டிதர். இ.நமசிவாயமும் வலியுறுத்துகிறார்.

இன்று, பரீட்சைகளில், ஒப்படைகளில், ஆய்வுகளில் இலக்கண விதிகளுக்கமைய கடுமையாக பார்க்காத நிலையில், பரீட்சிக்கப்படாததால் இதனை முக்கியமான விடயமாக யாரும், குறிப்பாக புதிய தலைமுறை பார்ப்பதில்லை. பாடசாலைகளில் மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் கூட செம்மையான மொழிப் பிரயோகத்தில் பெருமளவு அக்கறை கொள்ளாத நிலையில் ஏனைய பாட ஆசிரியர்களின் நிலைப்பாடு சொல்லுந் தரமன்று. இந்நிலையில் மாணவர்களது ஆர்வத்தையும் ஆற்றலையும் சொல்ல வேண்டுமா? தாய்மொழியின் இன்றியமையாமையை எல்லாத் துறைகளில் உள்ளவர்களும் உணர்ந்து வருகின்றனர். தாய்மொழியிலேயே எல்லாப் பாடங்களும் கற்பிக்க வேண்டியிருத்தலின் காரணமாக மொழி ஆசிரியர் மட்டுமன்றி பிற பாடத்தினரும் மொழி அறிவில் கவனம் செலுத்த வேண்டும். அப்போது தான் மாணவர்களும் பின்பற்றுவர்.

இன்று தமிங்கிலம், தங்கீலீஷ் எனக் குறிப்பிடுமளவிற்கு தமிழ் மொழி தரங் குறைந்துள்ளது. தமிழுக்காக உயிர் கொடுத்துக் கொண்டிருக்கும் நிலையில் இழப்புக்களும் அவலங்களும் துயரங்களும் நிறைந்துள்ள இக்காலத்தில் தமிழுக்கு உயிர் கொடுங்கள் என்று இரந்து கேட்கும் நிலையில் தமிழ் அபிமானிகள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இந்தச் சிதைந்து போன சீரழிந்த, போலியான தமிழ் உணர்ச்சிக்கு நல்லதோர் எடுத்துக்காட்டு தமிழ்நாட்டின் (தமிழகம்) நிலை.

'மெட்ராஸ்' என்று சொல்வதை எதிர்த்துப் புரட்சி செய்து சென்னை என்று சொல்ல வைத்த தமிழ் நாட்டினர் இன்று தமிழை மறந்து விட்டனர். "தமிழ் நாட்டுச் சூழலில் தமிழ் தான் இல்லை" என்று பாவேந்தர் பாரதிதாசன் குறிப்பிட்டார். மெல்லத் தமிழ் இனிச் சாகும் என்று அஞ்சிய மகாகவி பாரதியின் அச்சம் நீங்கி, இணையத்தில் தமிழ் உலக வலம் வருகின்றது என்று மனப்பால் குடிக்கின்ற போதும் தமிழ் மொழியின் வளர்ச்சியில் வீழ்ச்சி கண்டுள்ளது என்பதைப் பல அறிஞர்களும் சுட்டிக்காட்டுகின்றனர். இதற்கு இலக்கணம் பற்றிய ஆசிரியரதும் மாணவரதும் மனப்பாங்கே மிக முக்கிய காரணமெனலாம்.

பிறந்த சில ஆண்டுகளில் குழந்தை தான் வாழும் சூழ்நிலையில் பெற்றோர், உற்றார், உறவினர் சமூகம் ஆகியோரின் மூலமாக தாய்மொழியை மிக விரைவாகவும் எளிதாகவும் கற்றுக் கொள்கின்றது. இன்று அன்றாடத் தேவைக்காவே கற்கின்றது. ஆயினும் பல நூற்றாண்டுகளாகப் பண்பட்டு இலக்கிய இலக்கண வளம் படைத்த மொழியை அறிவியல் நிலையில் வைத்துக் கற்பதற்கு இலக்கண அறிவு முக்கியம் என்பதை ஆசிரியரும் மாணவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். ஆனால் இதில் மிகவும் கசப்பான உண்மை யாதெனில் "தமிழ் இலக்கணம் கடினமான பாடமென்பது ஆசிரியர்களூடாக மாணவர் மனத்திலும் ஆழப் பதிந்துள்ளது" எனப் பண்டிதர் க.நாகலிங்கம் குறிப்பிடுவது போல், "மாணாக்கர் இலக்கணத்தை வெறுப்பதற்கு இலக்கணம் காரணமன்று; மாணக்கர்களின் அறிவு நிலையும் காரணமன்று, கற்பிக்கும் ஆசிரியர்களே காரணம் என்று கூற வேண்டும்" என டாக்டர். ந.சுப்புரெட்டியார் குறிப்பிடுவது போல் கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்கள் காரணமாகின்றனர்.

மொழியின் அமைதியே இலக்கணம் எனப்படும். ஒரு மொழியின் தனித் தன்மை பேணப்பட வேண்டுமாயின் அதன் இலக்கணம் பேணப்படுதல் அவசியம்.

தமிழ் இலக்கணக் கல்வி தற்போது கல்விக் கூடங்களில் புறக்கணிக்கப்பட்டு வருவது யாவரும் அறிந்த உண்மை. "பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்க முன்பிருந்த தமிழ் மொழிக் கல்வி அதன் பின் இல்லை என்பதும் கசப்பான உண்மையாகும்" எனத் தமிழ் மொழிப் பற்றாளர்கள் குறிப்பிடுகின்றார். இதனைப் பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் பின்வருமாறு குறிப்பீடுகின்றார். "கடந்த நூற்றாண்டில் ஐரோப்பியத் தமிழறிஞர்களின் தொடர்பினாலும் இந்த நூற்றாண்டில் நவீன மொழியியல் கோட்பாடுகளின் வளர்ச்சியினாலும் தமிழ் இலக்கண சிந்தனையிலும் ஆராய்ச்சியிலும் பெரிய முன்னேற்றங்களும் வளர்ச்சிகளும் ஏற்பட்டுள்ளன. கடந்த சுமார் அரை நூற்றாண்டு காலத்துள் தமிழ் இலக்கண மரபு பற்றியும் தமிழ் மொழியின் பண்டைக்கால, தற்கால இலக்கண அமைப்புப் பற்றியும் மொழியியல் நோக்கில் பல்வேறு கருத்துக்கள், ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன. இருந்தும் இவற்றின் பயன் எதுவும் பாடசாலை, கல்லூரி மாணவர்களையோ, ஆசிரியர்களையோ இன்னும் சென்றடையவில்லை. தமிழ் கற்பித்தலும் தமிழ் மொழிப் பாடநூல்களும் இன்னும் பழைய இலக்கணச் சிந்தனை முறைகளையே முதன்மைப்படுத்துகின்றன. மேற்கூறிய பேராசிரியர் எம்.ஏ.நுஃமானின் கூற்றின் அடிப்படையில் தான் தற்கால ஆசிரியர்களையும் மாணவர்களையும் தமிழ் இலக்கணம் சென்றடையவில்லையோ என்று கருதவும் இடமுண்டு.

எவ்வாறாயினும் மொழியியல் துறையின் ஆற்றலோடும் மரபுவழி இலக்கணப் பரிச்சயத்தோடும் மொழியியல் துறை விற்பன்னர்கள் குறிப்பிடுகின்ற நவீன கருத்துக்களையோ, பழந்தமிழ் இலக்கணவியலாளர்களது அக்கறையான, அவசியம் பின்பற்ற வேண்டிய விடயங்களையோ இன்று ஆசிரியர்களும் மாணவர்களும் பின்பற்றவில்லை என்பது விசனத்துக்குரிய நிலையாகும். தமிழ் மாணவர் தமிழ் மொழி இலக்கணத்தை வரன் முறையாகக் கற்கும் வாய்ப்பை அநுசரணையிலுள்ள இன்றைய பாடத்திட்டங்கள் வழங்குவதில்லை என்ற குற்றச்சாட்டை இலக்கியக்

கலாநிதி பண்டிதர். மு. கந்தையா பகிரங்கப்படுத்துகிறார். இவ்வாறு மரபு வழி இலக்கணத்தையோ நவீன மொழியியலையோ ஆசிரியர்களும் மாணவர்களும் பின்பற்றவில்லை என்பதும் பாடத்திட்டங்களும் பாடசாலைகளும் கவனத்திற் கொள்ளவில்லை என்பதும் இறுதியாகத் தமிழ்மொழியையே பாதிக்கின்றன என்பதைத் தமிழ் அபிமானிகள் உணர்ந்து கொள்ள வேண்டும். மேலும் இலக்கண சுத்தமாகப் பேசுவதோ எழுதுவதோ அவசியமோ எனக் கேட்கும் போக்கும் இன்று நிலவுகின்றது.

"மொழியறிவு மற்றெல்லாப் பாடங்களிலும் கற்றல் - கற்பித்தல்களில் தாக்கம் ஏற்படுத்துவதால் அது எவராலும் புறக்கணிக்கப்படத் தக்கதன்று. ஆனால் மாணவர்க்குரிய இலக்கியப் பகுதியின் விளக்கத்துக்கு இன்றியமையாத இலக்கண அம்சங்கள் மட்டும் சமவாயக் கல்வி ரீதியில் தழுவிக் கொள்ளும் முறையே நடைமுறையில் உள்ளது" என்று இலக்கிய கலாநிதி மு. கந்தையா குறிப்பிடுகின்றார். ஆக, பரீட்சைகளிலும் இலக்கணம் ஒரு சார்பு வகையாய்ப் பரீட்சிக்கப்படுவதன்றி முதன்மைத்துவம் வழங்கப்படும் ஒன்றாகவில்லை. இந்நிலையில் இலக்கண சார்பான வினாக்களைப் புறக்கணித்தும் தமிழ் மொழிப் பாடத்தில் மாணவர் வேண்டுந் திறமைச் சித்தி பெறும் வாய்ப்புத் தாராளமாக உண்டு. இந்நிலை தமிழ் மொழி கற்கும் மாணவர் தமிழ்த்திறமை பெறுதலில் பெருமளவு பின்னடைவைத் தோற்றுவிப்பதால் தமிழ் இலக்கியங்கள் கூடப் பயன் இழக்கும் நிலைக்குத் தள்ளப்படுகின்றன. தமிழ் இலக்கியங்களைச் சுவைக்கும் திறனற்று மனனம் செய்து ஒப்புவித்து பரீட்சைப் பெறுபேற்றைச் சாதகமாக்கிக் கொள்ளும் நிலையே ஏற்படுகின்றது. இதனால் மொழியின் மீது ரசனை இல்லாமல், பற்றில்லாமல் கட்டாயத்தின் காரணமாக படிக்கின்ற அவலம் ஏற்படுகின்றது.

"முந்துதமி ழிலக்கியமாக காவியங்கள்

முட்டறுத்துட் பொருள்விளங்கித் தெளிவதற்குச்

செந்தமிழிலக்கண விளக்க மென்னுஞ் சிறப்பு வேண்டுமென"

அருட்கவி சீ. விநாசித்தம்பி குறிப்பிடுகின்றார். இலக்கணத்தின் அவசியத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு மொழியின் தனித்தன்மை அதன் இலக்கணத்தைப் பேணிக் கொள்வதில் தான் தங்கியுள்ளது. இல்லையாயின் அது கால, இடங்களால் தாக்குண்டு ஒன்று பலவாகும் நிலை எய்திச் சிதையும். மொழி ஓரிடத்தில் வழங்குவது போல மற்றோரிடத்தில் வழங்காது போய்விடும். இந்நிலையில் அடிப்படை இலக்கணம் தான் ஒன்றாய் எவ்விடத்தும் எக்காலத்தும் வழங்கச் செய்து மொழியைக் காக்கின்றது. தமிழர்கள் தமது பழைய நூல்களில் மிக முந்தியதாகப் பேணி வைத்திருப்பது தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலையே என்பது அவர்களின் மொழிக்காப்பின் அக்கறையைக் காட்டுகின்றது" என இலக்கண வித்தகர் இ.நமசிவாயம் குறிப்பிடுகின்றார்.

மேற்கூறிய கருத்தை மறுதலிக்கின்ற மொழியியலாளர்கள், குறிப்பாக பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் இன்றைய காலகட்டத்திற்கு பொருந்தாது எனக் கூறுவதோடு, இலக்கணம் கற்பிக்கப்படுகிறது, அதுவும் பழமையானது என்று கருத்துரைப்பதையும் பார்க்கிறோம். "பாடசாலைகளிலும் உயர் நிறுவனங்களிலும் தமிழ் இலக்கணம் பெரிதும் நன்னூலை அடிப்படையாகக் கொண்டே இன்று வரை கற்பிக்கப்பட்டு வருகின்றது என்றும் நன்னூல் சுமார் எழுநூறு அல்லது எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் (கி.பி 12 அல்லது 13ஆம் நூற்றாண்டு) எழுதப்பட்டது என்றும் பண்டைக்கால மற்றும் இடைக்காலத் தமிழின் அமைப்பையே அது விளக்குகிறது என்றும் நன்னூலார் காலத் தமிழில் இருந்து இக்காலத் தமிழ் பெருமளவு மாற்றம் அடைந்துள்ளது." என்பது பேராசிரியர் எம்.ஏ.நுஃமானின் வாதம்.

இந்நிலையில் மரபுவழி இலக்கணகாரர்களின் மாற்றத்தை விரும்பாத, மாறக்கூடாது என்ற கருத்தைக் கொண்டிருக்கும் மனப்பாங்கும், இவற்றை மறுதலிக்கின்ற நவீன மொழியியலாளர்களின் மனப்பாங்கும் இணைய வேண்டிய நிலை உள்ளது. அதாவது மரபுவழி இலக்கணக் கருத்துக்களோடு நவீன மொழியியல் கருத்துக்களையும் இணைக்க வேண்டியது மொழி கற்பித்தல் துறையில் இன்று அவசரத்தேவையாக உணரப்படுகின்றது. இக்கருத்தை, இதன் அவசியத்தை இன்றைய மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் கவனத்திற் கொள்ள வேண்டும். இதற்கு இடையூறாகப் பல கருத்துக்களை மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் முன்வைக்கின்றார்கள் இதனால் மரபு வழி இலக்கணத்தோடு மொழியியலை இணைப்பதில் உடன்பாடற்ற போக்கைக் கடைப்பிடிக்கிறார்கள்.

இலக்கணம் கற்பித்தல் முற்றாக மாற்றியமைக்கப்பட வேண்டும் என்ற கருத்தை முன்வைக்கும் மொழியியலாளர்கள், மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் எல்லோருக்கும் மொழியியல் பயிற்சி கிடைக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள். உண்மையில் இன்று மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் மரபுவழி இலக்கணத்தைக் கற்றவர்களாகவே இருக்கின்றனர். அதுவும் பரீட்சைக்காக கற்று சித்தியெய்திய நிலையில் மரபுவழி இலக்கணத்தை விட்டு விலகிட முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

பால பண்டிதர், பண்டிதர், சைவப்புலவர் பட்டங்களுக்காக மரபுவழி இலக்கணங்கள் துறைபோகக் கற்பவர்களும் உண்டு. ஏனைய மொழி ஆசிரியர்கள் பரீட்சை நோக்கிப் படித்து பின் படிப்பிக்கும் நோக்கில் நினைவுபடுத்தி என வாய்பாடாக இலக்கணத்தைக் கொண்டிருக்கின்றனர். இவர்களுக்கு மொழியியல் அறிவு, பயிற்சி என்பன அறவே இல்லை

என்றே கூறலாம். அதே வேளை அண்மைக்காலங்களில் மொழியியல் துறையில் ஈடுபாடு கொண்டவர்களும், மொழியியலை பல்கலைக்கழக மட்டத்தில் பயின்றவர்களும் இம்மாற்றத்தை நடைமுறைப்படுத்த முடியாதவர்களாக உள்ளனர். மேலும் இந்த மாற்றம் எங்கே இருந்து ஆரம்பிப்பது என்பதும் சர்ச்சைக்குரிய விடயமாகவே காணப்படுகிறது. நவீன மொழியியலாளர்கள், குறிப்பாக பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் "க.பொ.த உயர்தர வகுப்புக்குரிய புதிய இலக்கணப் பாடத்திட்டமும் அதனைத் தழுவி அமைந்த பாடநூல்களும் இம்முயற்சியில் ஈடுபட்டு படிப்படியாகவே செய்யப்பட வேண்டுமென்று" கூறுகிறார். இக்கருத்தானது முன்வைக்கப்பட்டு ஏறத்தாழ பத்து வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் இன்றுவரை நடைமுறைப்படுத்தவில்லை.

அண்மைக்கால சம்பங்கள், செயற்பாடுகளின் மூலமாக இதனை உணரலாம். வேற்றுமை தொடர்பான மொழியியலாளர்களின் கருத்தானது பின்வருமாறு அமைகின்றது. "குறிப்பாக மூன்றாம் வேற்றுமை என்று தமிழ் இலக்கண நூல்கள் கூறும் வேற்றுமையை இரண்டு வேற்றுமைகளாகக் கொள்ள வேண்டும் என்ற வகையில் தமிழில் வேற்றுமை ஒன்பது என்பது மொழியியலாளர்களின் கருத்து. ஆனால் மரபுவழி இலக்கணகாரர் வேற்றுமை எட்டு என தொன்று தொட்டு குறிப்பிடுகிறார்கள். இந்த வேற்றுமைப் பாகுபாட்டை இன்றைய ஆசிரியர்கள், மொழியியளார்கள் கூற்றுப்படி ஒன்பதாக ஏற்றுக் கொள்வதானது அடிப்படை இலக்கணத்தை (தொல்காப்பியர் காலத்திலிருந்து வந்த) மாற்றுவது போலாகும் என்பதோடு, அது நிர்ணயிக்கப்பட்ட ஒன்று, மாற்ற முடியாதது மாற்றக் கூடாது என்றும் கருதுகிறார்கள். இவ்வாறு மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் மாறாத போது மாணவர்கள் மாறுவதென்பது சாத்தியமில்லை என்றாகிறது.

கடந்த வருட (2007) புதிய தமிழ் மொழிப் பாடநூல் தயாரிப்பின் போது (தரம் 7) வேற்றுமை ஒன்பது எனக் குறிப்பிடுவது பல பிரச்சினைகளைக் கொண்டு வரும் எனக் கருதி பழையபடி எட்டாகவே குறிப்பிடப்பட்டது. இங்கு பல பிரச்சினைகள் எனக் குறிப்பிட்டது; மாற்றத்தை விரும்பாத, மாற்றம் தேவையில்லாத சிக்கல், அப்படியே இருப்பதால் (இவ்வளவு காலமும் இருந்தது போல இருக்கட்டும்) ஒருவருக்கும் பிரச்சினை இல்லை எனப் பல காரணங்கள் முன்வைக்கப்பட்டன. இறுதியில் மீண்டும் வேற்றுமை எட்டு என்றே எழுதப்பட்டுள்ளது.

இந்நிலையில் இன்றுள்ள மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் மொழியியல் பற்றிய தெளிவைப் பெற வேண்டும். இன்றைய மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் மரபுவழி இலக்கணத்தில் நீண்ட காலப் பரிச்சயம் கொண்டவர்கள். இவர்கள் பயிற்றப்பட்ட ஆசியர்களாகவோ பட்டதாரி ஆசியர்களாகவோ இருப்பினும் மொழியியல் பற்றிய அறிவும் தெளிவும் இவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்பதை மனங்கொள்ள வேண்டும். இவர்களுக்குப் பயிற்சியளித்த பயிற்சிக் கல்லூரிகளும், இன்றைய தேசிய கல்வியியற் கல்லூரிகளும் மொழியியல் தொடர்பான விளக்கத்தை, பயிற்சியைக் கொடுக்க பாடத்திட்டத்தில் இடமில்லை. அதேவேளை பல்கலைக்கழகத்தில் கூட இவர்கள் தமிழை ஒரு பாடமாக கற்பதாலோ அல்லது தமிழை ஒரு சிறப்புத் துறையாக கற்பவர்களுக்கொ மொழியியல் பற்றிய விளக்கம் தெளிவாக, ஆழமாகக் கொடுக்கப்படுவதில்லை. தமிழை ஒரு சிறப்புத் துறையாகத் தெரிவு செய்து அதிலும் மொழியியல் துறையைத் தெரிவு செய்தால் தான் மொழியியல் பற்றிய ஆழமான தெளிவான விளக்கம் கிடைக்கிறது இந்நிலையில் மொழியியல் துறையில் கற்றவர்கள் கூட, அதாவது மிகக் குறை-

**மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் மொழியியல் பற்றிய தெளிவைப் பெற வேண்டும். இன்றைய மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் மரபுவழி இலக்கணத்தில் நீண்ட காலப் பரிச்சயம் கொண்டவர்கள்.**

வானவர்களே மொழி கற்பிக்கும் ஆசிரியர்களாக இருப்பதால் மொழியியல் துறை பாடசாலை மட்டங்களில் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

மேலும் மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் பாடத்திட்டத்திற்கமைய க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த) வகுப்புகளில் மொழி கற்பிக்கும்போது மொழியியலைக் கற்பிக்க வேண்டிய தேவை இல்லாது போகிறது. க.பொ.த (உ/த) ற்குக் கற்பிப்பதாயினும் மொழியியல் அறிமுகம் என்ற வகையில் மொழியியல் தொடர்பாக ஒரு மேலோட்டமான அறிவைக் கொடுப்பதுடனே இக்கற்றல் முடிந்து விடுகிறது. இதே நிலை தான் தேசிய கல்விக் கல்லூரிகளிலும் தமிழை ஒரு சிறப்புப் பாடமாக அல்லது துணைப்பாடமாக கற்பிக்கப்படும் போது ஆசிரியர்களுக்கான பாடத்திட்டத்திலும் காணப்படுகிறது. குறிப்பாக அவர்களுடைய பாடத்திட்டத்தில் 90% மான விடயம் மரபு வழி இலக்கணமாகவே உள்ளது.

இந்நிலையில் மொழியியல் துறையைக் கற்ற ஆசிரியர்கள் கூட மொழியியலை ஆழமாகக் கற்பிக்க வேண்டிய நிலை இல்லாததால் மொழியியல் துறை அறிவும் பயனும் பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டிய நிலை இல்லாது போகிறது. இத்தகைய நிலையை ஆசிரியர்களுக்கும் மொழியியல் பற்றிய ஆர்வத்தையும் தெளிவையும் கொடுக்கத் தவறிவிடுகிறது. பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் குறிப்பிட்டது

போல் க.பொ.த உயர்தர வகுப்புக்குரிய புதிய இலக்கணப் பாடத்திட்டமும் அதனை தழுவி அமைந்த பாடநூல்களும் படிப்படியாக இம்முயற்சியில் ஈடுபட வேண்டுமென்பது சாத்தியமற்றதாக, இதுவரை நிறைவேற்றப்படாததாகவே காணப்படுகின்றது.

மொழியின் இயல்பை விபரிப்பதே இலக்கணம் என்பர். மொழி எப்படி இயங்க வேண்டும் என்ற விதிப்பது இலக்கணமாகாது. சிறப்பாக நன்னூலும் தொல்காப்பியமும் மொழியின் இயல்பை விளக்கும் விளக்க நூல்களாகும். இவை விதி நூல்களாகா. மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் மொழி எப்படி இயங்க வேண்டுமென்பதைத் தெரிந்து கொள்ளும் அதேவேளை ஒலியின் ஈட்டத்தைத் தெரிந்து குறிப்பாக பேச்சு மொழியின் பரம்பலுக்கேற்ப அதற்கு முக்கியத்துவம் அளிக்கும் மொழியியலில் கவனம் செலுத்த வேண்டும். மரபுவழி இலக்கணத்தின் பரிச்சயத்தோடு மொழியியலையும் தெளிவாகப் புரிந்து கொண்டு மொழியைக் கற்பிக்க வேண்டும். மொழி என்பது ஒலி வடிவத்தையே குறிக்கிறது. வரிவடிவம் என்பது ஒலி வடிவத்தின் நிழற்படம் போன்றது. கருத்துக்கு ஒலி வடிவம் அறிகுறி: ஒலி வடிவத்தின் அறிகுறி வரிவடிவம். இன்றைய மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் ஒலி வடிவத்தைக் கருத்திற் கொண்டு மொழி கற்பித்தலை மேற்கொள்ள மொழியியல் பரிச்சயம் அவசியமாகின்றது.


ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல தமிழ் மொழிப் பாடத்தில் இலக்கணப் பகுதியைத் தவிர்த்து ஏனைய விடயங்களில் கவனம் செலுத்தி சித்தியை பெறுகின்றனர் என்பது போல் தற்போதைய மொழிப் பரீட்சைகளில் மொழியியலைத் தவிர்த்து ஏனைய இலக்கண வினாக்களிற்கு விடையளித்து விடுவது மொழியியல் பற்றிய ஆர்வமின்மையே காட்டுகின்றது. இந்நிலை மாற்றப்படவேண்டும். மரபுவழி இலக்கணமும் மொழியியலும் கட்டாயமாக்கப்பட வேண்டும்.

மரபுவழி இலக்கணத்தில் தெளிவுள்ள-வர்களே மொழியியலிலும் நன்கு தெளிவுள்ளவர் ஆகின்றனர். மரபுக் கவிதைத் தெளிவுள்ளவர்கள் புதுக்கவிதையிலும் சோபிப்பது போல் இங்கும் மரபு வழி இலக்கணத்திற்கும் நவீன மொழியியலுக்கும் தொடர்பு இருக்க வேண்டும். இலக்கண மொழியியல் பகுதிகளைத் தவிர்த்து மொழிப் பாடச் சித்தி சாத்தியமில்லை என்பதால் இலக்கண, மொழியியல் வினாக்கள் கட்டாயமாக விடையளிக்கப்பட வேண்டிய இறுகத்தைப் பரீட்சைகள் முன்வைக்க வேண்டும். அவ்வாறாயின் இலக்கணமும் மொழியியலும் சரிவரப் புரிந்து அவற்றில் தேர்ச்சி பெற்றவர்களாக எல்லோரையும் உருவாக்கும்.

---

- மாணவர்களின் வாழ்க்கையைப் பொறுத்தவரையில் பாடசாலைகள் அவர்களுக்கு முக்கியமான தனிப்பட்ட, சமூகச் சூழலை வழங்குபவவை; ஒவ்வொரு பிள்ளைக்கும் உடல் ரீதியாகப் பாதுகாப்பான, உணர்வு ரீதியான பாதுகாப்பான உளரீதியான மகிழ்ச்சியாகச் செயற்படக்கூடிய சூழலைப் பிள்ளை நேயப் பாடசாலை வழங்கும்.
- விளைத்திறன் உள்ள, யாவரையும் உள்ளடக்கிக் கொள்ளும் வகுப்பறையை உருவாக்குவதில் மிகப் பிரதானமான, தனியொரு காரணியாக விளங்குபவர் ஆசிரியராவார்.
- பிள்ளைகள் இயல்பாகவே கற்பதில் விருப்புடையவர்கள்; ஆனால் கற்பதற்கான பிள்ளைகளின் ஆற்றல் பல சந்தர்ப்பங்களில் அழித்தொழிக்கப்படுகின்றது. அல்லது சிதைக்கப்படுகின்றது. பிள்ளைகளுக்குக் கற்கும் ஆற்றல் உண்டு என்பதைப் பிள்ளை நேயப் பாடசாலை அங்கீகரிக்கின்றது; கற்போன், அவனது கற்றல் செயற்பாடு என்பவற்றுக்கு முக்கியத்துவமளிக்கும் வகையிலான ஒருபாடசாலைக் கலாசாரத்தையும், ஆசிரியர்களின் நடத்தைப் பாங்குகளையும் பாட ஏற்பாட்டையும் அப்பாடசாலை வழங்கும்.
- பாடசாலையானது பிள்ளை நேயப் பாடசாலை என்ற அந்தஸ்தைப் பெறவேண்டுமாயின் குடும்பங்களின் ஒத்துழைப்பு, ஆதரவு, பங்கேற்பு என்பன அப்பாடசாலைக்கான ஒரு அத்தியாவசிய தேவை;
- பிள்ளைகள் கற்பதற்கான ஊக்கத்தைப் பெறுவதற்கான ஒரு கற்றல் சூழலைப் பிள்ளை நேயப் பாடசாலை ஏற்படுத்தும் ஆசிரியர்கள் பிள்ளைகளை மனமுவந்து வரவேற்பவர்களாய், சிநேகமனப்பாங்குடன் நோக்குபவர்களாய், அவர்களுடைய சகல ஆரோக்கிய மற்றும் பாதுகாப்புத் தேவைகளை நிறைவு செய்பவர்களாய் இருப்பர்.

(நன்றி: பேராசிரியர் சோ. சந்திரசேகரன் - "அகவிழி")



அன்பு ஜவஹர்ஷா

தெரிந்து கொள்வோம்...

*ஆசிரியர்களுக்கு உள்ள உரிமைகளையும், சலுகைகளையும் அறியும் போது ஆசிரியர்கள் மகிழ்ச்சியடைகின்றார்கள். இவைகளை பெற்றுக் கொள்ளவுள்ள சட்டங்களையும், விதி முறைகளையும் அறியத் தரும்போது அம்மகிழ்ச்சி தொடருவதாக இல்லை.*

# ஆசிரியர்களுக்கான விடுமுறை சில தகவல்கள்

குணாம்சமான கல்விக்கு மட்டுமல்ல, சகல மனித, பௌதீக வள அபிவிருத்திக்கான விடயங்களுக்கும், பாடசாலைகளில் இருந்தே வழிகாட்டல்கள் ஆரம்பிக்க வேண்டும் என்ற கருத்தில் அபிப்பிராய பேதங்கள் இருக்காது என எண்ணத் தோன்றுகின்றது.

உயிர்களை முகாமைப்படுத்தும் இடமாக பாடசாலை இருப்பதால் முகாமையாளர்களான அதிபர்கள் சட்டத்தோடு மட்டும் இதைக் கொண்டு நடாத்த முடியாதுள்ளது. அத்தோடு நியதிச் சட்டங்களை மீறி ஆளணிகளை கைக்குள் வைத்திருக்கவும் முடியாதுள்ளது. கணக்காய்வு உத்தியோகஸ்தர்கள் உட்பட மேலதிகாரிகள் நிதி பிரமாணங்களில் மட்டுமே கவனமாக இருப்பதால் இதுவும் பூரணமாக சாத்தியப்படாது.

ஆசிரியர்களுக்கு உள்ள உரிமைகளையும், சலுகைகளையும் அறியும் போது ஆசிரியர்கள் மகிழ்ச்சியடைகின்றார்கள். இவைகளை பெற்றுக் கொள்ளவுள்ள சட்டங்களையும், விதி முறைகளையும் அறியத் தரும்போது அம்மகிழ்ச்சி தொடருவதாக இல்லை. இது இயல்பானதே நிருவாகிகள் பக்கம் சார்வதாக குற்றச்சாட்டுக் கூட முன் வைக்கப்படுகின்றன.

எவ்வளவு ஆளுமைமிக்க திறமையான, திட்டமுள்ள அதிபராக இருந்தாலும், காலையில் சில ஆசிரியர்கள் பாடசாலைக்கு வராவிட்டால் அவரது முழுத் திட்டமும் கேள்விக்குரியாகிவிடும். மேலதிக ஆசிரியர்கள் இருக்கும் பாடசாலைகளில் மாற்று ஏற்பாடுகள் இருக்கும் ஆனால் பெரும்பாலான தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் ஆசிரியர் தட்டுப்பாடு நிலவுவதால் ஆசிரியர் லீவு பாடசாலை திட்டமிடுதலுக்கு சவாலாக இருந்து வருகின்றது.

கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள 2003/38 இலக்கம் கொண்ட ஒரு பாடசாலையின் ஆசிரியர் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கில் ஆசிரியர்களின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல் என்ற சுற்றறிக்கையில் ஆசிரியர்களின் கற்பித்தல் நேரம் தொடர்பாக பின்வரும் விதியுண்டு.

பாடக்கற்பித்தலில் ஈடுபடுகின்ற ஆசிரியர்கள் வாரமொன்றுக்கு பொதுவான 40 நிமிடங்களைக் கொண்ட 35 பாடவேளைகளும், பாடக் கற்பித்தலுக்குப் புறம்பாக, வகுப்புக்களுக்குப் பொறுப்பாகவுள்ள ஓர் ஆசிரியர் அவ்வாறு வகுப்புக்குப் பொறுப்பாக இருக்கும் காலங்களில் 33 பாட வேளைகளும் கற்பித்தல் வேலைகளில் ஈடுபடவேண்டும். உயர்தரப் பரீட்சைப்பாடங்களை கற்பிப்பதற்காக இயன்ற

சகல சந்தர்ப்பங்களிலும் பட்டதாரிகளையே ஈடு-படுத்தல் வேண்டும். அவர்கள் ஒரு வாரத்திற்கு குறைந்தபட்சம் 30 பாட வேளைகளாவது கற்பிக்க வேண்டும்.

இது குறைந்த பட்ச கற்பித்தல் நேரமாகும். 42 பாடங்களை ஒய்வில்லாமல் கற்பிக்கும், ஒரு பாட நேரத்தில் இரண்டு மூன்று வகுப்புகளுக்கு கற்பிக்கும் ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் எமது பாடசாலை-களில் சேவையாற்றி வருவதை இங்கு குறிப்பிட வேண்டும்.

சராசரியாக ஒரு ஆசிரியர் ஒரு நாளைக்கு ஆறு பாட வேளைகளில் குறைந்தபட்சம் கற்பித்தலில் ஈடுபடுகின்றார். 45 பிள்ளை கொண்ட வகுப்புக்கு பொறுப்பாக இருக்கும் அவர் ஒரு நாள் வகுப்புக்கு வராவிட்டால்

45 x 40 x 6 = 10,800 நிமிடங்கள் அல்லது 180 மனித மணித்தியாலங்கள், வேறு ஏற்பாடு இல்லா-விட்டால் பலனிழந்து போகும். இது ஒரு சிறு கணக்-கீடு மட்டுமே. ஆசிரியர்களும் மனிதர்களே. அவர்-களுக்கும் மற்றைய அரசாங்க சேவையாளர்களைப் போல சகல தேவைகளும் உண்டு. சுகவீனங்கள் உண்டு குடும்பங்கள் உண்டு. ஆகவே தேவைக்காக லீவு எடுக்கும் ஆசிரியர்களை யாரும் குறை சொல்ல முடியாது. ஆசிரியர்கள் அல்லாத அரசாங்க சேவை-யாளர்கள் லீவு எடுப்பது பற்றி யாரும் அலட்டிக் கொள்வதும் இல்லை. இவற்றை முன்னுரையாகக் குறிப்பிட்டு ஆசிரியர் லீவு பற்றிய இந்த தகவல்களை எழுதவேண்டியுள்ளது.

ஆசிரியர்களின் விடுமுறை தொடர்பாக தாபனக்-கோவையில் தனியான பிரிவு ஒன்று உண்டு. ஐம்-பதுகளில் வெளியிடப்பட்ட கல்வி அறிவுறுத்தல் 1,2 ஆகிய சட்டக்கோவையிலும் பல விடயங்கள் சொல்-லப்பட்டுள்ளன. புதிது புதிதாகப் பல சுற்றறிக்கைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஆனாலும் பாட-சாலைகளில் லீவு தொடர்பான விடயங்கள் பற்றிய தெளிவின்மை காணப்படுகின்றது.

ஆசிரியர்களுக்கு விடுமுறை ஓர் உரிமையன்று. அது ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் ஒரு சலுகை-யாகவே கருதப்படுகின்றது. சேவையின் முக்கியத்-துவத்தையும் அவசரத் தன்மையையும் கருதியே விடுமுறை வழங்கப்படுகின்றது. இதனால் அனுமதிக்-கப்பட்ட விடுமுறையைக் குறைக்கவோ அல்லது விடுமுறையிலிருக்கும் ஓர் ஆசிரியரைச் சேவைக்கு அழைப்பதற்கோ விடுமுறையை அனுமதிக்கும் அதிகாரிக்கு உரிமை உண்டு.

லீவை எடுக்கும் முறை, அனுமதித்தல் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக அதிபர், ஆசிரியர்-கள் தெளிவு பெறாமை காரணமாக பலவித முரண்-பாடுகள் பெரும்பாலான பாடசாலைகளில் காணப்-படுகின்றன. இனி லீவுவகைகளையும், லீவு எடுக்கும் முறைகளையும் அவை தொடர்பான விதிகளையும் பார்ப்போம்.

**ஆசிரியர்களுக்கான லீவை பின்வருமாறு வகைப்-படுத்தலாம்.**

- ☆ சமயோசித விடுமுறை
- ☆ சுகவீன விடுமுறை
- ☆ பிரசவ விடுமுறை
- ☆ ஓய்வு விடுமுறை
- ☆ அரைச் சம்பள, முழுச் சம்பள மற்ற விடு-முறை
- ☆ விசேட விடுமுறை
- ☆ கடமை விடுமுறை
- ☆ அவசர விபத்து விடுமுறை
- ☆ தந்தையர்களுக்கான விடுமுறை
- ☆ படிப்பு விடுமுறை
- ☆ இலங்கைக்கு வெளியே விடுமுறை
- ☆ குறுகியகால விடுமுறை
- ☆ அரைநாள் விடுமுறை
- ☆ பரீட்சை விடுமுறை
- ☆ "இத்தா" விடுமுறை
- ☆ ஆசிரியர் உதவியாளர் விடுமுறை
- ☆ கட்டாய விடுமுறை

இவ்வாறு பலவிதமான லீவுகளை ஆசிரியர்கள் பெற்றுக் கொள்ளலாம். இவைகளோடு தாமதமாக வருதல், குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் ஆசிரியர்களும், அதிபர்களும் அறிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் நிறைய இருக்கின்றன.

**விடுமுறை கோரும் போது பின்வரும் தகவல்-களை உள்ளடக்கிய விண்ணப்பத்தில் கோருதல் வேண்டும்**

1. விண்ணப்பதாரியின் பெயர்
2. தேவையான விடுமுறை நாட்களின் எண்-ணிக்கை
3. விடுமுறை தொடங்கும் திகதி
4. விடுமுறைக்கான காரணம்
5. மீண்டும் சேவைக்க வரும் திகதி
6. விடுமுறை சமயோசிதமா? சுகயீனமா? கடமையா? என்பது பற்றிய விபரங்கள்
7. விண்ணப்பதாரியின் கையொப்பம்
8. திகதி

மேல் சொல்லப்பட்ட சகல விடயங்களையும் நிரப்பியே விண்ணப்பப்பத்திரத்தை ஒப்படைக்க வேண்டும். இந்த விண்ணப்பப் படிவம் அரசாங்கத்தால் அல்லது பாடசாலை நிருவாகத்தால் வழங்கப்படுதல் வேண்டும் அல்லது மேற் சொல்லப்பட்ட விடயங்களை உள்ளடக்கி கையெழுத்தால் தயாரிக்கப்பட்ட படிவத்திலும் விண்ணப்பிக்கலாம்.

விடுமுறையில் செல்ல முன்னர் கோரிய விடுமுறை அனுமதிக்கப்பட்டிருத்தல் வேண்டும். இரண்டு பிரதிகளில் விண்ணப்பித்து அனுமதி பெற்று ஒரு பிரதியை விண்ணப்பதாரி வைத்திருத்தல் பாதுகாப்பானது. முன்னறிவித்தல் இன்றி சேவைக்கு வராதிருத்தல் தன்னைத் தானே சேவையிலிருந்து அகற்றிக் கொண்டதற்குச் சமனாகும். எதிர்பாராத சந்தர்ப்பங்களில் கூடிய விரைவில் அதற்குரிய முறையான விண்ணப்ப பத்திரத்தில் அனுமதி பெற வேண்டும். தந்தி அடித்தல் ஒரு முறையாகும். ஆனால் இதை தொடர்ந்து செய்ய முடியாது.

அவசரமாக உண்டாகும் சுகவீனத்திற்காக முதல் தினம் லீவை அனுமதிக்காமல் லீவு பெறவேண்டிய சந்தர்ப்பங்கள் உண்டாவதுண்டு. இப்படியான சந்தர்ப்பங்களில் பதிவுத் தபாலில் லீவு கோரி அதிபருக்கு கடிதமொன்று அனுப்புதல் வேண்டும். தந்தி மூலம் இப்படிக் கோரினாலும் இவை லீவு விண்ணப்பத்தில் அனுமதிக்கப்படல் வேண்டும். ஆசிரியர்களின் சமயோசித, சுகவீன விடுமுறைகளை பாடசாலை அதிபர் அனுமதிப்பார். அதிபரின் விடுமுறைகளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் அல்லது வலயக் கல்விப் பணிப்பாளர் அனுமதிக்க வேண்டும். பிரசவ விடுமுறை, கடமை விடுமுறை, சம்பளமற்ற விடுமுறை, சயரோக குட்டரோக விடுமுறை, இலங்கைக்கு வெளியே விடுமுறை, விபத்து விடுமுறை போன்றவைகளில் இலங்கைக்கு வெளியே விடுமுறையை தவிர மற்றைய விடுமுறைகளை வலயக் கல்விப் பணிப்பாளர் அனுமதிக்கலாம். தாபனக் கோவையுடன் தொடர்புறாத கடமை லீவு போன்ற விடுமுறைகள் கோட்டக் கல்விப் பணிப்பாளரால் அனுமதிக்கப்படலாம்.

### இலங்கைக்கு வெளியே விடுமுறை

இலங்கைக்கு வெளியே செல்லும் விடுமுறை மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவின் விதப்புரையுடன் மாகாண ஆளுநர் அனுமதிப்பார். வெளிநாட்டுப் படிப்பு விடுமுறை தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளரின் அனுமதி பெறப்படல் வேண்டும்.

கல்வி அமைச்சின் 2008/3 இலக்கச் சுற்றறிக்கையின்படி மூன்று மாதங்களுக்கு குறைவான லீவுக்கு அதிபர், வலயக்கல்விப்பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளரின் சிபார்சுடன் பொது 126 இலக்க விண்ணப்பப் படிவத்தை நிரப்பி சுயவிபரக் கோவை அறிக்கை, நியமனம் நிரந்தரமாக்கப்பட்ட கடித்தின் அத்தாட்சிப் படுத்தப்பட்ட பிரதியுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

கல்வி அல்லது தொழில் சம்பந்தமான மேல் சொல்லப்பட்ட ஆவணங்களுடன் வெளிநாட்டு தொழில்/கல்வி தொடர்பான திகதியிடப்பட்ட கடிதம், அரசாங்கத்திற்கு நிதி பாக்கி இல்லையென உறுதிப்படுத்தப்பட்ட கடிதம், ஒப்பந்தப்பத்திரம் ஆகியவற்றுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

முறையாக வெளிநாட்டு விடுமுறை அனுமதி பெறாத ஆசிரியர்கள் தமது விருப்பப்படி சேவையை விட்டு விலகியவர்களாக கருதப்படுவார்கள். தேசிய பாடசாலை ஆசிரியர்களின் வெளிநாட்டு விடுமுறை கல்வி அமைச்சின் செயலாளரால் அனுமதிக்கப்படும். குறைந்த பட்சம் மூன்று மாதங்களுக்கு முன்னர் விண்ணப்பங்கள் வலயக்கல்வி காரியாலயங்களுக்கு ஒப்படைக்கப்பட வேண்டும்.

### சமயோசித விடுமுறை

நிரந்தர சேவையிலிருக்கும் சகல ஆசிரியர்களும் அவசர, சொந்த தேவைகளுக்காக வருடமொன்றுக்கு 21 நாட்கள் இந்த விடுமுறையைப் பெற்றுக்கொள்ளலாம். இந்த விடுமுறையை விடுமுறை கோரும் தினத்திற்கு 7 நாட்களுக்கு முன் அதிபருக்கு விண்ணப்பித்து அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும்.

வருடமொன்றுக்கு முழுச் சம்பளத்துடன் 21 நாட்கள் இவ்விடுமுறையைப் பெற முடியும். ஒரே முறையில் 6 நாட்களுக்கு மேல் இவ் விடுமுறையைப் பெற்றுக்கொள்ள இயலாது. அத்தியாவசிய அலுவல்களுக்கு 7 நாட்கள் பெற்றுக் கொள்ளலாம். சமயோசித விடுமுறை வழங்கப்படக் கூடிய காரணங்கள் பின்வருமாறு.

1. விண்ணப்பதாரரின் சுகவீனம்
2. கிட்டிய குடும்பத்தினரின் சுகவீனம் அல்லது மரணம்
3. குற்றவியல் அல்லது அரசாங்க வழக்குத் தவிர்ந்த ஏனைய வழக்குகளின் பொருட்டு நீதிமன்றங்களுக்குச் செல்வதற்கு
4. விண்ணப்பதாரரின் செந்த நலன் கருதிய உத்தியோக ரீதியான நேர்முக பரீட்சைக்காக அலுவலகத்தால் அழைக்கப்படும் போது
5. ஆசிரியரின் விவாகம்
6. கல்வித் திணைக்களத்தின் தொழில் சார்ந்த பரீட்சைகள், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்கு.

விடுறைகள் கணிக்கப்படும் போது சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை, பகிரங்க விடுமுறைகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

## சுகவீன விடுமுறை

ஆசிரியர்கள் 2 நாட்கள் மட்டும் வைத்திய அத்தாட்சிப் பத்திரம் இன்றியும், அதன் பின்னர் வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தைச் சமர்ப்பித்தும் இதனைப் பெற்றுக் கொள்ளலாம். முன்னர் 14 நாட்களுக்கு மேல் இதை பெறுவதனால் அரசாங்க வைத்திய அதிகாரியின் வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். தற்போது பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கை இலக்கம் 27/92 (1992.10.07 திகதி) 27/97 (1) (1992.11.11 திகதி) ஆகியவற்றின் படி பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர் ஒருவரின் வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தைச் சமர்ப்பித்து தேவைப்படும் எவ்வளவு நாட்களுக்கும் இதனைப் பெற்றுக் கொள்ளலாம்.

## பிரசவ லீவு

2005-02-03 அன்று வெளியிடப்பட்ட 04/2005 இலக்க சுற்றறிக்கையின்படி ஆசிரியைகளுக்கு ஒவ்வொரு குழந்தை பிறப்புக்காக 84 நாட்கள் முழுச் சம்பள லீவும், 84 நாட்கள் அரைச் சம்பள லீவும் 84 நாட்கள் சம்பளமற்ற லீவும் 2005-01-01 தொடக்கம் பெற்றுக் கொள்ளலாம். நிரந்தர, தற்காலிக, அமைய, பயிலுநர், உத்தியோகத்தர்களுக்கு இது உரியதாகும்.

பிரசவ லீவு 84 நாட்களை கணக்கிடும் போது அரச லீவு நாட்கள், சனி, ஞாயிறு ஆகிய தினங்கள் சேர்க்கப்படலாகாது. ஆனால் பாடசாலை தவணை விடுமுறை நாட்கள் இதில அடங்க மாட்டாது. இந்த விடுமுறை நாட்களில் வேலை நாட்களின் எண்ணிக்கை லீவில் கழிக்கப்படும்.

இதற்குப் பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் குழந்தையை பராமரித்துக் கொள்வதற்கான அரைச் சம்பளத்துடனான 84 நாட்களைக் கணிக்கும் போது அரச விடுமுறை சனி, ஞாயிறு நாட்கள் அரைச் சம்பள மற்ற லீவு நாட்களாகக் கருதப்படும். இதற்குப் பின்னர் பெறப்படும் 84 சம்பளமற்ற லீவு நாட்களையும் கணிக்கும் போது இவ்வாறே கணித்தல் வேண்டும்.

## ஓய்வு விடுமுறை

பாடசாலைத் தவணை விடுமுறைக் காலங்களிலேயே ஆசிரியர் இவ்விடுமுறைக்கு உரித்துடையவர். குறிப்பிட்ட ஓர் ஆண்டில் ஒரு நாள் வேலை செய்திருப்பினும், பாடசாலை விடுமுறைக் காலம் சம்பளமற்ற விடுமுறைக்குட்படினும் ஆசிரியர் பாடசாலை விடுமுறைக் காலத்துக்கு முழுச் சம்பளத்துக்கும் உரித்துடையவர் ஆவர்.

## விசேட விடுமுறை

சில நோய்களுக்காக விசேட லீவு அனுமதிக்கப்படுவதுண்டு. அதன்படி சயரோகத்திற்காக முழுச் சம்பளத்துடன் 9 மாதங்கள், 2 வெவ்வேறு காலங்களில் இந்த விடுமுறையைப் பெற்றுக் கொள்ளலாம். முதன் முறை லீவு எடுத்தபின் 1 வருடங்கள் சேவையாற்றிய பின்னரே மறுமுறை லீவைப் பெறலாம்.

குஷ்டரோகத்திற்காக முழுச் சேவைக்காலத்திலும் ஒருமுறை மட்டுமே முழுச் சம்பளத்துடன் 22 மாதங்கள் லீவைப் பெறலாம். புற்றுநோய்க்காக 6 மாதம் முழுச் சம்பளத்துடன் விடுமுறையை பெற்றுக்கொள்ளலாம். மேற்சொல்லப்பட்ட விடுமுறைகளைப் பெற்றுக்கொள்வதற்காக குறிப்பிட்ட நோய்கான வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

வயிற்றோட்டம், மகாமாரி, தையோறிற், மஞ்சள் காய்ச்சல் போன்ற மற்றவர்களிடமிருந்து தனிமைப்படுத்த வேண்டிய நோய்களுக்காக சம்பளத்துடன் கூடிய விசேட விடுமுறைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அரசாங்க சுற்றறிக்கை இலக்கம் 32/93 (1993-12-24 திகதியின்) படி வைத்திய சபையினால் அனுமதிக்கப்படும் எந்த வகைநோய்கும், வைத்திய சபையினால் பரிந்துரை செய்யப்படும் சத்திர சிகிச்சையின் பின்னர் பராமரிப்பதற்காக சம்பளத்துடன் கூடிய 6 மாத லீவை பெற்றுக்கொள்ளலாம்.

## விபத்து விடுமுறை

தாபனக் கோவையின் xii ம் பிரிவின் 9 வது உப பிரிவு 1993-09-21ம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 22/93 படி திருத்தப்பட்டுள்ளது. இது மீண்டும் 2005/05/04 திகதிய சுற்றறிக்கைப்படி திருத்தப்பட்டு அவசர விபத்து காரணமாக லீவு வழங்கலும், நஷ்டஈடு வழங்கலும் பின்வருமாறு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

1. கடமையை நிறைவேற்றும் போது.
2. கடமை நிறைவேற்றப்படாத சந்தர்ப்பங்களிலும் பொதுவாக கடமை விடயத்திற்குட்பட்ட ஏதாவது செயற்பாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது.
3. கடமையில் ஈடுபட்டிருக்கும் நேரத்தில் உண்டாகும் செயற்பாட்டின் பிரதிபலனாக.
4. வதிவிடத்திலிருந்து கடமைக்கு செல்லும் போது, கடமை ஸ்தானம் வரை அல்லது கடமை நிலையத்திலிருந்து கடமைக்காக செல்லும் போது அல்லது சேவை நிலையத்திற்கு மீண்டும் வரும் நிலையத்திலிருந்து கடமைக்காக செல்லும் போது அல்லது சேவை நிலையத்திற்கு மீண்டும் வரும் போது உண்டாகும் அவசர விபத்துக்களுக்காக நஷ்டஈட்டையும் விடுமுறையையும் பெற்றுக் கொள்ளலாம்.

அவசர விபத்து நடைபெற்றவுடன் காயமடைந்த ஆசிரியரை அதிபர் வைத்திய சிகிச்சைக்கு அனுப்ப வேண்டும். லொக் புத்தகத்தில் இது பற்றி குறிப்பிட வேண்டும். காயத்தின் படியும் வைத்திய சபையின்

சிபார்சின்படியும் பின்வருமாறு விடுமுறை அனுமதிக்கப்படும்.

1. ஒரு வருடத்துக்கு முழுச் சம்பளத்துடன் விடுமுறை. அதன் பின்னர் 6 மாத காலத்திற்கு அரைச் சம்பளத்துடன் விடுமுறை.
2. மேல் 1ல் சொல்லப்பட்ட ஒரு வருட லீவிற்கு மேலதிகமாக தமக்குரிய லீவை பெற்றுக் கொள்ள ஆசிரியருக்கு உரிமையுண்டு.

நிரந்தரமான ஊனமுற்றவர்களுக்கு 55 வயது நிறைவு பெறும் வரை அவருக்குரிய சம்பளம் வழங்கப்படும். இது தொடர்பான விபரங்கள் 2008/12/29 திகதிய சுற்றிக்கை உள்ளது.

### கடமை விடுமுறை

பின்வரும் காரணங்களுக்காக வழங்கப்படலாம். குற்றவியல் வழக்குகளில் அல்லது அரசாங்க வழக்குகளில் சாட்சி சொல்லுவதற்கு

1. குற்றவியல் வழக்குகளில் அல்லது அரசாங்க வழக்குகளில் சாட்சி சொல்லுவதற்கு
2. யூரிசபையிற் கடமையாற்றுவதற்கு.
3. படைப் பயிற்சிக்குச் செல்வதற்கு
4. முன்னிற்கும் படைக் கடமைக்கு அழைக்கப்பட்டால்.
5. சாரணர் கொண்டாட்டம், விஞ்ஞானச் சங்கக் கூட்டம், திணைக்களங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் என்பவற்றில் பங்கு பற்றுவதற்கு
6. திணைக்களத்தால் நடாத்தப்படும் புத்தாக்க வகுப்புகளுக்குச் செல்வதற்கு
7. சயரோக விடுமுறையின் பின் கிளினிக் செல்வதற்கு
8. கல்விப் பணிப்பாளரின் பின் கிளினிக் செல்வதற்கு
8. கல்விப் பணிப்பாளரின் அங்கீகாரத்துடன் பரீட்சை மேற்பார்வையாளராக அல்லது நோக்குநராகக் கடமை புரிவதற்கு
9. கல்வி விடயம் சம்பந்தமாக அமைச்சரால் அல்லது செயலாளரால் அழைக்கப்பட்டால்,
10. தொழிற்சங்கங்களின் வருடாந்தப் பொதுக் கூட்டங்களுக்குச் செல்வதற்கு

### படிப்பு விடுமுறை

ஆசிரியர் காலாசாலையிற் பயிற்சி பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டால் மட்டுமே ஓர் ஆசிரியர் இவ்விடுமுறைக்கு உரித்துடையவராவார். முழுச் சம்பளத்துடன் 2 வருடங்களுக்கு இவ்விடுமுறை வழங்கப்படும். இப்பயிற்சியைப் பூர்த்தி செய்தபின் குறைந்த பட்சம் 8 வருடங்களுக்கு அரசாங்கத்தின் கீழ் சேவை புரிய ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.

### பல்கலைக்கழகத்திற்கான விடுமுறை

ஓர் ஆசிரியர் அங்கீகரிக்கப்பட்ட பட்டப் படிப்பு நெறிக்கான பயிற்சிக்கு அமைச்சினால் தெரிவு செய்யப்பட்டால், முழுச் சம்பளத்துடன் 2 வருடங்களும், சம்பளமின்றி 1 வருடமும் விடுமுறையாகப் பெறலாம். படிப்பை முடித்த பின்னர் குறைந்த பட்சம் 8 வருடங்களுக்கு அரசாங்கத்தின் கீழ் சேவை புரிய ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.

தற்போது விஞ்ஞான முதுமாணி, கலாநிதி, முகாமைத்துவ மேல்படிப்பு போன்றவைகளுக்கும் ஆங்கில உயர்கல்விக்கும் இந்தக் கற்றல் விடுமுறை வழங்கப்படுகின்றது. எந்த லீவாக இருந்தாலும் உரிய அதிகாரியால் அனுமதிக்கப்பட்ட பின்னரே பெற்றுக்கொள்வது பாதுகாப்பானதாகும்.

### கல்விப் பட்டப் பின்படிப்பு விடுமுறை

இதற்கென தெரிவு செய்யப்பட்டால், முழுச் சம்பளத்துடன் ஒரு வருடம் விடுமுறையாக வழங்கப்படும். குறைந்த பட்சம் 5 வருடங்களுக்கு அரசாங்கத்தின் கீழ் படிப்பு முடித்தபின் சேவை புரிய ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.

இவைகளைவிட தொலைக்கல்வி உட்பட பல்வேறு பயிற்சிகளில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு ஒரு நாள், இரு நாள் லீவுகள் வழங்கப்படுகின்றன.

### இலங்கைக்கு வெளியே விடுமுறை

இவ்விடுமுறையை பாடசாலை விடுமுறை நாட்களில் பெற்றுக் கொள்ளலாம். பாடசாலை விடுமுறை தவிர்ந்த மற்றைய நாட்கள் சம்பளமற்ற விடுமுறையாகக் கருதப்படும். வைத்திய தேவை, புண்ணிய ஸ்தலங்களைத் தரிசித்தல் போன்ற காரணங்களுக்காக இவைகளை பயன்படுத்துகின்றனர்.

ஹஜ் விடுமுறை எடுக்கும் ஒருவர் டிசம்பர் 15ம் திகதி இப்புனித பயணத்தை மேற்கொண்டால் ஜனவரி 2ம் திகதி பாடசாலை தொடங்குமாக இருந்தால் இடைப்பட்ட 17 நாட்கள் சம்பளமுள்ள லீவாகவும் மீண்டும் அவர் வந்து 20ம் திகதி கடமையைப் பொறுப்பேற்றால் பாடசாலை தொடங்கிய பின்னுள் 18 நாட்கள் சம்பளமற்ற லீவாகவும் கருதப்படும்.

### குறுகிய விடுமுறை

7.30 மணி தொடக்கம் 2.00 மணி வரை சேவையாற்றும் பாடசாலை நேரத்திற்குள் ஒரு மணி நேரத்திற்குட்பட்டதாக மாதத்திற்கு இரண்டு முறை குறுகிய நேர லீவு பெறலாம்.

இதற்காக பாடசாலையின் கட்டாயமாக பேண வேண்டிய குறுகிய லீவுப் புத்தகத்தில் பதிந்த பின்னர் இதைப் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலை தொடங்க

முன்னர் இதைப் பெற முடியாது எனக் கல்வி அமைச்சர் அறிவித்துள்ளார்.

### அரை நாள் விடுமுறை

அரை நாள் லீவு பெறுவதற்காக குறைந்த பட்சம் பாடசாலை நேரத்தில் அரைப்பகுதி அல்லது 2½ மணி நேரம் அதில் எது அதிகமானதோ அந்தளவு வேலை செய்திருக்க வேண்டும்.

### பரீட்சை விடுமுறை

தொலைக் கல்வி இறுதிப் பரீட்சைகள், பட்டப்பின் படிப்பு பரீட்சைகள் பல்கலைக்கழக பாடநெறிகள், கல்விமானி பட்டம், பிரின்செட் ஆங்கில பயிற்சி நெறி இவைகளுக்காக 10 நாட்கள், இரண்டு வாரம் என இத்தகைய விடுமுறைகள் வழங்கப்படுகின்றன. பரீட்சை அனுமதி அட்டைகளைச் சமர்ப்பித்து அவைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

### இத்தா விடுமுறை

முஸ்லிம் விதவை ஆசிரியைகள் தமது முழு சேவைக்காலத்திலும் பெற்றுக் கொள்ளாது மீதமாக்கியுள்ள சுகவீன விடுமுறையை சம்பளமுள்ள இத்தா விடுமுறையாகப் பெற்றுக் கொள்ளலாம். இத்தா விடுமுறைக்காக சுகவீன விடுமுறை இல்லாத சந்தர்ப்பங்களிலும், அவை போதுமானதாக இல்லாத சந்தர்ப்பங்களிலும் இத்தா விடுமுறை அரைச் சம்பள விடுமுறையாக வழங்கப்படும். 20/89, 11/2007 இலக்கங்களைக் கொண்ட சுற்றறிகைகளில் இதற்கான விபரங்கள் உண்டு.

### ஆசிரியர் உதவியாளர் விடுமுறை

தற்போது ஆசிரியர் உதவியாளர் நியமனங்கள் வழங்கப்படுகின்றன. இவர்களுக்கு 14 நாட்கள் லீவு உரியதாகும் 7 நாட்கள் சமயோசித லீவாகவும் 7 நாட்கள் சுகவீன லீவாகவும் பெற்றுக் கொள்ளலாம். பிரசவ லீவை மற்ற ஆசிரியர்கள் பெறுவது போல் பெற்றுக் கொள்ளலாம்.

### கட்டாய விடுமுறை

கட்டாய லீவில் அனுப்பட்டார் என்று அடிக்கடி நாம் கேள்விப்படுவதுண்டு. ஒழுக்க நடவடிக்கைகளுக்காகவும், சேவை தேவைப்படாது என்பதற்காகவும் இவ்வாறு கட்டாய விடுமுறையில் அனுப்பப்படுவதுண்டு.

### தந்தைக்குரிய விடுமுறை

நிரந்தர, பயிலுனர் ஆசிரியர்கள் தமது மனைவிக்கு குழந்தை கிடைக்கும் சந்தர்ப்பங்களில் 3 நாட்கள் விசேட விடுமுறை பெற்றுக் கொள்ள உரிமை உண்டு. மூன்று மாதத்திற்குள் இதை எடுக்கலாம். திருமணச் சான்றிதழ், குழந்தையின் பிறப்புச் சான்றிதழ், பிரதிகளைச் சமர்ப்பித்து அத்தாட்சிப்படுத்திக் கொள்ள முடியும். சுற்றறிக்கை இலக்கம் 03/2006.

### பெற்றுக் கொள்ளாத விடுமுறைக்கான சலுகைகள்

2006ம் ஆண்டு 10/2006, 10/2006 (1) இலக்கச் சுற்றறிக்கைகள் மூலம், தனக்குரிய லீவை பெற்றுக் கொள்ளா விட்டால் அதற்கு நிதி ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டது.

24/2007, 24/2007 (1) இலக்கச் சுற்றறிக்கைகள் மூலம் இதற்கு வேறு விதமான ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. இது மிக பயனுள்ளதாகும். பெற்றுக் கொள்ளப்படாத அமய, வைத்திய லீவுகளை வைத்துக்கொண்டு 12 மாதங்களுக்கு மேற்படாது ஓய்வுக்கு முன் லீவு பெறலாம் அல்லது 60 வயதிற்குப் பின்னர் இந்தக் காலத்திற்கு சேவையாற்றலாம்.

5 வருடங்களுக்கு ஒரு முறை இவ்வாறு மிகுதிப்படுத்தும் லீவை வைத்துக் கொண்டு உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ 6 மாதத்திற்கு மேற்படாத லீவை அனுபவிக்கலாம். 2006 தொடக்கம் (2006 ஆண்டு கொடுப்பனவுகளை பெறாமல் இருக்கவேண்டும்) இந்த சுற்றிக்கையின் முழுச் சலுகைகளையும் பெற 2012 அல்லது 2017 ஆண்டு ஆகலாம். ஆனால் ஆசிரியர் இதை அறிந்து இருப்பது முக்கியமானதாகும்.

இவையே ஆசிரியர்கள் விடுமுறை தொடர்பாக அறிய வேண்டிய விடயங்களாகும். இவை தவிர தாமதமாக வருதல் பற்றியும், சிவப்புக்கோடு இடுவது பற்றியும் பின்வரும் விபரங்களைத் தெரிந்து கொள்வது பயனுள்ளதாக இருக்கும்.

1982-02-27 இலக்க கல்வியமைச்சின் 1981/13 இலக்கச் சுற்றறிக்கை பின்வரும் விபரங்களை கூறுகின்றது.

பாடசாலை ஆரம்பமாகி 15 நிமிடம் கடந்தவுடன் சிவப்பு கோடிட்டு வரவு இடாப்பை மூடுதல் வேண்டும். பாடசாலை ஆரம்பமாகிய பின்னர் வேலை செய்யும் மூன்று நாட்கள் தினமும் அரை மணித்தியாலத்திற்கு குறைந்த காலம் தாமதமாகிப் பாடசாலை வந்தால் அப்படி தாமதமாகி வருதல் அரைநாள் விடுமுறையாகக் கொள்ளப்படல் வேண்டும்.

பாடசாலை ஆரம்பமான பின்னர் அரைமணி நேரத்திற்கு மேற்பட்ட காலம் தாமதமாக வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அது அரை நாள் விடுமுறையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

வழக்கமாகத் தாமதமாக வரும் ஆசிரியர்கள் தொடர்பாக ஒழுக்க நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக சுயவிபரக் கோவையில் குறித்து வைப்பதற்காக அது தொடர்பாக கோட்டக்கல்வி அதிகாரி மூலம் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அறிக்கை அனுப்ப வேண்டும்.

சம்பளமற்ற விடுமுறை தொடர்பாக சம்பளத்தைக் கழிப்பதற்காக மேலதிகமாகப் பெற்றுள்ள விடுமுறை தொடர்பாக வலயக் கல்விப் பணிப்பாளருக்கு பீ 100

பத்திரத்தில் அதிபர் அறிவிக்க வேண்டும். வலயக் கல்விப் பணிப்பாளர்கள் இப்பணத்தை தாமதமின்றி கழிக்கின்றார்களா என்று அதிபர்கள் கவனித்துக் கொள்ள வேண்டும்.

மேற்சொல்லப்பட்ட 1981/13 இலக்கச் சுற்றறிக்கையே ஆசிரியர்கள் விடுமுறை தொடர்பாக தற்போது பாவிக்கப்படும் சுற்றறிக்கையாகும். இச் சுற்றறிக்கையில் உள்ள குறுகிய கால விடுமுறை, அரை நாள் விடுமுறை தொடர்பான தகவல்கள் அத்தலைப்புக்களின் கீழ் தரப்பட்டுள்ளன.

தன் குழந்தைக்குத் தாய்ப்பாலூட்டும் பொருட்டு பொதுவாக சேவை நிலையத்தை விட்டுச் செல்லும் நேரத்திற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன், சேவை நிலையத்திலிருந்து செல்ல அவர்களுக்கு அனுமதியளிக்க வேண்டும். குழந்தை பிறந்த நாள் முதல் (05) ஐந்து மாதங்கள் பூர்த்தியாகும் வரை மட்டும் இவ் அனுமதி வழங்கப்படல் வேண்டும்.

கருத்தரித்து ஐந்து மாதங்களின் பின்னர் அரை மணித்தியாலம் பிந்தி வரவும் அரை மணித்தியாலம் முந்திச் செல்லவும் விசேட சலுகை வழங்கப்படும்.

இது அரச ஊழியர்களுக்கானது. மேற் சொல்லப்பட்டுள்ள சலுகையானது ஆசிரியைகளுக்கு நாளாந்தம் உரித்தாகும் வேலை நேரம் 6 மணித்தியாலம் என்றபடியால், அவர்களுக்கு அந்தச் சலுகையை வழங்க வேண்டிய அவசியமில்லையென கல்வி, உயர்கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் சேனநாயக்க உபசேன அனுப்பியுள்ள சுற்றிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

கருத்தடை சத்திர சிகிச்சைக்காக ஆண்களுக்கு மூன்று நாட்களும் பெண்களுக்கு ஏழு நாட்களும் விசேட லீவு உரித்தாகும்.

விடுமுறை தொடர்பாக சட்டப்படியான தகவல்கள் இவையென்றாலும் சில பாடசாலை அதிபர்கள் சில பாடசாலைக் கலாசாரங்களைப் பேணி வருகின்றார்கள். 8 மணி தொடக்கம் 15 நிமிடத்திற்கொரு முறை சிவப்புக் கோடு போன்ற பல விதிமுறைகள் பாடசாலைக்குப் பாடசாலை வித்தியாசப்படுகின்றன.

விஞ்ஞான பூர்வமான, முகாமைத்துவத் தத்துவங்கள் நடைமுறைப்படுத்தப்படும் இந்த யுகத்தில் அதிபர்களும், ஆசிரியர்களும் பாடசாலையின் பொது நோக்கத்தைக் கருத்தில் கொண்டு சட்டங்களை சரியாக அறிந்து கொண்டு முரண்பாடுகள் உண்டாகாதவாறு நடந்து கொண்டால் பாடசாலைகளில் சுமுக சூழ்நிலையைப் பேண முடியும்.

சிவப்புக் கோடுகளும், விடுமுறை விண்ணப்பங்களுமே பாடசாலைகளில் பெரும் முரண்பாடுகளை உண்டாக்குகின்றன. இவைகள் சிறிய விடயங்களாக இருந்தாலும் அதிபர்களும், ஆசியர்களும் இப் பதிவுகளைச் சரியாகச் செய்யாத சந்தர்ப்பங்களில் மேற்பார்வை அதிகாரிகளிடம் பிடிபட்டால் நடவடிக்கைகளுக்கு ஆட்படுவார்கள். இது நிதி தொடர்பான விடயமாகும் என்றபடியால் விதிமுறைகளை அறிந்து அதன்படி நடப்பது சகலருக்கும் பாதுகாப்பாக இருக்கும்.

---

குழந்தைகள் எழுதுதல் படித்தல் திறன்களைக் கற்கும் போது பொதுவாகச் சில சிக்கல்கள் தோன்றலாம். அத்தகையப் பொதுச் சிக்கல்களோடு தமிழ்மொழியைப் பேசுகின்ற குழந்தைகள் பள்ளிப் பருவத்தில் சில புதிய சிக்கல்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது. இதற்குக் காரணம் தமிழ் மொழியின் இரட்டை வழக்கு நிலையாகும். மொழியின் இரண்டு வழக்குகளில், குழந்தை வீட்டுச் சூழலில் பேச்சு வழக்கை நன்றாக அறிந்திருக்கும். இலக்கிய வழக்கைப் பள்ளியில்தான் புதிதாகக் கற்கிறது. இதனால் சொற்களின் இரண்டு வழக்குகளையும் கற்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்படுகிறது. எழுத்து வழக்கில் குழந்தைகள் செய்யும் பல பிழைகள் பேச்சு வழக்கின் தாக்கத்தால்தான் என் ஆய்வுகள் நிறுவுகின்றன.

தமிழ் மொழியில் இரட்டை வழக்கத்தை தவிர ஏராளமான கிளைமொழிகளும் (Dialects) சமுதாய வழக்குகளும் (Sociolects) காணப்படுகின்றன. சமுதாயத்தில் பிற்படுத்தப்பபட்ட கல்வியறிவு இல்லாத சூழலில் வளர்ந்த குழந்தையின் பேச்சு வழக்கைக் குறுவழக்கு (Restricted code) என்றும், பள்ளிச் சூழலில் கற்றத் தரப்படும் வழக்கைப் பெறுவழக்கு (Elaborated code) என்றும் பெர்ன்ஸ்டீன் கூறுவார். இத்தகைய நிலையில், கிராமப் புறங்களில் பிற்படுத்தப்பட்ட மக்களின் குழந்தைகள் பள்ளிச் சூழலில் பெருவழக்கைக் கற்கும்போது அதிக சிக்கல்கள் தோன்றலாம். இது மட்டுமன்றி, தமிழகத்தில் பல்லாண்டு காலமாக வசித்து வரும் மொழிச் சிறுபான்மையினரது குழந்தைகளுக்கு, இரட்டை வழக்கு, குறு வழக்கோடு, வீட்டு மொழிக் குறுக்கீடுகளும் சிக்கல்களைத் தோற்றுவிக்கின்றன.

(நன்றி: 'கலாநிதி. எல். இராமமூர்த்தி 'அகவிழி')



பா. தனபாலன்,
ஆசிரிய கல்வியியளாளர்,
யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி.

விவாதம்

*பரீட்சை எழுதிவிட்டும்
பல மாணவர்கள்
அழுதவண்ணம் வெளியேறியது
இதுவே முதல் தடவை
எனப் பல பெற்றார்
வேதனையுடன் கருத்துக்
தெரிவித்தனர்.
இன்னும் பல பெற்றார்
தமது பிள்ளைகள்
சரியாகப் படிக்காததால்
தான் விடையளிக்க
முடியாமலிருந்தது
என தம் பிள்ளைகளுக்குத்
தண்டனைகளையும்
வழங்கியுள்ளார்கள்.*

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையும் சிறார்களின் உள நலனும்

ஒரு நாட்டின் கல்வியமைப்பும், காலைத்திட்டப் பிரயோகங்களும், பரீட்சைகளும் பாடசாலைச் சிறார்களின் வளமான வாழ்வுக்கு உரமூட்டுபவையாகவே அமைய வேண்டும். எம் நாட்டில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பாகப பல விமர்சனங்கள் மேற்குறிப்பிட்ட கருத்தியலுக்கு மாறாகவுள்ளன. ஒரு போட்டிப் பரீட்சையாக இது மாறிவிட்டது. இப்பரீட்சை எடுக்கும் சிறார்கள் மனத்தாக்கங்களுக்கும், மன அழுத்தங்களுக்கும் உள்ளாக்கப்படுவதால் பிள்ளைப்பராயத்தின் இன்பத்தை இழந்த நிலை பெரும்பாலும் காணப்படுவதுடன் இவர்களது உள நலன் பாதிப்படைகிறது. பெற்றார் - ஆசிரியர் - பாடசாலைகளின் அபிலாசைகளை நிறைவேற்ற இச் சிறார்கள் வதைக்கப்படும் பல நிகழ்வுகள் தொடர்பான செய்திகள் தொடர்ந்து வெளியாகி வருகின்றன.

கடந்த வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் வினாத்தாள் பகுதி I வாசித்த பத்துவயதுச்சிறார்கள் பதறித் திகைத்தனர். முன்பின் காணாத அமைப்புக்களைக் கொண்ட கடினமான 40 வினாக்களுக்கு விடையளிக்க 45 நிமிடம் போதுமானதாக இருக்கவில்லை. தொடர்ந்து ஓரளவு இலகுவான இரண்டாவது பகுதிக்கு விடை தெரிந்தும் விடை எழுத முடியாத மன அழுதத்திற்கு 1ம் பகுதி வினாக்கள் உள்ளாக்கியதை பரீட்சை மண்டபங்களில் மேற்பார்வையாளராகக் கடமையாற்றிய ஆசிரியர்கள் எடுத்துக்கூறினர். பல மாணவர் அழுதவண்ணம் பரீட்சை எழுதினர். பரீட்சை எழுதிவிட்டும் பல மாணவர்கள் அழுதவண்ணம் வெளியேறியது இதுவே முதல் தடவை எனப் பல பெற்றார் வேதனையுடன் கருத்துக் தெரிவித்தனர். இன்னும் பல பெற்றார் தமது பிள்ளைகள் சரியாகப் படிக்காததால் தான் விடையளிக்க முடியாமலிருந்தது என தம் பிள்ளைகளுக்குத் தண்டனைகளையும் வழங்கியுள்ளார்கள்.

பரீட்சை இவ்வாறு என்றால் பரீட்சைக்கு முன்னர் சிறார்களைத் தயாராக்க பாடசாலைகளும், டியூட்டரிகளும், பெற்றார்களும், பொது நிறுவனங்களும், தனியார்களும் இவர்களைப்படுத்தும் பாடு பெரும்பாடாக உள்ளது.


அதிகாலையிலேயே நித்திரையால் எழுப்பிவிடல், தொடர்ந்து பாடசாலைச் சீருடையுடன் ரீயூசன் பின் பாடசாலை, பாடசாலை முடிந்ததும் பாடசாலையிலே விசேட

வகுப்பு, பின் ரியூசன் மாலை 6 மணிக்குப்பின் பாடசாலைச் சீருடையுடன் வீட்டிற்கு வருதல். காலையிலிருந்து 12 மணித்தியாலங்களுக்கு மேல் கடினமாகப் படித்து பின் வீட்டிலும் இரவு பத்து மணிவரை பெற்றார் வழிகாட்டலில் கற்றல். இந்நிலைமையை பெரும்பாலான மத்திய தர குடும்பங்களில் யாழ்ப்பாணத்தில் காணலாம். நாளாந்தம் இச்சிறார்கள் வதைக்கப்படுவதால் அவர்களது உடல் நிலையும் மன நிலையும் பெரிதும் பாதிக்கப்படுகின்றது.

அத்தோடு பல நிறுவனங்கள், பத்திரிகைகள், வங்கிகள், தனியார் கல்வி நிலையங்கள் எனப் பல்வேறு தரப்பினர் மாதிரிப்பரீட்சைகளை நடாத்துதல், ஒரு நாள் விசேட செயலமர்வுகளை காலை 9.00 மணியிலிருந்து 3.00 மணிவரை (இடையில் தண்ணீர் குடிக்க, சிறுநீர்கழிக்கவும் விடுவதில்லை) நடாத்துதல். இறுதியில் பரீட்சையும் வைத்து புள்ளிகளையும் வழங்கும் வியாபாரமும் நகரப்பகுதிகளில் ஆரம்பமாகியுள்ளது. இதில் என்ன வேதனை எனில் கல்வித்துறையில் உள்ளவர்களும் இவ்வேலைகளைச் செய்வதுதான். இப்பரீட்சைகளில் குறைவான புள்ளிகளைப் பெறும் மாணவர்கள் மண்டபங்களில் இருந்து வெளியே வரும் போதே பெற்றார் வாசலில் பரீட்சைப் புள்ளிகளைக் கேட்டு தலையில் குட்டுவதையும், அடிப்பதையும் நேரடியாகக் கண்டேன். இவை எல்லாம் மிக மோசமான சிறுவர் இம்சைகள். இவை இச்சிறார்களின் எதிர்கால உள நலனை மிக மோசமாகப் பாதிப்படையச் செய்யும்.

குறிப்பாக மத்தியதர 60வீதமான பெற்றார்களே பிரபல பாடசாலைகளில் தமது பிள்ளைகள் கற்க வேண்டும். சமூக ரீதியில் தமது பிள்ளைகள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி எய்துவதால் தமக்கு மதிப்பு என்ற தம் அபிலாசைகளுக்காக இச்சிறார்களை வாட்டி வதைக்கின்றார்கள். இப்பெற்றார்களுடன் கலந்துரையாடுகின்ற போது அவர்களும் பல மன உழைச்சலுக்கும் அழுத்தத்திற்கும் ஆளாகி இருப்பதைக் கண்டறியக் கூடியதாகவுள்ளது. இவர்களுக்கான வழிகாட்டல் ஆலோசனைச் சேவையை பாடசாலைகளினூடாகவும் தனியாகவும் வழங்க வேண்டியுள்ளது.

ஐந்தாம் தரத்திற்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள் பெரும்பாலானோர் இரவு - பகலாக மாணவர்களுக்குக் கற்பிக்க ஆயத்தம் செய்தல் - கற்பித்தல் என கடுமையாக உழைக்கின்றார்கள். பொழுது போக்குகளை தம் குடும்ப நிகழ்வுகளில் கூட கலந்து கொள்ளாமல் தியாகம் செய்து இறுதி பரீட்சை பெறுபேறு வரும் போது அதிபர், பெற்றார், ஏனைய ஆசிரியர், அதிகாரிகள், ஊடகத்துறையிரின் பரிகாசங்களுக்கும் கண்டனங்களுக்கும் உள்ளாகி மன அழுத்தம், விரக்தி நிலையில் தமது அனுபவங்களைப் பகிர்ந்தார்கள்.



வெளிநாடுகளில் இவ்வாறான பரீட்சைகள் நடைபெறுகின்றன. ஆனால் அங்கு பரீட்சை நடப்பது என்று தெரியாமலே பரீட்சை முடிந்து விடுகின்றது. பிள்ளைகள் சாதாரணமாக மகிழ்ச்சியாக ஓரளவு இலகுவாக விடையளிக்கக் கூடிய வினாக்கள் பரீட்சிக்கப்படுகின்றன. ஆனால் எமது நாட்டு வினாத்தாள்களை ஒப்பீட்டுப் பார்க்கும் போது மிகக் கடுமையாக உள்ளன.

உதாரணமாக கடந்த 2008ம் ஆண்டு நடைபெற்ற முதலாம் வினாத்தாள் வழமைக்கு மாறாக மூன்று தெரிவு விடைகளுக்கு பதிலாக நான்கு தெரிவு விடைகளைக் கொண்டிருந்தது. இது நேரத்தை விழுங்கக்கூடியது. வினாக்களின் கட்டமைப்பு மிகக் கடினமானதாக சிறார்களின் உள வளத்தைப் பாதிக்கும் விதத்தில் விடையைத் தெரிவு செய்ய முடியாத நிலைக்கு இட்டுச் சென்றது. ஆரம்ப வினாக்கள் பெரியார்கள் கூட விடையளிக்க முடியாத மிகக் கடினமானவையாக இருந்தன. மாணவர்களின் உளவயதை விஞ்சிய பெரும்பாலான வினாக்கள் அமைந்திருந்தன.

பரீட்சை மண்டபத்தில் பல மாணவர்கள் அழுத வண்ணம், விடைத்தாள்களைக் கொடுக்காது அவற்றின் மீது தலை வைத்து படுத்திருந்த சம்பவங்கள், பரீட்சை முடிந்ததும் 3 நாட்கள் வரை அழுத மாணவர்கள் பலர். எனவே எமது கல்வியமைப்பில் பல தவறுகளும் பிரச்சினைகளும், பொருத்தமின்மைகளும் பெருமளவு காணப்படுவதை இவ்விடயம் தொடர்பாக, வெளிப்படையாகத் தெரிகின்ற அதே வேளை பத்துவயதுச் சிறார்கள் மகிழ்ச்சிகரமாகக் கற்று நல்வாழ்வு வழ வழிகாட்ட வேண்டிய கல்வியமைச்சு அவர்களுக்கு உளச்சுமைகளை, உள நோய்களை ஏற்படுத்துமளவு உள்ள நிலை தொடர்பாக யாரோடு நோவோம், யார்க் கெடுத்துரைப்போம்.


# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் புள்ளிகள்

*யாழ் கல்வி வலயம் வெளியிட்ட* **"கல்வி அபிவிருத்தியில் பயணம்"** *(2009) எனும் நூலில் இருந்து இப்பகுதி எடுக்கப்பட்டுள்ளது. இதன் மீதான மறுபார்வை, விமரிசனம் அடுத்த இதழில் இடம் பெறும்.*

*(i) தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளையும், புள்ளிகளையும் ஆராய்வதன் மூலம் யாழ். வலயப் பாடசாலைகள் ஆரம்பக்கல்வியில் அடைந்த வெற்றி பற்றிய நிலைமையினை அவதானிப்போம்.*

**யாழ். வலயத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றிய மாணவர்களையும், சித்தியடைந்த மாணவர்களையும் காட்டும் அட்டவணை - 1**

| ஆண்டு | தோற்றியோர் | சித்தியடைந்தோர் | சித்திவீதம் |
|---|---|---|---|
| 2003 | 2893 | 448 | 15.7 |
| 2004 | 3029 | 422 | 13.9 |
| 2005 | 3286 | 436 | 13.3 |
| 2006 | 2716 | 406 | 14.9 |
| 2007 | 2753 | 544 | 19.8 |
| 2008 | 2655 | 528 | 19.9 |





*அட்டவணை 01 இன்படி 2003 ஆம் ஆண்டைவிட 2004, 2005 ஆம் ஆண்டுகளில் சித்திவீதம் குறைவடைந்தபோதும் 2006, 2007, 2008 ஆம் ஆண்டுகளில் படிப்படியாக சித்திவீதம் அதிகரித்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது.*

(ii) **கோட்ட ரீதியிலான தரவுகள் (2003-2008) வரையிலான பரீட்சைச் பெறுபேறுகள்:**

**கோட்ட ரீதியாக சித்திவீதத்தைக் காட்டும் வரைபு - 02**

| ஆண்டு | யாழ்-கோட்டம் | | | நல்லூர் கோட்டம் | | | கோப்பாய் கோட்டம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தோற்றி யோர் | சித்தி யடைந்தோர் | சித்தி வீதம் | தோற்றி யோர் | சித்தி யடைந்தோர் | சித்தி வீதம் | தோற்றி யோர் | சித்தி யடைந்தோர் | சித்தி வீதம் |
| 2003 | 946 | 175 | 18.5 | 1063 | 227 | 21.4 | 852 | 46 | 5.4 |
| 2004 | 1041 | 152 | 14.6 | 1108 | 230 | 20.8 | 880 | 40 | 4.6 |
| 2005 | 1112 | 160 | 14.4 | 1205 | 223 | 18.5 | 969 | 53 | 5.5 |
| 2006 | 932 | 146 | 15.7 | 1030 | 209 | 20.3 | 754 | 51 | 6.8 |
| 2007 | 979 | 212 | 21.7 | 985 | 250 | 25.4 | 789 | 82 | 10.4 |
| 2008 | 918 | 189 | 20.6 | 906 | 260 | 28.7 | 831 | 79 | 9.6 |





வரைபு - 2 இலிருந்து ஆறு ஆண்டுகளிலும் கோப்பாய்க் கோட்டப் பெறுபேறுகள் ஏனைய இரு கோட்டங்களை விட மிகவும் குறைவாக இருப்பதை அவதானிக்க முடிகின்றது. 2008 ஆம் ஆண்டில் நல்லூர்க் கோட்டம் 28.7% பெறுபேற்றைப் பெற்றபோதும் கோப்பாய்க் கோட்டப் பெறுபேற்றின் பின்னடைவு யாழ். வலயப் பெறுபேறு 19.9% ஆக குறைவடைந்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

(iii) **ஒரு மாணவரும் சித்தியடையாத பாடசாலைகளின் எண்ணிக்கை**

**அட்டவணை - 02**

| ஆண்டு | யாழ்.கோட்டம் | நல்லூர்க் கோட்டம் | கோப்பாய்க்கோட்டம் | யாழ்.வலயம் |
|---|---|---|---|---|
| 2003 | 10 | 13 | 19 | 42 |
| 2004 | 12 | 16 | 25 | 53 |
| 2005 | 6 | 16 | 18 | 40 |
| 2006 | 9 | 18 | 23 | 50 |
| 2007 | 10 | 17 | 18 | 45 |
| 2008 | 7 | 15 | 18 | 40 |





யாழ். வலயத்தில் 40% இதற்கு மேலான பாடசாலைகளில் ஒரு மாணவரும் சித்தியடையாத நிலைமை காணப்படுகின்றது. கோப்பாய்க் கோட்டத்தில் மிகக் கூடுதலான பாடசாலைகளிலிருந்து ஒரு மாணவரும் சத்தியடையாமலிருப்பது அவதானிக்க முடிகின்றது. நல்லூர்க் கோட்டத்தில் கூடிய வீதமான மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த போதும் கூடியளவு பாடசாலைகளில் ஒரு மாணவரும் சித்தியடையாத நிலைமையையும் காண முடிகின்றது.

வட மாகாணத்தில் புலமைப் பரிசில் சித்திபெற்றோர் வீதத்தில் யாழ். வலயம் முதல் நிலை வகித்த போதும் கல்வி அபிவிருத்தி என்பது எந்தவொரு இடத்திலும் நாம் முழுமை பெறமுடியாது. அது தொடர்ந்து செல்கின்ற கருமத்தொடராகும். எனவே எமது பின்னடைவுகளை தேடி இனங்கண்டு விருத்திசெய்ய முனைய வேண்டியது அதற்குப் பொறுப்பான கல்வி அலுவர்களின் கடமையாகின்றது.

(iv) 2008 புலமைப் பரிசில் புள்ளிகள்

| புள்ளி வீச்சு | 0-20 | 21-40 | 41-60 | 61-80 | 81-100 | 101-120 | 121-140 | 141-160 | 161-180 | 181-200 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சித்தி வீதம் | 2.2 | 16.7 | 18.9 | 16.4 | 15.6 | 15.6 | 10.7 | 8.7 | 0.2 | 00 |




40 புள்ளிகளிற்கு குறைவாக 18.9% மான பிள்ளைகளும், 80 புள்ளிகளிற்கு குறைவாக 54.2% மான பிள்ளைகளும், 100 புள்ளிகளிற்கு குறைவாக 69.8% மான பிள்ளைகளும் பெற்றிருப்பது கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. அதாவது 1855 மாணவர்கள் 100 இலும் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இது ஆரோக்கியமான நிலைமை அல்ல. எனவே ஆரம்பக்கல்வி தொடர்பாக எமது பின்னடைவுகளை நிவர்த்திசெய்து மேம்பாட்டிற்காக திட்டமிட்டு பணி செய்ய வேண்டிய கட்டாய தேவை உள்ளது.



# வாசகர் பக்கம்

அகவிழியில் "வாசகர் பக்கம்" பகுதி தொடர வேண்டும். எம் போன்றவர்கள் அவ்வப் போது தோன்றும் சில கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதற்கு இது சந்தர்ப்பமாக அமையும். நாம் பெரும் கட்டுரைகள் எழுதக் கூடியவர்கள் அல்லர். ஆனால் எமது கருத்துக்களை பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்புக்கள் உருவாகும் பட்சத்தில் நாமும் எழுத்தாளர்களாக உருவாக முடியும்.

மார்ச் மாத இதழ் கிடைத்து விட்டது. இன்னும் முழுமையாக வாசிக்கவில்லை. பாலியல் வன்முறை எனும் தொற்றுநோய் படித்தேன். உண்மையில் நம்ப முடியவில்லை. இப்படியெல்லாம் நடக்குமா? ஆனால் நடக்கிறது. என்ன செய்வது?

தொடர்ந்து "நான் ஒரு பெண்" எனும் பகுதி நமது தொடர்பில் உள்ளவை. ஆசிரியர் சமூகம் கல்விச் சமூகம் குறித்து நாம் இன்றும் சிந்திக்க வேண்டும். ஏனைய பகுதிகள் இன்னும் வாசிக்கவில்லை மிகுதி பின்...

***ச.நந்தகுமார்***
கொழும்பு.

---

'முழுத்தரக்கல்வியின் சில அடிப்படைகள்' கட்டுரை சனவரி இதழில் வெளிவந்திருந்தது. இதனை கலாநிதி த.கலாமணி எழுதியிருந்தார். முக்கியமான நல்ல கட்டுரை. முழுத்தரக் கல்வியின் பிரகடனங்களுக்குச் செயல்வடிவம் வழங்கும் போது எதிர்நோக்கும் சவால்களை கட்டுரையாசிரியர் எழுதவில்லை. மாற்றங்களை தெளிவுபடுத்தும் அதே நேரம் இலங்கையில் பல பாகங்களிலும் கல்வியின் தரம் பேணப்படாமைக்கான காரணங்களை அறியாமல் "வெறும் போதித்தல்" நமக்கு நன்மை தராது. கலாமணி போன்றவர்களுக்கு அதாவது பல்கலைக்கழகம் சார்ந்தவர்களுக்கு நடைமுறை அனுபவம் அதற்கான தேடல் குறைவு.

இன்று பல்கலைக்கழகத்தில் 'கல்வியியல் படித்து பட்டம் பெறுவோர்கள் முழுத்தரக் கல்வியின் அடிப்படைகளை விளங்கி வெளியேறுபவர்களாக இல்லை. தரமான உற்பத்தி அல்லது சேவை என்பது வாடிக்கையாளர்களின் எதிர்பாப்புகளை திருப்தி செய்கின்றவையாக இல்லை. பல்கலைக்கழக மட்டத்தில் முழுத்தரக் கல்வியின் முக்கியத்துவம் உணரப்படாது இருக்கும் இக்கட்டு நிலைமைகளை கலாமணி விளக்குவராயின் மேலும் பயனுடையதாக இருக்கும்.

***க.செந்தில்குமரன***
நல்லூர்
யாழ்ப்பாணம்

---

கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டுக்கு புறம்பாக இணைப்பாடவிதான செயற்பாடுகளின் முக்கியத்துவமும் அவசியமும் இன்று பாடசாலைகளில் உணரப்பட்டுள்ளன. ஆனால் பாடசாலைகளில் பாடவிதானத்துடன் தொடர்புபட்டதாக இணைப்பாட விதானச் செயற்பாடுகள் பின்பற்றப்படுவதாக இல்லை.

கடந்த வாரங்களில் பாடசாலைகளில் "விளையாட்டுப் போட்டிகள்" நடைபெற்றன. இவை இணைப்பாடவிதான செயற்பாடுகளின் பண்புகளை உள்வாங்கிய முறைமையில் அமைவது இல்லை. ஏதோ கட்டாயத்தின் பேரில் செய்து முடிக்க வேண்டுமென்ற நிகழ்ச்சி நிரலாக நடைமுறையாக மாறிவிட்டது.

வகுப்பறை கற்றல் நடவடிக்கைகளுக்குப் புறம்பாக சமூகப் பொருத்தப்பாடுடைய பல்வகை ஆற்றல்களைக் கொண்ட சிறந்த ஆளுமை படைத்த விரிநிலை மனப்பாங்குகளை கொண்ட பிள்ளைகளை உருவாக்கும் நோக்கில் பாடசாலையில் நடைமுறைப்படுத்தும் செயல்கள் அரிதாகவே உள்ளன. அல்லது அத்தகைய பண்புசார் விருத்திக்கான செயல்கள் மேற்கொள்ளப்படுவதில்லை.

அதிபர் ஆசிரியர்களில் பெரும் பாலோனோர் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை ஓர் சுமையாகவே கருதுகின்றனர். ஆசிரியர் - மாணவர், மாணவர் - மாணவர், ஆசிரியர் - பெற்றோர் இடையிலான இடைத்தாக்கம் வலுவடைந்து செல்வதற்கான பாடசாலைக் கலாசாரம் பேணப்பட முடியாத சூழல்களே உள்ளன.

ஏன்? இது பற்றியெல்லாம் நாம் சிந்திக்கக் கூடாது? இணைப்பாடவிதான செயற்பாடுகளின் முக்கியத்துவமும் அவசியமும் பற்றி உரத்துப் பேசுவதைவிட நடைமுறையில் இவற்றுக்கான ஏற்புச் சூழல் ஏன் அமையாமல் போகிறது என்பது பற்றி சிந்திப்பது தான் அவசியம்.

***செ. காண்டீபன***
கொழும்பு

அகவிழி

**AHAVILI**
3, Torrington avenue, Colombo - 07
Tel : 011-2506272, Fax: 011-2585190
Email:- ahavili2004@yahoo.com, ahavili2004@gmail.com

## சந்தா விண்ணப்பப் படிவம்

பெயர் (முழுப் பெயர்) : ______________________

கற்பிக்கும் பாடசாலை : ______________________

பாடசாலை முகவரி : ______________________

தொலைபேசி/தொலைநகல் இல. : ______________________

மின்அஞ்சல் முகவரி : ______________________

கற்பிக்கும் பிரிவு : ஆரம்பம்/இடைநிலை/உயர்தரம்

அகவிழி அனுப்ப வேண்டிய முகவரி : ______________________

இத்துடன் ரூபா [ ] க்கான காசோலை/காசுக் கட்டளையை

இல [ ] இணைத்துள்ளேன்.

கையொப்பம் திகதி

காசோலை மூலம் பணம் செலுத்துபவர்கள் AHAVILI எனப் பெயரிட்டு அனுப்புக. காசுக் கட்டளையாயின் AHAVILI எனப் பெயரிட்டு HAVELOCK TOWN தபால் நிலையத்தில் மாற்றக் கூடியவாறு மட்டுமே அனுப்பி வைக்கவும்.

இப்படிவத்தை போட்டோ பிரதி செய்து உபயோகிக்கவும்.

## சந்தா செலுத்த சில எளிய வழிமுறைகள்;

அகவிழி சந்தா செலுத்த விரும்புவோர் மற்றும் அகவிழி வெளியீடுகளை நேரடியாகப் பெறப் பணம் செலுத்த விரும்புவோருக்கான சில எளிய வழிமுறைகள்.

அகவிழி, கொமஷல் வங்கி, வெள்ளவத்தை
நடைமுறைக் கணக்கு எண் 1100022581

Commercial வங்கியின் எந்த கிளைகளிலிருந்தும் அகவிழி கணக்கு எண்ணுக்கு சந்தா அல்லது புத்தக விலையை பணமாக வைப்பு செய்யலாம்.

வங்கி கமிஷன் இல்லை

பிற வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் VILUTHU - AHAVILI பெயருக்கு காசோலை எழுதி அகவிழி கணக்கு எண்ணைக் குறிப்பிட்டு உள்ளூர் Commercial வங்கியில் வைப்பு செய்யலாம்.

மேற்படி வழிமுறைகளில் பணம் அனுப்புவர்கள் செலுத்தப்பட்ட தொகை, தேதி, இடம், நாள் மற்றும் தேவைகளைக் குறிப்பிட்டு அகவிழி தலைமை அலுவலக முகவரிக்கு கடிதம் எழுதவேண்டுகிறோம். அல்லது மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | 50/= |
| ஆண்டு சந்தா (தபால் செலவுடன்) | : | 1000/= |

## அகவிழி விளம்பரக் கட்டணம்

| | | |
|---|---|---|
| பின் அட்டை | : | 7000/- |
| உள் அட்டை (முன்) | : | 6000/- |
| உள் அட்டை (பின்) | : | 5000/- |
| உள் பக்கம் | : | 4000/- |
| நடு இருபக்கங்கள் | : | 6500/- |

**தொடர்புகட்கு**


**Colombo**
3, Torringto Avenue, Colombo - 07.
Tel: 011-2506272

**Jaffna**
189, Vembadi Road, Jaffna.
Tel: 021-2229866

**Trincomalee**
81 A Rajavarodayam Street, Trincomalee
Tel: 026-2224941

**Batticaloa**
37, Old Rest House
Tel: 065-2222097

# சேமமடு பதிப்பகம்




| | |
|---|---|
| நூல் | : புவியியல்: சூழலியல் முகாமைத்துவம் |
| ஆசிரியர் | : எஸ். அன்ரனி நோர்பேட் |
| விலை | : 350/- |
| ISBN | : 978 - 955-1857-29-5 |

* சூழலியலுக்கு ஓர் அறிமுகம்
* வளங்களின் நிலைபேண் அபிவிருத்தி
* நகராக்க மற்றும் கைத்தொழில் சூழல் பிரச்சினைகள்
* விவசாய வளங்களும் பயன்பாட்டுப் பிரச்சினைகளும்
* மண் வளமும் பேணுகையும்
* காட்டு வளங்களின் பயன்பாடும் பேணுகையும்
* பாலைவனமாகுதலும் நிலச்சீரழிவுகளும்
* வளிமண்டலத்தின் பச்சைவீட்டு வாயுக்களும் தாக்கமும்
* வளிமண்டலத்தில் ஓசோன் சிதைவும் தாக்கங்களும்
* பூகோள வெப்பமடைதலும் கடல்மட்ட மாற்றமும்
* முருகைக் கற்பார் அகழ்வும் சூழல் பிரச்சினைகளும்
* இலங்கையில் நிலச்சரிவுகள்
* வனவிலங்குகளின் பாதுகாப்பும் முகாமைத்துவமும்
* இலங்கையின் கரையோர வலயத்தின் முகாமைத்துவம்
* இலங்கையின் ஈரநிலங்களின் முகாமைத்துவம்
* உயிரினப் பல்வகைமையும் பேணிப் பாதுகாத்தலும்
* சூழல் முகாமைத்துவம் நோக்கிய சர்வதேச மகாநாடுகள்

சேமமடு

## சேமமடு பொத்தகசாலை
## CHEMAMADU BOOK CENTRE


*UG.49,50 People's Park, Colombo -11 Sri Lanka*
*Tel: 011-2472362/ Fax: 011-2448624*
*E-Mail: chemamadu@yahoo.com*

# அகவிழி

## கிடைக்குமிடங்கள்

முரளி கொமினிகேஷன்
185, டன்பார் வீதி,
ஹற்றன்
தொ.பே.இல: 051-2222041/42/43

குமரன் ரேட் சென்டர்
18, டெய்லிபயர் கொம்பிலக்ஸ்
நுவரெலியா.
தொ.பே.இல: 052-2223416

அருணா ஸ்ரோஸ்
38, கம்பளை வீதி,
நாவலப்பிட்டி.
தொ.பே.இல: 077-4728883

நியூ கேசவன் புக்ஸ்டோல்,
56, டன்பார் வீதி,
ஹற்றன்.
தொ.பே.இல: 051-2222504
051-2222977

அபிஷா புத்தகக் கடை
137, பிரதான வீதி,
தலவாக்கல.
தொ.பே.இல: 052-2258437

அருள் ரேட் சென்டர்
19, பிரதான வீதி,
தலவாக்கல
தொ.பே.இல: 052-2258584

எம்.ஐ.எம். ஷியாட்
46, கோட்ஸ் வீதி,
மாவனெல்ல, 71500
கை.தொ.இல: 0777-065123

அகவிழி நிலையம்
81ஏ, இராஜவரோதயம் வீதி
திருகோணமலை.
தொ.பே.இல: 026-2224941

அறிவாலயம் புத்தகக்கடை
190B, புகையிரத வீதி,
வைரவப்புளியங்குளம்,
வவுனியா.
தொ.இல: 0777-222366

நூர் மொகமட் நியுஸ் ஏஜன்ஸ்
132, பிரதான வீதி,
கிண்ணியா 03
தொ.பே.இல: 026-2236266

அகவிழி நிலையம்
37, ஓல்ட் ரெஸ்ற் கவுஸ்
மட்டக்களப்பு.
தொ.பே.இல: 065-2222-2097

பி. ஜெகதீஸ்வரன்
அமரசிங்கம் வீதி, ஆரயம்பதி
மட்டக்களப்பு .
தொ.பே.இல: 077-1261718
கை.தொ.இல: 077-9028679

அன்பு ஸ்ரோஸ்
14, பிரதான வீதி,
கல்முனை
தொ.பே.இல: 067-2229540

எம். சண்முகராஜா
56, பதுலுசிறிகம
பதுளை
தொ.பே.இல: 055-2229137/072408521

புக் லாப்
172, ராமனாதன் வீதி,
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்
தொ.பே.இல: 021-2227290
கை.தொ.இல: 0777-840318

எஸ். ஏ. முஹீர்
ஆசிரிய நூலகர்
மர்க்கஸ் வீதி
மூதூர் - 05
தொ.பே. இல: 060 226 1158,
077 991 7758

கவிதா புத்தகக் கடை
வவுனியா
தொ.பே.இல: 0572223556

S. ஏகாந்தராஜன்
50/9, றாகல பஜார்,
ஹல்கிறனோயா,
தொ.பே.இல. 072-3715909

பராசக்தி ஏஜன்சீஸ்
71, பிரதான வீதி
பண்டாரவளை
தொ.பே.இல: 0572223556

M.T.M தௌசீர்
127/2, கண்டி வீதி
திகாரிய
தொ.பே.இல: 033-2292736/
0777-411543/071-4493154

பூபாலசிங்கம் புத்தகக் கடை
202, செட்டித் தெரு,
கொழும்பு - 11
தொ.பே.இல: 011-2422321

பூபாலசிங்கம் புத்தகக் கடை
309- A 2/3, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு.
தொ.பே.இல: 4515775/2504266

சேமமடு புத்தகக்கடை
UG 50, 52 பீப்பில்ஸ் பார்க்
கொழும்பு 11.
தொ.பே.இல: 011- 2472362

ஜோதி புக் சென்டர்,
கிரான் பாஜார்,
மன்னார்
தொ.பே.இல: 023- 2222052

அகவிழி நிலையம்
189, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021-2229866

அகவிழி நிலையம்
66, பேராதனை வீதி,
கண்டி.
தொ.பே.இல: 081-2224041
கை.தொ.இல: 077-9148987

A.L. அனீஸ் அலி
302/A, நெசவு நிலைய சந்தி,
பொத்துவில் - 02
தொ.பே.இல. 077-9183597/060-2635567

ஜானு புத்தக நிலையம்
ஆஸ்பத்திரி வீதி,
களுவாஞ்சிக் குடி.
தொ.பே.இல: 077-6446046